இலங்கைக் காணி அபிவிருத்திக் கூட்டுத் தாபனம்

2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையும் மற்றும் கணக்குகளும்

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

தூரநோக்கு

வெள்ளப்பெருக்குகள் நீங்கிய சுற்றாடல்நேய மாசுகளற்ற நீர்நிலைகளை உருவாக்கி அவற்றை முகாமை செய்வதில் முன்னிலை வகித்தல்.

செயற்பணி

அதிக ஊக்கமுடைய ஊழியர்படையினூடாக விஷேட செயலாற்றுகையை அடைந்து அதனூடாக

- ✓ *வடிகாலமைப்புகளை மேம்படுத்துதல், மற்றும் அவற்றை முகாமை செய்தல், வெள்ளப்பெருக்குகளை கட்டுப்படுத்துதல், வடிகாலமைப்பு தொடர்பான ஆலோசனைகளை வழங்குதல், தாழ்நிலங்களை முகாமை செய்தல்*

- ✓ *உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், காணிகளை சீராக்குவதனூடாக சுய நிலைபெறுதகுதன்மையை அடைதல், கிடைக்கக்கூடிய வளங்களையும் மற்றும் தொழில்முயற்சி வாய்ப்புகளையும் பயன்படுத்தி உச்சளவில் பொருளாதார நன்மைகளை அடைந்துகொள்ளும் பொருட்டு பொறியியல் மற்றும் முகாமைத்துவ சேவைகளை வழங்குதல்.*

உள்ளடக்கம்

	பக்க இல.
பொது முகாமையாளரின் செய்தி	01
கூட்டுத்தாபனம் பற்றிய தகவல்கள்	02
பணிப்பாளர்கள் சபை	03
சிரேஷ்ட முகாமைத்துவக் குழு	04
நிறுவனக் கட்டமைப்பு	05
இயக்கச்செயற்பாட்டு மீளாய்வு	06
நிதி சார் மீளாய்வு	74
பணிப்பாளர்களின் அறிக்கை	75
கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை	76
முழுமையான வருமானக் கூற்று	92
நிதி நிலைக் கூற்று	93
ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று	94
காசுப்பாய்ச்சல் பற்றிய கூற்று	95
முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்	96
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்	101
கூட்டுத்தாபனத்தின் முக்கியமான நிதிக் குறிப்புகள்	113

பொது முகாமையாளரின் செய்தி

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி நிகழ்ந்த அழிவுகள் காரணமாக நாட்டின் பொருளாதார முன்னேற்றம் பாதிக்கப்பட்டிருந்ததால் உண்மையில் 2019 ஆம் ஆண்டு இலங்கைக் காணி அபிவிருத்தி கூட்டுத் தாபனத்திற்கு அதிக சவால்கள் நிறைந்த ஒரு ஆண்டாக இருந்தது. மேலும், 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கு வழிவகுத்த ஸ்தீரமற்ற அரசியல் தளம்பல் நிலையானது, கூட்டுத் தாபனத்தின் பொருளதார செயற்பாடுகளிலும் மற்றும் கூட்டுத் தாபனத்தின் நம்பிக்கையிலும் பாதக விளைவுகளை ஏற்படுத்தியது. கடந்த ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்து ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சி, நிதி சார்ந்த சேவை கைத்தொழில் பல முன்னரங்குகளிலும் சவாலாக இருந்து வருவதை காணக் கூடியதாகவுள்ளது.

2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இந்த கூட்டுத் தாபனத்தின் மொத்தப் புறழ்வு 6538 மில்லியன் ரூபா அளவில் (கால்வாய் பராமரிப்பு மற்றும் விஷேட வெள்ளப்பெருக்கு தணிப்பு நிமித்தம் திறைசேரி ஒதுக்கிய 1514 மில்லியன் ரூபா நிதியும் மற்றும் வெரஸ்கங்கை கருத் திட்டத்தின் நிமித்தம் திறைசேரி ஒதுக்கிய 1272 மில்லியன் ரூபா நிதியும் அடங்கலாக) காணப்பட்டது. காணிகள் விற்பனையில் இருந்து கிடைத்த வருமானம், காணி சீராக்கல் மற்றும் அகழ்ந்து துப்புரவாக்கல் பற்றிய கருத் திட்டங்களில் இருந்து கிடைத்த வருமானம், நிர்மாணம் சார்ந்த கருத் திட்டங்களில் இருந்து கிடைத்த வருமானம் மற்றும் கடல் மணல் விற்பனையில் இருந்து கிடைத்த வருமானம் மற்றும் உர உற்பத்திக் கருத் திட்டத்தின் ஊடாக ஈட்டிய வருமானம் என்பன இந்த மொத்தப் புறழ்வில் உள்ளடங்குகின்றன.

வெரஸ்கங்கை மழை நீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டுக் கருத் திட்டம் 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. குறித்த இந்த கருத் திட்டத்தின் நிமித்தம் திருத்திய மதிப்பீட்டு ஆகுசெலவு 11,050 மில்லியன் ரூபாவாகும். குறித்த இந்த கருத் திட்டத்தின் மொத்த நீரேந்து பரப்பு சுமார் 55.5கிமீ^{2} பரப்பளவாகும். ஏற்கெனவேயுள்ள வடிகாலமைப்பு வலையமைப்பை மேம்படுத்துவதன் மூலம் வெள்ளப்பெருக்கை தணிப்பது இந்த கருத் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். குறுக்குக் கட்டுமாண நிர்மாணங்களை புனர்நிர்மாணித்து கால்வாய்களின் நீர் காவிச்செல்லும் கொள்ளளவை அதிகரித்து வெள்ளப் பெருக்குகளை தணிக்கும் முகமாக 2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கருத் திட்டப் பணிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன. இது மட்டுமன்றி ஏரிகளனிதும் குட்டைகளினதும் நீரை தேக்கி வைக்கக் கூடிய கொள்ளளவை மேலும் அதிகரிக்கும் பொருட்டு பல ஏரிகளையும் மற்றும் குட்டைகளையும் மேம்படுத்தும் பணிகள் பகுதியளவில் நிறைவு செய்யப்பட்டன.

கொழும்பு நகரத்திலும் மற்றும் கொழும்பு நகரத்தை சூழவும் உள்ள பகுதிகளில் ஏற்படும் வெள்ளப்பெருக்குகளை தணிக்கும் முகமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், இந்தக் கூட்டுத் தாபனம், தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் அமைச்சரவை ஆகியவற்றின் அங்கீகாரத்தை பெற்று, 2018 ஆம் ஆண்டு இறுதியளவில் கொலன்னாவ மழை நீர் வடிகாலமைப்பு மேம்பாட்டு கருத் திட்டத்தை ஆரம்பித்தது. கொலன்னாவப் பகுதி, களணி கங்கையின் பாதுகாப்பற்ற வெள்ளப் பெருக்குப் பகுதியில் அமைந்துள்ளது. களணி கங்கை நீர் பெருக்கெடுப்பதாலும் மற்றும் வடிகாலமைப்புப் பிரதேசத்தில் நீரை தேக்கி வைக்கவும், நீரை காவிச் செல்லவும் மற்றும் நீரை வெளியேற்றவும் தேவையான கொள்ளளவு போதாததாலும், இந்தப் பிரதேசம் மேல் நில வெள்ளப்பெருக்கு ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது. 2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில், பல மதகுகளின் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இன்று வரை மேற்கொள்ளப்பட்டுள்ள அத்தகைய பணியின் திரண்ட பெறுமானம் 226.6 மில்லியன் ரூபாவாகும்.

மேலும், இந்தக் கூட்டுத் தாபனம் வெள்ளப்பெருக்குகளை தணிக்கும் பொருட்டு புதிய கருத் திட்டங்களை பொறுப்பேற்று நிறைவேற்றுவதற்கும் தேவைப்படுத்தப்படும். சட்டவிரோத நிர்மாண செயற்பாடுகள் மற்றும் சட்டபூர்வமற்ற முறையில் காணியை மண் நிரப்பி எடுக்கும் செயற்பாடுகள் என்பன இயற்கை நீரோட்டத்திற்கு தடையாக அமைந்து, கடந்த காலப் பகுதியில் பேரழிவு வாய்ந்த வெள்ளப் பெருக்குகளுக்கும் வழிவகுத்துள்ளன. ஆகையால் அத்தகைய சட்டபூர்வமற்ற நிர்மாணங்கள் அகற்றப்படும். மேலும், அத்தகைய சட்டவிரோதமான நிர்மாணங்கள் எதிர்காலத்தில் அனுமதிக்கப்படவும் மாட்டாது.

இந்த கூட்டுத் தாபனம் தனது நெறிப்படுத்தல் வேலைச் சட்டகத்தில் காணப்படுகின்ற பொறியியல் சார்ந்த சிறப்புத் திறனையும் மற்றும் கிடைக்கக் கூடிய வளங்களையும் பயன்படுத்தி நிலைபெறுதகு மற்றும் சுற்றாடல்நேய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நடவடிக்கையில் ஒரு திறமுறைத் திட்டப் பங்காளித்துவத் தரப்பு என்ற வகையில், நாட்டின் பொருளாதார அபிவிருத்திற்கு கணிசமானளவு பங்களிப்பை செய்துள்ளது.

2020 ஆம் ஆண்டை நோக்கி எமது இந்த கூட்டுத் தாபனம் நகர்வதால், நான் எனது சக கூட்டுத் தாபன ஊழியர் சகாக்கக்களுக்கு அவர்கள் நல்கிய தொடர்ச்சியான உதவி ஒத்தாசைகள் மற்றும் ஆலோசனைகள் என்பவற்றின் நிமித்தம் பணிப்பாளர்கள் சபையின் சார்பாக எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சிரேஷ்ட முகாமைத்துவ ஊழியர்களுக்கும் மற்றும் ஏனைய சகல ஊழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை இத்தருனத்தில் உரித்தாக்க விரும்புகின்றேன். இந்த மீளாய்வு ஆண்டினை வெற்றிகரமான ஒரு ஆண்டாக ஆக்கும் பொருட்டு பல வழிகளிலும் எமக்கு உதவிய பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினது செயல்நோக்கின் கீழ் வருகின்ற ஏனைய நிறுவனங்களின் அதிகாரிகளுக்கும், எமது விநியோகத் தரப்புகளுக்கும் மற்றும் ஒப்பந்தத் தரப்புகளுக்கும், அக்கறையுடைய ஏனைய பிற சகல தரப்புகளுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பொறியியலாளர் ஸ்ரீமதி சேனாதீர
பொது முகாமையாளர்
திகதி: 2020.10.03.

கூட்டுத் தாபனம் பற்றிய தகவல்கள்

சட்ட அந்தஸ்து

இலங்கைக் காணி அபிவிருத்திக் கூட்டுத் தாபனம் இதற்கு முன்னர் கொழும்பு மாவட்ட (தாழ்நிலப் பிரதேசங்கள்) காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்தி சபை என அழைக்கப்பட்டது. அதன் பின்னர் 1968 இன் 15 ஆம் இலக்கப் பாராளுமன்ற சட்டத்தின் மூலம் கூட்டிணைக்கப்பட்டது. இந்தக் கூட்டுத் தாபனத்தின் குறிக்கோள்கள் 1976 இன் 27 ஆம் இலக்க திருத்தல் சட்டத்தின் மூலமாக விஸ்தரிக்கப்பட்டன. 1982 இன் 52 ஆம் இலக்க திருத்தல் சட்டத்தின் பிரகாரம் இந்த சபையின் பெயர் இலங்கைக் காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத் தாபனம் என மாறியுள்ளது. இதன் அதிகாரப் பிரிவு, குறித்த சட்டத்தினால் முழு நாடும் உள்ளடங்கும் வகையில் வியாபிக்கப்பட்டது. சட்டத்திற்கு முரணாக காணிகளை மண்ணிரப்பியெடுக்கும் மற்றும் நீர் நிலைகளை மாசுபடுத்தும் செயற்பாடுகளுக்கு எதிராக சட்டமுறையான நடவடிக்கையை எடுக்கக்கூடியவாறு இந்தக் கூட்டுத் தாபனத்திற்கு அதிகாரத் தத்துவங்களை உரித்தளித்து இந்த சட்டம் மேலும் 2006 இன் 35 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டது. இதனையடுத்து, இந்தக் கூட்டுத் தாபனம் 2019 இன் 11 ஆம் இலக்கத் திருத்தல் சட்டத்தின் மூலம் மேலும் இலங்கைக் காணி அபிவிருத்தி கூட்டுத் தாபனம் என மீண்டும் பெயர் மாற்றப்பட்டது.

தலைமை அலுவலகம்
இலக்கம் 3, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை
வெலிகட, ராஜகிரிய.
தொ.பே. இலக்கம்: 2867369
மின்னஞ்சல்: mail@sllrdc.lk
இணையத்தள முகவரி: www.landdevelopment.lk

பிராந்திய அலுவலகங்கள்

- கொழும்பு - வடக்கு
  பிராந்திய பொறியியலாளர் அலுவலகம்
  அவிஸ்ஸாவெல வீதி
  ஒறுகொடவத்தை
  வெல்லம்பிட்டிய
  தொ.பே. இலக்கம்: 2532600

- கொழும்பு - கிழக்கு
  பிராந்திய பொறியியலாளர் அலுவலகம்
  இலக்கம் 28/10A கிரிமண்டல மாவத்தை
  நாவல
  ராஜகிரிய
  தொ.பே. இலக்கம்: 2863205

- கொழும்பு - தெற்கு
  பிராந்திய பொறியியலாளர் அலுவலகம்
  இலக்கம்: 19 ஸ்டாபோர்ட் வீதி
  கொழும்பு 06
  தொ.பே. இலக்கம்: 2589862

- முத்துராஜவெல
  பிராந்திய பொறியியலாளர் அலுவலகம்
  இலக்கம் 123, கெரவலப்பிட்டிய
  ஹந்தல, வத்தளை

துணை நிறுவனங்கள்

- வ/ப காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்தி கம்பனி (REDECO)
  இலக்கம் 28/10A, கிரிமண்டல மாவத்தை, நாவல,
  ராஜகிரிய
  தொ.பே. இலக்கம்: 2876608
  மின்னஞ்சல்: lrdcltd1@gmail.com

- L.R.D.C சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட்
  இலக்கம் 28/10, கிரிமண்டல மாவத்தை, நாவல,
  ராஜகிரிய
  தொ.பே. இலக்கம்: 2861948
  மின்னஞ்சல்: info@lrdcservices.com

கணக்காய்வாளர்கள்
கணக்காய்வாளர் அதிபதி
தேசிய கணக்காய்வு அலுவலகம்
இலக்கம் 306/72, பொல்துவ வீதி
பத்தரமுல்ல
தொ.பே. இலக்கம்: 3193130

வங்கியாளர்கள்
இலங்கை வங்கி
மக்கள் வங்கி

சட்ட ஆலோசகர்
சட்டமா அதிபர்
சட்டமா அதிபரின் திணைக்களம்
புதுக்கடை, கொழும்பு 12.
தொ.பே. இலக்கம்: 3193130


பணிப்பாளர்கள் சபை உறுப்பினர்கள் பற்றிய விபரம்

பெயர்	பதவி	காலம்
மேஜர் ஜெனரால் (ஓய்வுபெற்ற) எம்.ஆர்.டப்ளியூ. த சொய்ஷா யூபிஎஸ் பிஎஸ்சி எம்எஸ்சி (பாதுகாப்பு)	தலைவர் இலங்கைக் காணி அபிவிருத்தி கூட்டுத் தாபனம்	2019.12.06 ஆம் திகதி முதல்
திரு ரொஷான் குணவர்த்தன	தலைவர் இலங்கைக் காணி அபிவிருத்தி கூட்டுத் தாபனம்	2018.12.31 - 2019.11.21
திரு பி.ஏ.கே. குணவர்த்தன	உப தலைவர் இலங்கைக் காணி அபிவிருத்தி கூட்டுத் தாபனம்	2018.12.31 - 2019.12.01
திருமதி ஜே.சி. வெலிகமகே	திறைசேரி பிரதிநிதி மேலதிகப் பணிப்பாளர் நாயகம் அரச நிதித் திணைக்களம் பொதுத் திறைசேரி	2018.05.03 - 2020.01.12
கலாநிதி ஜகத் முணசிங்க (முன்னாள் சபை உத்தியோகத்தர்)	பணிப்பாளர் பணிப்பாளர் நாயகம் தேசிய பௌதீகத் திட்டமிடல் திணைக்களம்	2016.03.30 - 2020.01.16
திரு எஸ். மோகனராஜா	பணிப்பாளர் பணிப்பாளர் நாயகம் நீர்ப்பாசனத் திணைக்களம்	2017.11.02 - 2020.05.15
பொறியியலாளர் டீ. சஜ்ஜன த சில்வா	பணிப்பாளர் பதில் பணிப்பாளர் நாயகம் புவிச்சரிதவியல் அளவை அகழ்வுப் பணியகம்	2019.01.30 - 2019.12.02
திரு ஜி.எம்.டீ. போகம்மன	பணிப்பாளர் பொறியியலாளர்	2018.08.16 - 2019.01.07
திரு ஆர்.பீ.எம். குணவர்த்தன	பணிப்பாளர் பொறியியலாளர்	2019.01.30 - 2019.12.02

சிரேஷ்ட முகாமைத்துவக் குழு

01.	பொறியியலாளர் (திருமதி) எம்.ஏ.எஸ்.எம்.கே. சேனாதீர	-	பொது முகாமையாளர்
02.	பொறியியலாளர் டப்ளியூ.ஆர்.சி. பெர்னாந்து	-	மேலதிகப் பொது முகாமையாளர் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு)
03.	பொறியியலாளர் சி.பீ. அமரசிங்க	-	மேலதிகப் பொது முகாமையாளர் (செயற்படுத்துகை)
04.	திரு ரீ.பீ. சந்திரசேக்கர	-	பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளங்கள் அபிவிருத்தி)
05.	பொறியியலாளர் டப்ளியூ.எச். கீர்த்திரத்ன	-	பிரதிப் பொது முகாமையாளர் (ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்பு)
06.	திரு ஜே.ஏ.பி.கே. ஜயசிங்க	-	பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)
07.	பொறியியலாளர் எஸ்.பி. முத்துமால	-	பிரதிப் பொது முகாமையாளர் (வடிகாலமைப்பு மற்றும் காணி சீராக்கல்)
08.	பொறியியலாளர் ஆர்.எம்.என்.டீ. ரத்நாயக்க	-	பிரதிப் பொது முகாமையாளர் (விஷேட கருத் திட்டம்)
09.	பொறியியலாளர் வை.பி.சி. த சில்வா	-	பிரதிப் பொது முகாமையாளர் (நிர்மாணம்)
10.	கலாநிதி என்.எஸ். விஜேரத்ன	-	பிரதிப் பொது முகாமையாளர் (சதுப்புநில முகாமைத்துவம்)
11.	கலாநிதி எஸ்.டீ. தர்மரத்ன	-	பிரதிப் பொது முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் களஞ்சியங்கள்)
12.	பொறியியலாளர் ஆர்.எம்.எஸ்.சி. ரத்நாயக்க	-	பிரதிப் பொது முகாமையாளர் (பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள்)
13.	பொறியியலாளர் ஓ.வி.டப்ளியூ.ஆர். ஹேமந்த குமாரசிறி	-	பிரதிப் பொது முகாமையாளர் (திட்டமிடல் மற்றும் வணிக அபிவிருத்தி)
14.	திரு ஹேமந்த கமலசிறி	-	பிரதிப் பொது முகாமையாளர் (காணிகள் மற்றும் சந்தைப்படுத்தல்)
15.	திரு ஏ.எல்.ஏ.எஸ்.கே. அம்பேகொட	-	பிரதிப் பொது முகாமையாளர் (உள்ளக கணக்காய்வு) - பதில்
16.	திருமதி எச்.கே.கே.டப்ளியூ. ஏக்கநாயக்க	-	பிரதான சட்ட உத்தியோகத்தர்
17.	பொறியியலாளர் (திருமதி) பி.எம்.பி. விஜேரத்ன	-	உதவிப் பொது முகாமையாளர் (ஆ.அ.)
18.	பொறியியலாளர் (திருமதி) எஸ்.என். கமகே	-	உதவிப் பொது முகாமையாளர் (ஆ.அ.)
19.	திருமதி ஏ.பீ.என். சஹபந்து	-	உதவிப் பொது முகாமையாளர் (நிதி)
20.	பொறியியலாளர் எஸ்.ஆர்.எம். பிரசாத்	-	உதவிப் பொது முகாமையாளர் (பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள்)
21.	பொறியியலாளர் கே.எம்.என்.கே. ரணசிங்க	-	உதவிப் பொது முகாமையாளர் (நிர்மாணம்)
22.	பொறியியலாளர் எம்.எம்.எம். மவுபர்	-	உதவிப் பொது முகாமையாளர் (விஷேட கருத் திட்டங்கள்)
23.	பொறியியலாளர் எஸ்.எம்.பி.டீ. சிறிவர்த்தன	-	பதில் உதவிப் பொது முகாமையாளர் (வடிகாலமைப்பு மற்றும் காணிகள் சீராக்கல்)
24.	பொறியியலாளர் (திருமதி) என்.ஏ.ஏ.எஸ்.வி. நிஸ்ஸங்க	-	உதவிப் பொது முகாமையாளர் (சிவில்)
25.	பொறியியலாளர் என்.பி.எஸ். த சில்வா	-	உதவிப் பொது முகாமையாளர் (ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்பு)
26.	திரு எல். த்ரிமவிதன	-	உதவிப் பொது முகாமையாளர் (மனித வளங்கள் அபிவிருத்தி)
27.	பொறியியலாளர் (திருமதி) பி.பி. விணீத்தா	-	உதவிப் பொது முகாமையாளர் (ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்பு)

நிறுவன கட்டமைப்பு


SECRETARY TO THE BOARD
BOARD OF DIRECTORS
CHAIRMAN
GENERAL MANAGER
ADDITIONAL GENERAL MANAGER (Planning & Design)
ADDITIONAL GENERAL MANAGER (Implementation)
Senior Management Level
Middle Management level
Junior Management level
Associate Officer level
Management Assistant - Technical
Management Assistant - Non-technical
Primary level Skilled/ semi skilled/ un skilled

இயக்க சார் செயற்பாடுகள் பற்றிய மீளாய்வு

வடிகாலமைப்பு மற்றும் காணி சீராக்கல் பிரிவு

திறைசேரி நிதியிட்டுள்ள கருத் திட்டங்கள்

1. கால்வாய்கள், ஏரிகள் மற்றும் நடைபாதைகள் என்பவற்றின் பராமரிப்புப் பணிகள்

2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில், திறைசேரி 409 மில்லியன் ரூபா நிதியை கால்வாய்கள், ஏரிகள் மற்றும் நடைபாதைகள் என்பவற்றின் பராமரிப்பு பணிகளின் நிமித்தம் ஒதுக்கியது. கொழும்பு நகரத்திலும் மற்றும் அதன் சுற்றுப் புறங்களிலும் வடிகாலமைப்பு பணிகளையும் மற்றும் வெள்ளப்பெருக்குகள் தணிப்பு சார்ந்த செயற்பாடுகளையும் மேற்கொள்ளும் பொருட்டு திறைசேரி மேலும் 237 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியது.

கால்வாய்களின் பராமரிப்புப் பணிகள்:

இ.கா.அ.கூ. கொழும்பு மாநகர பெரும்பாகத்திலுள்ள 44 கி.மீ. நீளமான பிரதான கால்வாய்களையும் மற்றும் 52 கி.மீ. நீளமான இரண்டாம்நிலைத் துணைக் கால்வாய்களையும் பராமரித்து வருகின்றது.

பின்வருவம் ஏரிகளும் மற்றும் நடைபாதைகளும் இ.கா.அ.கூ. தாபனத்தின் மூலம் பராமரிக்கப்படுகின்றன.

❖ **ஏரிகள்**


- தியவன்னா (தியத்த உயன ஏரி)
- பாராளுமன்ற ஏரி
- பெல்லன்வில ஏரி
- தலவத்துகொட ஏரி
- ரம்பலாவத்த நீர் தேங்கு குட்டை

❖ **நடைபாதைகள்**

- தியத்த உயன
- ஜப்பான் நட்புறவு வீதி
- கிம்புலாவெல
- மாலம்பே
- பெல்லன்வில
- கட்டுபெத்த
- நுகோகொட சதுப்புநில பூங்கா
- பொரலஸ்கமுவ "கெலிமடல"

❖ **வடிகாலமைப்பு மேம்பாட்டுப் பணிகள்**:

- கொழும்பு நகர மற்றும் அதன் சுற்றுப்புற கால்வாய் கரைப் பகுதி மேம்பாடு
- பேலியகொட நீரிறைக்கும் நிலையத்தின் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டு பணிகள்
- நீர் தேங்கு குட்டைகளின் நிர்மாணம்
- வண்டல் மண் படிந்துள்ள கால்வாய்கள் மற்றும் ஏரிகள் என்பவற்றை அகழ்ந்து துரப்புவாக்கும் பணிகள்
- தலைமை வடிகாலமைப்புத் திட்டத்தின் செயற்படுத்துகை



1.1. கொழும்பு நகரத்திலும் மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளிலும் காணப்படுகின்ற பிரதான கால்வாய்கள், சிறு கால்வாய்கள் மற்றும் இரண்டாம்நிலைத் துணைக் கால்வாய்கள் என்பவற்றின் பராமரிப்புப் பணிகள்

உள்ளூர் பகுதிகளில் ஏற்படும் வெள்ளப்பெருக்குகளைத் தடுப்பது கொழும்பிலும் மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளிலும் காணப்படும் கால்வாய் வலமையமைப்பை பராமரிப்பதற்கான முக்கிய நோக்கமாகும். உள்ளூர் ரீதியாக ஏற்படும் வெள்ளப்பெருக்குகளை தடுக்கும் பொருட்டு இந்தப் பணி கொழும்பு மாநகர சபையினதும் மற்றும் ஏனைய அக்கறையுடைய தரப்புகளினதும் ஈடுபாட்டுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கால்வாய்களைப் பராமரிக்கும் பணியில் சம்பந்தப்படுவன,

- மேற்பரப்புத் துப்புரவாக்கல்
- கால்வாய் கரைப்பகுதிப் பராமரிப்புப் பணி மற்றும் காடுகள் துப்புரவாக்கல்
- கால்வாய்களை அகழ்ந்து துப்புரவாக்கும் பணி மற்றும் அகழ்ந்தெடுக்கப்படும் பொருட்களை வேறு இடங்களுக்கு கொண்டு சென்று குவித்தல்
- கேபியன் பெட்டிகளைப் பயன்படுத்தி கால்வாய் கரைப்பகுதிகளைப் பாதுகாத்தல்
- பிடி குழிகளைத் துப்புரவாக்கல் மற்றும் பக்க வடிகாலமைப்புகள் முதலியவற்றைத் துப்புரவு செய்தல்

ஆள் ரீதியாக சுத்தம் செய்வது தவிர, கால்வாய் கரைப் பகுதிகளையும் மற்றும் சூழவுள்ள பிரதேசங்களையும் அகழ்ந்து சுத்தம் செய்யும் பொருட்டு, இந்தக் கூட்டுத் தாபனம் அகழ்ந்து துப்புவராக்கும் இயந்திரங்கள், வெட்டியெடுக்கும் இயந்திரங்கள், பெbக்கோ லோடர்கள், ட்ரக்டெர்கள், ட்ரக் வண்டிகள் போன்ற இயந்திர சாதனங்களை ஈடுபடுத்துகின்றது.

இயக்க சார் செயற்பாட்டு நோக்கங்களின் நிமித்தம், இ.கா.அ.கூ. 03 பிராந்திய அலுவலகங்களை நிருவகித்து வருகின்றது. இந்த அலுவலகங்கள் ஒறுகொடவத்தையிலும் (கொழும்பு வடக்கு) மற்றும் நாவல கிரிமண்டல மாவத்தையிலும் (கொழும்பு கிழக்கு) மற்றும் கிருளப்பணவிலும் (கொழும்பு தெற்கு) அமைந்துள்ளன.

1.1. a கொழும்பு வடக்கு



மகவத்த கால்வாய்



செபஸ்தியன் கிழக்கு ஏரி



செபஸ்தியன் தெற்கு ஏரி



உத்தரானந்த மாவத்தை

- **முக்கிய பிரச்சினை விடயங்கள்**

கால்வாய்களுக்கு அருகில் வசிக்கின்ற மக்கள் ஏனைய பகுதிகளில் வசிக்கும் மக்களை விடவும் அதிகளவான மக்கள் கொழும்பு வட பிராந்தியங்களில் வசிக்கின்றனர். கால்வாய்களுக்கு அருகில் வசிக்கின்ற மக்கள் கல்வி மட்டத்தில் அவ்வளவு சிறப்பானவர்கள் அல்ல. ஆகையால் கால்வாய்களின் அழகியல் பெறுமானத்தை பற்றிய அறிவு அவர்களிடம் குறைவாக காணப்படுகின்றது. திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கு பொறுப்புடைய உள்ளூராட்சி மன்றங்கள் அந்த இடங்களில் இருந்து குப்பை கூழங்களை சேகரித்து அகற்றுவதற்கு சரியான ஒரு திட்டத்தை செயற்படுத்தவில்லை.

ஆகையால், அந்த மக்கள் திண்மக் கழிவுகளை வழமையாக காவிச்செல்லும் கால்வாய்களில் குவிக்கின்றனர். இந்த மக்கள் கழிவுநீர் மார்க்கங்களை கால்வாய்களுடன் கலக்கும் வகையில் இணைத்து விடுகின்றனர். கால்வாய்களில் காணப்படும் திண்மக் கழிவுகளை சேகரிப்பது குறித்த பராமரிப்பு பணியில் வரும் பாரிய ஒரு செயற்பாடாகும். நீரில் சேரும் கழிவுகளையும் மற்றும் குப்பை கூழங்களையும் சேகரித்து அகற்றுவது கடினமானது மட்டுமன்றி பணம் வீணாகும் விடயமுமாகும். இதனால் நீர் நிலைகளுக்கும் மற்றும் அவற்றின் பல்லினத்துவத்திற்கும் பாதிப்பு ஏற்படுகின்றது.



கால்வாய்களுக்கு அருகில் வசிக்கும் அயலவர்கள் கால்வாய்களினுள் குவிக்கும் திண்மக் கழிவுகளை சேகரித்தல்



கழிவு நீர்களை கால்வாய்களினுள் வெளியிடுதல்

1.1.b கொழும்பு கிழக்கு



ஹீன்எல கால்வாய்



கோட்டே கால்வாய்

1.1.c கொழும்பு தெற்கு



வெல்லவத்தைக் கால்வாய்



தெஹிவளைக் கால்வாய்

2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில், இ.கா.அ.கூ. கொழும்பு நகரக் கால்வாய் வலையமைப்பின் பராமரிப்பு பணியை கவனித்துள்ளது. இந்தக் கூட்டுத் தாபனம் மேற்கொண்டிருந்த பணிகளின் மொத்த செலவு 259.45 மில்லியன் ரூபாவாகும்.

1.2 ஹமில்டன் கால்வாயின் பராமரிப்புப் பணி

2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில், இ.கா.அ.கூ. தேவையான போது, வழமையான கால்வாய் பராமரிப்புப் பணிகளையும் மற்றும் களணி கங்கை முடிவடையும் இடத்தில் இருந்து நீர்கொழும்பு களப்பு வரையும் (14.3 கி.மீ. நீளம்) மற்றும் மகா ஒயா முடிவடையும் இடம் வரையும் (7.7 கி.மீ. நீளம்) ஹமில்டன் கால்வாய்க்கான கால்வாய் கரைப்பகுதி பராமரிப்புப் பணிகளையும் கவனித்து நிறைவேற்றியுள்ளது.

கால்வாய்களை பராமரிக்கும் பணியில் சம்பந்தப்படுவன,

- மேற்பரப்புத் துப்புரவாக்கல்
- கால்வாய் கரைப் பகுதிப் பராமரிப்பு
- கால்வாய்களை அகழ்ந்து துப்புரவாக்கும் பணி மற்றும் அகழ்ந்தெடுக்கப்படும் பொருட்களை வேறு இடங்களுக்கு கொண்டு சென்று குவித்தல்
- கேபியன் பெட்டிகளை பயன்படுத்தி கால்வாய் கரைப் பகுதிகளைப் பாதுகாத்தல்



எனவே, 2019 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள பராமரிப்புப் பணிகளின் மொத்த செலவு 21.08 மில்லியன் ரூபாவாகும்.

1.3 ஏரிகளை / நீர்க் குட்டைகளை சூழவுள்ள பாராளுமன்ற நீரேந்து பரப்பும் மற்றும் அதனுடன் இணைந்த நீரேந்து பரப்புகளும்

2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் எதிர்பாராத வகையில் ஏற்பட்டு பாராளுமன்றத்தையும் கூட நீரில் மூழ்கடித்த வெள்ளப்பெருக்குகளுக்கான ஒரு தீர்வாக, இ.கா.அ.கூ. பல வடிகாலமைப்பு திட்டங்களை செயற்படுத்தியது. வெள்ளப்பெருக்குகள் ஏற்படும் காலப் பகுதியில், பாராளுமன்றத்தையும் மற்றும் அதனை சூழவுள்ள வோர்ட்டெர்ஸ் எஜ், தியவன்னாவ தோட்டம், ரம்பலாவத்தை, தலவத்துகொட போன்ற பகுதிகளையும் நீரிழ் மூழ்குவதிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு, திறைசேரியினது நிதி ஏற்பாடுகளின் கீழ், இந்தக் கால்வாய் முறைமைகள் வழமையாக பராமரிக்கப்படுகின்றன.

கால்வாய்களைப் பராமரிக்கும் பணியில் சம்பந்தப்படுவன,

- நீர் வழங்கு கால்வாய் முறைமையைப் பராமரித்தல்
- நீர் நிலைகளின் மேற்பரப்புகளைத் துப்புரவாக்கல்
- கால்வாய் கரைப் பகுதிகள், ஒதுக்கங்கள், எல்லை குறிக்கப்பட்டுள்ள நடைபாதைகள் மற்றும் பொழுதுபோக்கு பகுதிகள் என்பவற்றின் பராமரிப்புப் பணிகள்
- ஏரிகளை / நீர்க் குட்டைகளை அகழ்ந்து துப்புரவாக்குவதன் மூலம், வெள்ளப்பெருக்கு நீரை தேக்கி வைக்கக் கூடிய கொள்ளளவை அதிகரித்தல்
- ஏரிகளின் / நீர்க் குட்டைகளின் மீதான அத்துமீறல் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துதல்
- கிம்புலாவெலவில் காணப்படும் நிலங்களை விவசாய நிலங்களாக மாற்றுதல்

1.3. a வோர்ட்டெர்ஸ் எஜ் - தியவன்னா ஏரி



1.3.b கிம்புலாவெல



எல்லைகள் குறிக்கப்பட்டுள்ள நடைபாதைகளின் மூலமாக ஏரிகளின் / நீர்க் குட்டைகளின் மீது நிகழும் அத்துமீறல் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துதல்

பின்வருவன இந்தக் கருத் திட்டத்தின் நன்மைகளில் உள்ளடங்குகின்றன.

- ஏற்கெனவேயிருக்கின்ற நடைபாதைகளில் இருந்து எழுகின்ற சட்டவிரோதமான அத்துமீறல் செயற்பாடுகள் தடுக்கப்படுதல்
- திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கு வசதிகள் ஏற்படுதல்
- நீர் நிலைகளினது நீரின் தரம் மேம்படுதல்

குறிப்பாக பாராளுமன்ற மேல் நீரேந்து பரப்பினுள்ளும் மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளிலும் வசிக்கின்ற மக்கள் நன்மை அடைந்துள்ளனர். பொதுவாக ஒட்டுமொத்த கொழும்பு நகரப் பிரதேசமும் வெள்ளப்பெருக்கு பாதுகாப்பினால் நன்மை அடைந்துள்ளது.

பாராளுமன்றத்தை சூழவுள்ள பகுதிகளிலும் மற்றும் பாராளுமன்றத்துடன் இணைந்த நீரேந்து பரப்புகளிலும் காணப்படும் ஏரிகளின் / நீர்க் குட்டைகளின் பராமரிப்புப் பணிகளின் நிமித்தம், 2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மொத்தம் 43.63 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது.

1.4 பெல்லன்வில பகுதி சூரிய சக்தி ஒளி முறைமை அடங்கலாக ஏரிகள் / நீர்க் குட்டைகள், நடைபாதைகள் மற்றும் வாகனம் நிறுத்தும் பகுதிகள் என்பவற்றின் பராமரிப்புப் பணிகள்

கொழும்பு நகரத்தின் தெற்குப் பகுதியை அண்மித்துள்ள, துரிதமாக அபிவிருத்தியடைந்த இயற்கை ஈர நிலங்களைக் கொண்டுள்ள மிக முக்கியமான பகுதிகளில் பெல்லன்விலவும் ஒரு பகுதியாகும். இந்தப் பகுதி மழை பெய்யும் காலங்களில் அடிக்கடி நீரில் மூழ்கடிக்கப்படுகின்றது. இந்தப் பகுதியின் சமூக கலாசார பின்னணி விழுமியத்தை மேம்படுத்த உதவும் விவசாய நிலங்கள் அடங்கிய ஏரி மற்றும் கால்வாய் முறைமையை உருவாக்கல் போன்ற நீண்டகால வெள்ளப்பெருக்குத் தணிப்பு பணி நடவடிக்கை, வெரஸ்கங்கை மழை நீர் அபிவிருத்தி கருத் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டது.

நீர் தேங்கி நிற்கும் பகுதிகளுக்கான எல்லைகள் குறித்தல் நடவடிக்கையாக, பெல்லன்வில நடைபாதைகளும் மற்றும் துவிச்சக்கர வண்டி ஓடுபாதையும் வடிகாலமைப்பு செயற்படுத்துகையால் அபிவிருத்தி செய்யப்பட்டன. நடைபாதையினும் மற்றும் துவிச்சக்கர வண்டி ஓடுபாதையினதும் முக்கியமான நோக்கம் மேலும் அத்துமீறல் செயற்பாடுகளைத் தடுப்பதாக இருந்துள்ளது. இந்த முக்கிய நோக்கம் தவிர, பின்வரும் பக்க நன்மைகளும் பொது மக்களுக்கு கிடைக்கின்றன.

கால்வாய்களைப் பராமரிக்கும் பணியில் சம்பந்தப்படுவன,

- நடைபாதைகளினதும் மற்றும் துவிச்சக்கர வண்டி ஓடுபாதையினதும் பராமரிப்பு
- நீர் நிலைகளின் மேற்பரப்பு துப்புரவாக்கல்
- சூழவுள்ள பகுதிகயில் இருந்து ஒரு பசுமை சுற்றாடல் காட்சியை உருவாக்குவதற்கு டேர்பின் பகுதியை பராமரித்தல்
- மேல்நிலை பெல்லன்வில பறவைகள் சரணாலயத்திற்கு உருவாக்கப்பட்டுளளதும் மற்றும் உருவாக்கப்படுகின்றதுமான வசதிகளைப் பராமரித்தல்
- பொழுதுபோக்கு சார்ந்த வசதிகளை உருவாக்கி அவற்றை பேணிப் பராமரித்தல்

நிர்மாணிக்க கூடிய இந்தப் பகுதியின் வருடாந்த பராமரிப்புப் பணிகள் இ.கா.அ.கூ. உருவாக்கிய பசுமை நகரத்தின் நிலைபெறுதகுதன்மைக்கு மிகவும் இன்றியமையாதவையாகும்.



பின்வருவன இந்தக் கருத் திட்டத்தின் நன்மைகளில் உள்ளடங்குகின்றன.

- ஏற்கெனவேயிருக்கின்ற நடைபாதைகளில் இருந்து எழுகின்ற சட்டவிரோதமான அத்துமீறல் செயற்பாடுகள் தடுக்கப்படுதல்
- நீர் நிலைகள், வாகனம் நிறுத்தும் பகுதிகள் மற்றும் நடைபாதைகள் என்பன சுத்தம் செய்யப்படுவதால் மக்களின் சுகாதார நிலை மேம்படுதல் மற்றும் அந்தப் பகுதியை சுற்றி கிடைக்கக் கூடிய பயிற்சி வசதிகளுக்கு மக்கள் உந்தப்படுதல்
- நீர் நிலைகளினது நீரின் தரம் மேம்படுதல்
- வெள்ளப்பெருக்குகள் நிகழும் காலப் பகுதிகளில் வீதியில் ஏற்படும் மண்ணரிப்பு தடுக்கப்படுதல்
- சூரிய சக்தி ஒளி முறைமை பயன்படுத்தப்படுவதால் செலவுகள் குறைதல்

எனவே, குறித்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள பராமரிப்புப் பணிகளின் மொத்த செலவு 39.03 மில்லியன் ரூபாவாகும்.

1.4.a ஏரிகளினதும் மற்றும் நீர் நிலைகளினதும் பராமரிப்புப் பணிகள்



1.4. b நடைபாதை மற்றும் நகர நிலக்காட்சிப்படுத்தல் வேலைகள்



1.5 சூரிய சக்தி ஒளி முறைமை அடங்கலாக நடைபாதைகளையும் மற்றும் வாகனம் நிறுத்தும் பகுதிகளையும் பராமரித்தல்

வணிக தலை நகரத்தையும் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளையும் பசுமையான, தூய்மையான மற்றும் மக்கள்நேயமான ஒரு நகரமாக அபிவிருத்தி செய்யும் பொருட்டு பல கருத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன. தியத்த உயன பூங்கா, நாவல சதுப்புநிலப் பூங்கா, ஜப்பான் இலங்கை நட்புறவு வீதி அபிவிருத்தி, ரம்பலாவத்தை ஏரி மற்றும் கிம்புலாவெலப் பிரதேசம் போன்றன அவற்றில் சிலவாகும்.

உருவாகும் நீர் அலைகளில் இருந்து அண்மித்த பகுதி வீதிகளையும் மற்றும் ஏனைய முக்கியமான இடங்களையும் மண்ணரிப்பில் இருந்து பாதுகாக்கும் பொருட்டு ஜப்பான் நட்புறவு வீதி, வோர்ட்டெர்ஸ் எஜ், கிம்புலாவெல மற்றும் சந்திரிக்கா குமாரதுங்க மாவத்தை முதலிய நீர் தேங்கு பிரதேசங்களுக்கு, உருவாக்கப்பட்டுள்ள நீர் தேங்கு குட்டைகள், சுற்றாடல்நேயமாக டேர்பின் செய்யப்பட்டுள்ள இரண்டாம்நிலைத் துணைக் கால்வாய் கரைப் பகுதி வடிவமைப்புகள் என்பன இந்தக் கருத் திட்டங்களின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பூங்காக்களை பராமரிக்கும் பணிகள் இ.கா.அ.கூ. தாபனத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளன. அவையாவன பின்வருமாறு:

- நீர் நிலைகளை சுத்தம் செய்தல் மற்றும் பராமரித்தல்
- சூழவுள்ள பகுதிகளில் இருந்து பசுமையான ஒரு சுற்றாடல் காட்சியை ஏற்படுத்த டேர்பின் பகுதியை பேணிப் பராமரித்தல்
- அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள நகர நிலக்காட்சிப்படுத்தல் (கால்வாய் கரையோரமாக தாவரங்களை நடுதல்) மற்றும் வாகனம் நிறுத்தும் பகுதிகள் என்பவற்றைப் பராமரித்தல்
- சமூக செயற்பாடுகளுக்கு தேவையான இடங்களை உருவாக்கி அத்தகைய இடங்களைப் பராமரித்தல்
- சுற்றுலா மைய தொழில் முயற்சிகளை ஏற்படுத்தி புதிய தொழில் வாய்ப்புகளையும் மற்றும் அழகியல் காட்சிகளையும் உருவாக்கல்

1.5.a வோர்ட்டெர்ஸ் எஜ்



1.5.b கிம்புலாவெல





ஜப்பான் நட்புறவு நடைபாதை



கிம்புலாவெல நடைபாதை

1.5.c கொழும்பு கிழக்கு



பாகொட சதுப்புநிலப் பூங்கா

பின்வரும் நன்மைகள் இந்தக் கருத்த் திட்டத்தில் உள்ளடங்குகின்றன.

- ஏற்கெனவேயிருக்கின்ற நடைபாதைகளில் இருந்து எழுகின்ற சட்டவிரோதமான அத்துமீறல்கள் செயற்பாடுகள் தடுக்கப்படுதல்
- நீர் நிலைகள், வாகனம் நிறுத்தும் பகுதிகள் மற்றும் நடைபாதைகள் என்பன சுத்தம் செய்யப்படுவதால் மக்களின் சுகாதார நிலை மேம்படுதல் மற்றும் அந்தப் பகுதியை சுற்றி கிடைக்க கூடிய பயிற்சி வசதிகளுக்கு மக்கள் உந்தப்படுதல்
- நீர் நிலைகளினது நீரின் தரம் மேம்படுதல்
- சூரிய சக்தி ஒளி முறைமை பயன்படுத்தப்படுவதால் செலவுகள் குறைதல்

2019 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப் பட்டுளள பணிகளின் மொத்த செலவு 46.76 மில்லியன் ரூபாவாகும்.

2. கொழும்பு மாநகரப் பெரும்பாகத்தில் காணப்படும் ஏற்கெனவேயுள்ள இரண்டாம்நிலைத் துணைக் கால்வாய்கள் மற்றும் பராமரிப்பு அலுவலகங்கள் ஆகியவற்றுக்கான அபிவிருத்தி, நகர நிலக்காட்சிப்படுத்தல் மற்றும் மேம்பாடு (ஏதாவது ஒரு நிறுவனத்தினாலும் பராமரிக்கப்படாத கால்வாய்கள்)

எந்த ஒரு நிறுவனத்தினதும் செயல்நோக்கின் கீழ் வராத அதிகமான இரண்டாம்நிலைத் துணைக் கால்வாய்களும் இந்தக் கூட்டுத் தாபனத்தின் மூலம் பராமரிக்கப்படுகின்றன. அந்த ஒவ்வொரு நிறுவனத்திற்கும் பொறுப்பில்லை என்பதால் அந்த ஒவ்வொரு நிறுவனமும் இந்தப் பணியில் இருந்து விலகிக் கொள்கின்றது. கால்வாய் மார்க்கங்களில் ஏற்படும் தடைகள் மற்றும் கால்வாய் பிரிவு சுருங்கல் ஆகியவற்றின் காரணமாக, இந்த நிலைமை பல சிறு வெள்ளப்பெருக்கு பிரச்சினைகளுக்கு விளைவாக அமைந்தது. இந்தப் பிரச்சினையை குறைக்கும் பொருட்டு, இந்த இரண்டாம்நிலைத் துணைக் கால்வாய்களை மேம்படுத்தி அவற்றை இணைப்பது அத்தியாவசியமானதாகும். ஆகையால், இந்த இரண்டாம்நிலைத் துணைக் கால்வாய்களும் இ.கா.அ.கூ. தாபனத்தின் மூலம் பராமரிக்கப்பட்டுள்ளன. ஏற்கெனவேயுள்ள இரண்டாம்நிலைத் துணைக் கால்வாய்களை மேம்படுத்துவது வெள்ளப்பெருக்குகள் நீங்கிய சுற்றடாலுக்கு பயனாக அமையும்.

பின்வருவன இந்தக் கருத் திட்டத்தின் பிரதான செயற்பாடுகளாக இருந்தன.

- கால்வாய்களினுள்ளும் மற்றும் அவற்றின் ஒதுக்கங்களினுள்ளும் நிகழும் அத்துமீறல் செயற்பாடுகளைத் தடுத்தல்
- பராமரிப்புப் பணிகளின்நிமித்தம் தேவையான போது ஒரு அணுகு பிரவேச வீதிக்கு ஏற்பாடு செய்தல்
- திண்மக் கழிவுகள் அகற்றல், கழிவுநீர் அகற்றல் என்பவற்றை கட்டுப்படுத்தல்

இந்த விடயத்தின் கீழ், இ.கா.அ.கூ. கொ.மா.பி. ஸ்ரீவிக்ரம கால்வாய், வெதமுல்ல ஏரிகள் மற்றும் பேலியகொடப் பிரதேச அதிகவேக வீதி குறுக்குக் கால்வாய்கள் மற்றும் முதுன்எல (KTU ஸ்தலத்தை சூழவுள்ள) சில முக்கியமான இரண்டாம்நிலைத் துணைக் கால்வாய்கள் என்பவற்றை பராமரிக்க வேண்டும். மேலும் வெள்ளப்பெருக்குகள் அதிகளவில் ஏற்படக் கூடியது என இனங்காணப்பட்டுள்ள கொழும்பு நகரத்திற்கு அப்பாலுள்ள கால்வாய்களையும் இந்தக் கூட்டுத் தாபனம் பராமரிக்க வேண்டும்.

பின்வருவன இந்தக் கருத் திட்டத்தின் குறிக்கோள்களில் உள்ளடங்குகின்றன.

- உள்ளூர் ரீதியாக வெள்ளபெருக்குகள் நிகழுவதன் காரணமாக பொது மக்களுக்கு ஏற்படும் ஏதாவது அகௌகரிகங்களை தடுத்தல்
- ஒட்டுமொத்த கால்வாய் முறைமையின் சிறந்த இணைப்பை ஏற்படுத்தல்
- ஒட்டுமொத்த சூழலையும் சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருத்தல்



அதிவேக வீதி குறுக்குக் கால்வாய்



ஸ்ரீவிக்ரம கால்வாய்



வெதமுல்ல ஏரி 1



வெதமுல்ல ஏரி 2



KTU ஸ்தலத்தை சூழவுள்ள கால்வாய்கள்

எனவே, 2019 ஆம் ஆண்டிற்கு, இந்தக் கால்வாய்களின் பராமரிப்புப் பணிக்கு செலவாகிய மொத்த தொகை 29.05 மில்லியன் ரூபாவாகும்.

3. பொது இடங்களில் நிலவும் வெள்ளப்பெருக்கு சம்பந்தமான பிரச்சினைகளுக்கு, அனர்த்த நிலைமைகளின் போது விடுக்கப்படும் வேண்டுகோளின் பேரில், வடிகாலமைப்பு மேம்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் பரிகார நடவடிக்கைகளை எடுத்தல்

அடிக்கடி நிகழும் வெள்ளப்பெருக்குகள் இலங்கையில் காணப்படும் மிக அழிவு வாய்ந்த இயற்கை அழிவு ஆபத்துக்களாகும். உண்மையில், இத்தயை ஆபத்துக்களினால் உயிர் இழப்புகள் ஏற்படுவது மட்டுமன்றி சொத்துக்களுக்கும் பாதிப்புகள் ஏற்படுகின்றன. இதுவும் அதிகளவில் காணக் கூடிய இயற்கை ஆபத்து வகையாகும். இத்தகைய ஆபத்து நிலையை தடுக்கும் பொருட்டு, இ.கா.அ.கூ. பொது மக்களை பாதிக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பொது இடங்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் சமய ஸ்தலங்கள் என்பவற்றின் சார்பாக அதாவது சதாஹாம் மாவத்தை கால்வாயில் காணப்படும் கால்வாய் அடைப்புகளை சுத்தம் செய்தல், தஹம்வெலவில் அமைந்துள்ள கிந்தா கால்வாயின் கால்வாய் அடைப்புகளை சுத்தம் செய்தல் மற்றும் கொலன்னாவ, பேலியகொட ஆகிய பிரதேசங்களிலும் மற்றும் கிம்புலாவெலப் பகுதியிலும் வெள்ளப்பெருக்குகள் நிகழும் போது வெள்ளப்பெருக்குகள் தணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற தமது வளாகங்களிலும் மற்றும் அத்தகைய வளாகங்களை சூழவுள்ள பகுதிகளிலும் காணப்படுகின்ற வடிகாலமைப்புப் பிரச்சினைகளை தீர்க்கும் பொருட்டு எமது உடனடி உதவியை பெற்றுக்கொள்ள, மேல் மாகாண பிராந்தியத்தில் வசிக்கும் மக்கள் கடந்த சில ஆண்டு காலப் பகுதிகளில், எமக்கு வேண்டுகோள் விடுத்தனர்.

பின்வருவனவற்றுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

- வெள்ளப்பெருக்குகள் நிகழும் காலப் பகுதியில் கால்வாய்களுக்கு ஏற்படும் தடைகளை அகற்றுதல்
- வெள்ளப்பெருக்குகள் நிகழும் காலப் பகுதியில் வெள்ளப்பெருக்கு நீர் தடையின்றி வழிந்தோடும் வகையில், சட்டவிரோதமான நிர்மாணங்களை அகற்றுதல்
- நீரினால் பரவும் நோய்கள் முதலியவற்றை குறைக்கும் பொருட்டு கால்வாய்களை சுத்தம் செய்தல்

2019 ஆம் ஆண்டிற்கு ஏற்பட்டுள்ள மொத்த செலவு 2.24 மில்லியன் ரூபாவாகும்.

- **அதிக வெள்ளப்பெருக்குகள் நிகழ்ந்த காலப் பகுதியில் கொழும்பு வட பிராந்திய அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள பரிகார செயற்பாட்டு நடவடிக்கைகள்**



- **பாராளுமன்ற வளாகத்தில் அதிக வெள்ளப்பெருக்குகள் நிகழ்ந்த காலப் பகுதியில் கொழும்பு கிழக்கு பிராந்திய அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள பரிகார செயற்பாட்டு நடவடிக்கைகள்**



பாராளுமன்ற வளாகத்தை சுற்றி மணல் மூட்டைகள் தடுப்பு கட்டுமாணங்கள் ஏற்பாடு செய்யப்பட்டமை

4. களு ஒயா ஆற்றுப் படுக்கை கால்வாய்கள் பராமரிப்புப் பணிகள்

களு ஒயா கம்பஹா மாவட்டத்தில் அமைந்துள்ள 5 சிறு குளங்களில் இருந்து ஆரம்பமாகுகின்றது. இது 5 பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கி இறுதியாக களணி கங்கையில் முடிவடைகின்றது (பெரும் கால்வாய்கள் மற்றும் சிறு கால்வாய்கள் அடங்கலாக ஏறத்தாழ 12 கி.மீ,).

- களணி
- பியகம
- வத்தளை
- ஜா - எல
- மகர

இந்த களு ஒயா ஆற்றுப் படுக்கைப் பிரதேசம் வதிவிடம் மற்றும் கைத்தொழில் ஆகிய பிரிவுகளில் நேர்த்தியான அபிவிருத்தியை அடைந்துள்ளது. நிலம் சார்ந்த சொத்துக்களுக்கு குறைந்தளவான பெறுமானம் நிலவுவதால் இந்தப் பகுதி புதிய குடியிருப்பாளர்களை கவர்ந்துள்ளது. கொழும்புப் பகுதியில் சனத்தொகை அதிகரித்து வருவதால், எதிர்கால நகர விஸ்தரிப்புக்கு இந்தப் பிரதேசம் ஒரு முந்துரிமைப் பிரதேசமாக இனங்காணப்பட்டுள்ளது. இவ்வாறு துரித அபிவிருத்தி ஏற்பட்டிருப்பதால், இயற்கை ஆபத்துக்களின் பாதிப்புகளை குறைப்பதற்கு மழை நீர் வடிகாலமைப்பு அடங்கலாக நகர உட்கட்மைப்பு வசதிகளில் அதிக கவனத்தை செலுத்த வேண்டியுள்ளது.

இ.கா.அ.கூ. கால்வாய்களை அகழ்ந்து துப்புரவாக்கல், வண்டல் மண்ணை அகற்றல் ஆகிய செயற்பாடுகளின் மூலமாக கால்வாய் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளையும் மற்றும் பெரும் கால்வாய்களிலும் மற்றும் சிறு கால்வாய்களிலும் தேவையான போது கால்வாய் கரைப் பகுதி பகுதி பாதுகாப்புப் பணிகளையும் மேற்கொள்கின்றது.

கருத் திட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருமாறு காணப்படும்.

- வெள்ளப்பெருக்குகளினால் ஏற்படும் பாதிப்புகளை மழை நீர் வடிகாலமைப்பு முறைமையை மேம்படுத்துவதன் மூலம் குறைத்தல்
- வெள்ளப்பெருக்கு ஆபத்துக்களை குறைத்து (அல்லது கட்டுப்படுத்தி) மக்களின் வாழ்வாதாரா நிலையை உயர்த்துதல்
- மக்களுக்கான பாதுகாப்பை மேம்படுத்துதல்
- சமூக செயற்பாடுகளுக்கும் மற்றும் வணிகம் சார்ந்த செயற்பாடுகளுக்கும் ஏற்படும் அழிவுகளை குறைத்தல்
- குடியிருப்பாளர்களுக்கு ஏற்படும் சுகாதார ஆபத்துக்களைக் குறைத்தல்
- மிகவும் கவர்ச்சிகரமான ஒரு நகர சுற்றாடலை உருவாக்குதல்

2019 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப் பட்டுள்ள பணிகளின் மொத்தப் பெறுமானம் 19.76 மில்லியன் ரூபாவாகும்.



களு ஒயா

5. கால்வாய் கரைப் பகுதிப் பாதுகாப்பு பணி (கேபியன் வேலை, தகடுகள் இடுதல், RRM சுவர்களையும் மற்றும் RCC சுவர்களையும் அமைத்தல்)

கொழும்பு நகரப் பிரதான கால்வாய் முறைமையின் வடிகாலமைப்பு சார்ந்த தேவைகளை நிறைவேற்றும் நோக்கில், கால்வாய் கரைப் பகுதிகளை புனர்நிர்மாணித்து மேம்படுத்தும் பொருட்டு, திறைசேரி நிதியை ஒதுக்கியுள்ளது.

1992 ஆம் ஆண்டு முதல் 1998 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில், கொழும்பு கால்வாய் முறைமையும் மற்றும் கொழும்பு நகரத்தை சூழவுள்ள பகுதிக் கால்வாய் முறைமையும் கால்வாய் கரைப் பகுதி மேம்பாட்டுப் பணிகள் முதலிவயற்றினால் அபிவிருத்தி அடைந்துள்ளன. எனினும், பொது மக்களினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் மற்றும் இலங்கையில் காணப்படும் கால்வாய் கரைப் பகுதிகள் இயற்கையாக அரிப்புக்கு உள்ளாகுதல் முதலிய பல காரணங்களினால், தற்பொழுது, கால்வாய் கரைப் பகுதிகளின் சில பாகங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

மேற்குறித்த விடயங்களை கருத்திற் கொண்டு, கால்வாய் கரைப் பகுதிகள் அரிப்புக்கு உள்ளளாகி உடைந்து விழுவதைத் தடுப்பதற்கும் மற்றும் ஆகக் கூடிய சாத்தியமான விசாலத்தில் கால்வாய் கரைப் பகுதிகள் பராமரிக்கப்படுவதை சரியாக வரையறுப்பதற்கும் கொழும்பு வட பிராந்தியத்திலும், கொழும்பு தென் பிராந்தியத்திலும் மற்றும் கொழும்பு கிழக்குப் பிராந்தியத்திலும் மற்றும் கொழும்பு நகரத்தை சூழவுள்ள பகுதிகளிலும் காணப்படும் பெரும் கால்வாய்களின் கால்வாய் கரைப் பகுதிகளைப் பாதுகாப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கருத் திட்டத்தின் கீழ், இந்தப் பிரதேசங்களில் பின்வரும் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- இ.கா.அ.கூ. தாபன வேலைப் பட்டறைக்கு அருகில் அமைந்துள்ள ஹீன்எல மற்றும் கிரிமண்டல மாவத்தையில் அமைந்துள்ள விளையாட்டு மைதானம் ஆகியவற்றுக்கான கேபியன் சுவர்கள் நிர்மாணம்
- பத்தரமுல்ல சுதர்ஷனாராம விகாரை ஏரி மேம்பாட்டுப் பணி
- அத்திடிய ஏரி II இன் ஓரமாக சங்கிலித் தொடர் வேலி நிர்மாணம்
- சிறிய விளையாட்டு மைதானத்திற்கு அருகில் அமைந்துள்ள பbடோவிட்ட கால்வாய் ஓரமாக சங்கிலித் தொடர் வேலி நிர்மாணம்

2019 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் மொத்த செலவு 36.71 மில்லியன் ரூபாவாகும்.



ஹீன்எல கேபியன் சுவர் நிர்மாணம்



சுத்தர்ஷனாராம விகாரை ஏரி மேற்பரப்பை சுத்தம் செய்யும் பணி



அத்திடிய ஏரி II இன் ஓரமாக சங்கிலித் தொடர் வேலி நிர்மாணம்



பbடோவிட்ட கால்வாய் ஓரமாக சங்கிலித் தொடர் வேலி நிர்மாணம்

6. கால்வாய்கள் மற்றும் ஏரிகள் ஓரமாகவுள்ள வீதிகளின் பராமரிப்பு மற்றும் புனர்நிர்மாணப் பணிகள்

கொழும்பு மாநகரப் பெரும்பாகத்தில் காணப்படும் கால்வாய் வலையமைப்பின் ஓரமாக அமைந்துள்ள பராமரிப்பு வீதிகள் இ.கா.அ.கூ. தாபனத்தின் மூலம் புனர்நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

குறித்த பராமரிப்பு வீதிகளை மேம்படுத்தியதன் மூலமாக, இந்தக் கூட்டுத் தாபனம் பின்வரும் பலன்களை அடைந்தது.

- கனரக இயந்திராதிகளுக்கான இலகு அணுகு பிரவேச வசதி
- டிப்பர்களுக்கும் மற்றும் லொரிகளுக்கும் தேவையான இடவசதி
- இயந்திராதிகளை வேலையில் ஈடுபடுத்துவதற்கும் மற்றும் ஈடுபடுத்தாமல் வைத்திருப்பதற்கும் தேவையான இடவசதி
- கால்வாய்களினுள்ளும் மற்றும் அவற்றின் ஒதுக்கங்களினுள்ளும் நிகழும் அத்துமீறல் செயற்பாடுகள் தடுப்பு
- கால்வாய்களினுள் கழிவுப் பொருட்கள் குவிக்கப்படுதல் குறைதல்

மேலும், இந்த வீதிகளின் புர்நிர்மாணமானது கொழும்பு நகரத்தினுள் புதிய துணை வீதியை உருவாக்கும். இது, தற்போதைய வாகன நெரிசல்களை குறைக்கவும் துணையாக அமையும்.

இந்தக் கருத் திட்டத்தின் கீழ், இந்தப் பிரதேசங்களில் பின்வரும் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டையில் இருந்து மாதிரிப் பண்ணை நிலம் வரையான ஹீன்எல (RHS) ஓரமாக கேபியன் சுவர் தொடர்பான உத்தேச மேம்பாட்டுப் பணி
- நாரஹேன்பிட்ட - நாவல மற்றும் கிரிமண்டல மாவத்தை ஆகியவற்றுக்கு இடையில் அமைந்தள்ள மதகுகளின் உத்தேச விசாலமாக்கல் பணி



2019 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப் பட்டுள்ள பணிகளின் மொத்த செலவு 10.32 மில்லியன் ரூபாவாகும்.



ஹீன்எல ஓரமாகவுள்ள கேபியன் சுவர் மேம்பாட்டுப் பணி



நாவல - நாரஹேன்பிட்ட லங்கா வோல்டைல் நிறுவனத்திற்கு அருகில் அமைந்துள்ள மதகை விசாலமாக்கும் பணி

7. லூணாவ கால்வாய் வலையமைப்பின் *N1, N1 - iii, S1* மற்றும் *S2* ஆகிய கால்வாய்களின் கால்வாய் அகழ்ந்து துப்புரவாக்கல், புனர்நிர்மாணம் மற்றும் பராமரிப்புப் பணிகள் மற்றும் லூணாவ ஏரியினதும் அதனை சூழவுள்ள பகுதிகளினதும் நகர நிலக்காட்சிப்படுத்தல் பணிகள்

லூணாவ ஏரி கொழும்பு மாவட்டத்தின் தென் பகுதியில் அமைந்துள்ளது. இந்த ஏரி கொழும்பு வட பகுதி தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகரப் பிரதேசத்தில் இருந்து கொழும்பு தெற்கு மொரட்டுவ மாநகரப் பிரதேசம் வரை 6.15 கி.மீ. நீளத்தை உள்ளடக்கும் ஒரு ஏரியாகும். குறித்த களப்பு அழிவை நோக்கி சென்றிருந்த வேளையில், அரசாங்கம், 2000 ஆம் ஆண்டு யூலை மாதத்தில், சர்வதேச நிதி உதவியுடன் லூணாவ சுற்றாடல் மேம்பாட்டு மற்றும் சமுதாய அபிவிருத்திக் கருத் திட்டத்தை ஆரம்பித்தது.

உத்தேச கருத் திட்டப் பிரதேசத்தில், லூணாவ-எல பிரதான கால்வாயாகும். இந்தக் கால்வாய் வட பகுதியில் இருந்து தென் பகுதியை நோக்கி விரிவடைந்து செல்லுகின்ற தாழ்நிலப் பிரதேசத்தின் ஊடாக ஓடிச்சென்று லூணாவ ஏரியில் கலக்கின்றது. இந்த ஆற்றுப் படுக்கைப் பகுதி மழை நீரை நேரடியாக ஏரியின் மேற்குப் பகுதியிலும் மற்றும் தென் பகுதியிலும் காணப்படும் ஏரியினுள் வடிகாலமைத்து விடுகின்ற பல சிறிய ஆற்றுப் படுக்கைகளை உள்ளடக்கியுள்ளது. இந்த லூணாவ ஏரி அங்குலான புகையிர நிலையத்தின் தென் பகுதியாக அமைந்துள்ள புகையிரதப் பாலத்தின் கீழ், கடலுக்கு அடியில் இணைகின்றது.

வருடாந்தம் இ.கா.அ.கூ. தாபனம் பிரதான கால்வாய் முறைமையின் பாகத்தைப் பராமரித்து வருகின்றது. களப்பை சூழவுள்ள பகுதியிலும் மற்றும் பிரதான கால்வாயின் பாகத்திலும் மேற்கொள்ள வேண்டிய அகழ்ந்து துப்புரவாக்கல் வேலை மற்றும் சில புனர்நிர்மாணப் பணிகள் என்பவற்றையும் மேற்கொண்டு நிறைவேற்றுகின்றது. ஆகையால், இ.கா.அ.கூ. தாபனம் தனது சமூக பொறுப்பு என்ற வகையில், பொது மக்களுக்கு இனிமையான ஒரு சூழலை உருவாக்கும் பொருட்டு சுத்தம் செய்தல் மற்றும் அகழ்ந்து துப்புரவாக்கல் ஆகிய வேலைகளைக் கவனித்துள்ளது.

பின்வருவன இந்தக் கருத் திட்டத்தின் பலன்களாக இருந்தன.

- மழை நீர் வடிகாலமைப்பு முறைமையை மேம்படுத்தியதன் ஊடாக உயர்ந்த அளவில் நகரத்தின் மதிப்பை பேணுவதற்காகவும் மற்றும் மக்களின் ஆரோக்கியமான வாழ்வுக்காகவும் நகரப் பிரதேசத்தில் ஆரோக்கியமான ஒரு சூழல் உருவாகியமை
- கல்வி அடங்கலாக பொருளாதார மற்றும் கலாசார செயற்பாடுகள் அடிக்கடி பாதிக்கப்பட்டுள்ள கருத் திட்டப் பிரதேசத்தில் வெள்ளப்பெருக்குகள் தடுக்கப்பட்டமை
- நகரப் பகுதிகளில் இருந்து வழிந்து வரும் மழை நீரை பெறுகின்ற கால்வாய்களின் நீரினதும் மற்றும் கடல் நீரினதும் தரம் மேம்பட்டமை
- பிரதான கால்வாய் முறைமையின் பாகங்களை சுத்தம் செய்தல், அகழ்ந்து துப்புரவாக்கல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றின் மூலமாக இனிமையான ஒரு சூழல் உருவாகியமை
- வண்டல் மண் அகற்றப்பட்டதால் கால்வாய்களின் நீர்காவிச் செல்லும் கொள்ளளவு அதிகரித்தமை
- ஏரிகளினுள்ளும் மற்றும் கால்வாய்களினுள்ளும் வரும் திண்மக் கழிவுகள் கட்டுப்படுத்தப்பட்டமை
- கால்வாயினுள்ளும் மற்றும் களப்பு ஒதுக்கங்களினுள்ளும் நிகழும் அத்துமீறல் செயற்பாடுகளும் மற்றும் சட்டவிரோதமான செயற்பாடுகளும் தடுக்கப்பட்டமை

ஆகையால், 2019 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் மொத்த செலவு 19.18 மில்லியன் ரூபாவாகும்.



S1 கால்வாய்



S2 கால்வாய்



N1 கால்வாய்



N1 – iii கால்வாய்

8. ராகமவில் அமைந்துள்ள பொல்கஹவெலக் குளம் மற்றும் மேல் நீரேந்து பரப்பு அடங்கலாக ராகமவிலும் மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளிலும் காணப்படும் வடிகாலமைப்பு முறைமை மற்றும் கால்வாய் கரைப் பகுதி மேம்பாட்டுப் பணிகள்

மழை காலங்களில் மழை நீரை சேகரிக்கும் பொருட்டு குறித்த குளங்களையும் மற்றும் சூழவுள்ள பகுதியையும் பராமரித்து அபிவிருத்தி செய்து மழை நீரை தேக்கி வைப்பதும் மற்றும் நிகழும் அத்துமீறல் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நீர் தேங்கு பகுதிகளை சூழவுள்ள நடைபாதைகளை அபிவிருத்தி செய்வதும் மற்றும் நீரை உள்வாங்கும் பகுதிகளை மேம்படுத்துவதன் மூலம் சுற்றாடலை தூய்மையாகப் பேணுவதும் இந்தக் கருத் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

பொழுதுபோக்கு சார்ந்த செயற்பாடுகளை மேம்படுத்தும் பொருட்டு நீர் நிலைகளுக்கு அண்மித்த பகுதி அழகுபடுத்தல், குறித்த பிரதேசத்தை சூழ்ந்து வாழுகின்ற மக்களின் வாழ்வாதார நிலைகளை மேம்படுத்துதல் மற்றும் ஏற்கெனவேயுள்ள கால்வாய் முறைமையை மேம்படுத்துதல் முதலியன இந்தக் கருத் திட்டத்தில் உள்ளடங்கும் ஏனைய நன்மைகளாகும்.

இந்தக் கருத் திட்டத்தின் கீழ், பின்வரும் விடயங்களை நாம் கவனித்தோம்.

- பொல்கஹவெல ஏரி ஓரமாக உத்தேச சங்கிலித் தொடர் வேலி நிர்மாணம்
- இயந்திராதிகளை ஈடுபடுத்தி தேவத்தை பஸிலிக்கா ஏரியை அகழ்ந்து துப்புரவாக்கல், அகழ்ந்து துப்புவராக்கப்பட்டிருந்த மூலப்பொட்களைப் பயன்படுத்தி நடைபாதைகளை அமைத்தல், உரப் படலங்களினால் கால்வாய் கரைப் பகுதிகள் ஓரமாக கொங்கிறீட்டு கேர்புகளை பொருத்துதல் மற்றும் பபெரிலோ டேர்பிங்களை இடுதல்
- பாப்பரசர் பெண்டிக் ஆண்டகை நிலைய நீர்க் குட்டைக்கு காஃபெர்டமை நிர்மாணித்தல்
- ராகம பேரலந்தவெவக் குளத்தை அகழ்ந்து துப்புவராக்கல்

எனவே, 2019 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் மொத்தப் பெறுமானம் 40.55 மில்லியன் ரூபாவாகும்.



தேவத்தை பசிலிக்கா ஏரி புனர்நிர்மாணம்



ராகம பேரலந்தக் குளப் புனர்நிர்மாணம்

9. கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக வீதி (CKE) ஓரமாகவுள்ள பழைய ஒல்லாந்தர் கால்வாயினதும் மற்றும் இணைந்த நீர் நிலைளினதும் பராமரிப்புப் பணிகள்

CKE அதிவேக வீதி நிர்மாணிப்பு பெற்ற காலப் பகுதியில், உள்ளூர் பகுதி நீரினால் அதற்கு அருகிலுள்ள பிரதேசத்தில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. அதன் பின்னர், வெள்ளப்பெருக்கு சார்ந்த பிரச்சினைகளைக் குறைக்கும் பொருட்டு மழை நீர் தடையின்றி வழிந்தோடச் செய்வதற்காகவும் மற்றும் நன்னீர் சம்பந்தமான பிரச்சினைகளைக் குறைப்பதற்காகவும் ஒல்லாந்தர் கால பழைய கால்வாயும் மற்றும் இணைந்த நீர் நிலைகளும் மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

அதற்கிணங்க, இ.கா.அ.கூ. தாபனம் ஒல்லாந்தர் கால பழைய கால்வாய்களினதும் மற்றும் இணைந்த நீர் நிலைகளினதும் பராமரிப்புப் பணிகளை வழமையாகக் கவனித்து வந்துள்ளது. 2019 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் மொத்தப் பெறுமானம் 15.95 மில்லியன் ரூபாவாகும்.

10. ஏற்கெனவே பேலியகொடவில் அமைந்துள்ள நீரிறைக்கு நிலையத்தின் (PSP) மேம்பாட்டுப் பணிகள் மற்றும் அதன் வருடாந்த பராமரிப்பு இயக்கச் செயற்பாட்டுப் பணிகள்

களணி கங்கையின் கீழருவிப் பகுதியில் அதிக வெள்ளப்பெருக்கு மட்டம் நிலவுகின்ற காலப் பகுதியில், பேலியகொட பிரதேசத்திற்கு வழிந்து வரும் நீரை இறைத்து வெளியே அனுப்பும் முகமாக ஏற்கெனவே பேலியகொடவில் அமைந்துள்ள நீரிறைக்கும் நிலையம் அபிவிருத்தி செய்யப்பட்டது. இந்த நீரிறைக்கும் நிலையத்தில் 2 நிலைக்குத்தான நீரிறைக்கும் எக்ஸியல் (மின்சார சக்தியில் இயங்கும்) தபிகள் காணப்படுகின்றன. இந்த நிலையம் தற்பொழுது இ.கா.அ.கூ. தாபனத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

2019 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டத்தின் நிதி வரையறையினுள், இ.கா.அ.கூ. தாபனம் ஏற்கெனவே பேலியகொடவில் அமைந்துள்ள நீரிறைக்கும் நிலையத்தினதும் மற்றும் அதன் நீர் உள்பாய்ச்சல் கால்வாய்களினதும் பராமரிப்புப் பணிகளை மேண்கொண்டதுடன் திருத்தல் வேலைகளையும் கவனித்தது.

பின்வருவன முக்கிய குறிக்கோள்களாக காணப்பட்டன.

- ➢ ஏற்கெனவே அமைந்துள்ள நீரிறைக்கும் நிலையத்தையும் மற்றும் அதன் நீர் வழங்கு கால்வாயையும் புனர்நிர்மாணித்தல்
- ➢ வருடாந்த இயக்கச் செயற்பாட்டு மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளல்

மேற்குறித்த கருத் திட்டத்தின் நிமித்தம் 2019 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் மொத்தப் பெறுமானம் 5.02 மில்லியன் ரூபாவாகும்.



நீரிறைக்கும் நிலையத்திற்கான நீர் உட்பாய்ச்சல் கால்வாய்

11. வடிகாலமைப்பு மேம்பாட்டு மற்றும் நகர நிலக்காட்சிப்படுத்தல் அபிவிருத்தி கருத் திட்டம் - கட்டுபெத்த

2018 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் திகதி, இந்தப் பூங்கா பொது மக்களுக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. ஏரியின் கொள்ளளவை அதிகரித்தல் மற்றும் மேலும் நிகழுகின்ற அத்துமீறல் செயற்பாடுகளில் இருந்து சூழவுள்ள பகுதியைப் பாதுகாத்தல் மற்றும் பொழுதுபோக்கு சார்ந்த செயற்பாடுகளை அதிகரிக்கும் பொருட்டு நீர் நிலைகளை அண்மித்த பகுதியைப் பாதுகாத்தல் மற்றும் நகர அபிவிருத்தியினதும் மற்றும் சுற்றுப்புற அபிவிருத்திகளினதும் மாற்றங்கள் முதலியவற்றின் காரணமாக ஏற்கெனவேயுள்ள கால்வாய் முறைமைகளையும் மற்றும் ஏரிகளையும் மேம்படுத்துதல் என்பன இந்தக் கருத் திட்டத்தில் உள்ளடங்கும் ஏனைய நன்மைகளாகும்.

கட்டுபெத்த ஏரி, வாகனம் நிறுத்தும் பகுதி மற்றும் ஏரியின் அணைக் கட்டு ஓரமாகவுள்ள நடைபாதை என்பவற்றை பராமரித்தல் மற்றும் சூழலை சுத்தமாகப் பேணி கால்வாய் முறைமையுடன் சிறந்த இணைப்பை ஏற்படுத்தல் என்பன இந்தக் கருத் திட்டத்தின் குறிக்கோள்களாக இருந்தன.

பின்வருவன இந்தக் கருத் திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாக காணப்பட்டன.

- குறைந்தளவான மூலப்பொருட்களை (கூழாங்கற்கள், மணல்) பயன்படுத்தி சூழவுள்ள பகுதியில் இருந்து பசுமையான இனிமையான ஒரு சுற்றாடல் காட்சியை உருவாக்கும் பொருட்டு டேர்பின் பகுதியைப் பராமரித்தல்
- நகர நிலக்காட்சிப் பகுதியை (கரைப் பகுதி ஓரமாக மரங்களை நடுதல்) பேணிப் பராமரித்தல்
- சூரிய சக்தி ஒளி முறைமை அடங்கலாக உருவாக்கப்பட்டுள்ள நடைபாதைகளையும் மற்றும் வாகனம் நிறுத்தும் பகுதிகளையும் பேணிப் பராமரித்தல்
- உருவாகிய புதிய தொழில் வாய்ப்புகளையும் மற்றும் அழகியல் காட்சிகளையும் பேணிப் பாதுகாத்து மேம்படுத்துதல்
- கால்வாய்களின் நீர் தடையின்றி வழிந்தோடுவதற்கு வசதியளிக்கும் பொருட்டு ஏற்கெனவேயுள்ள கால்வாய் முறைமையைப் பராமரித்து மேம்படுத்துதல்
- பொது மக்களுக்கு பசுமையான மற்றும் வெள்ளப்பெருக்கு நீங்கிய ஒரு சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல்
- குறித்த பிரதேசத்தின் சொத்துக்களினது வணிகம் சார்ந்த பெறுமானங்களை அதிகரித்தல்

அதற்கிணங்க, இ.கா.அ.கூ. தாபனம் கட்டுபெத்தவில் அமைந்துள்ள நடைபாதையின் பராமரிப்புப் பணியை மேற்கொண்டு நிறைவேற்றியுள்ளது. 2019 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் மொத்தப் பெறுமானம் 9.29 மில்லியன் ரூபாவாகும்.



கட்டுபெத்தவில் அமைந்துள்ள நடைபாதைப் பராமரிப்புப் பணி

12. மேல் மாகாணத்தினுள் காணப்படும் வெள்ளப்பெருக்குகள் தணிப்பு நடவடிக்கையுடன் தொடர்பான வடிகாலமைப்பு மேம்பாட்டுக் கருத் திட்டங்கள்

அடிக்கடி நிகழ்கின்ற வெள்ளப்பெருக்குகளின் காரணமாக உயிர்களுக்கு ஏற்படும் இழப்பையும் மற்றும் உடமைகளுக்கு ஏற்படும் பாதிப்புகளையும் குறைக்கும் பொருட்டு வடிகாலமைப்பு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதுவே இலங்கையில் காணப்படும் இயற்கை ஆபத்துக்களின் மிகவும் அழிவு வாய்ந்த ஆபத்தாகும்.

மேற்குறித்த கருத் திட்டத்தின் கீழ் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

- அம்பத்தல கால்வாயை அகழ்ந்து துப்புவராக்கல்
- அங்கொட மன்டாவில ஏரியை அகழ்ந்து துப்புரவாக்கல்
- நெலும்பெதச கலபாளுவ சதுப்புநிலப் பகுதியை மேம்படுத்துதல்
- தியவன்னா ஏரியை (கடல் விமானப் பகுதி) அகழ்ந்து துப்புரவாக்கல்

அதற்கிணங்க, 2019 ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் மொத்தப் பெறுமானம் 43.05 மில்லியன் ரூபாவாகும்.

13. கொழும்பு மாவட்டத்திற்கு அப்பாலுள்ள வடிகாலமைப்பு மேம்பாட்டு மற்றும் நகர நிலக்காட்சிப்படுத்தல் கருத் திட்டங்கள்

ஏரிகளைப் புனர்நிர்மாணித்தல், அத்துமீறுவர்களினால் சட்டவிரோதமாக மண்ணிரப்பியெடுக்கப்பட்டுள்ள பகுதியை அகழ்ந்து துப்புரவாக்கல், வண்டல் மண்ணை அகற்றல், ஏரியின் அணைக் கட்டு ஓரமாக நடைபாதையை நிர்மாணித்தல் மற்றும் வெள்ளப்பெருக்கு ஆபத்துக்களைக் குறைக்கும் பொருட்டு பிரதான நகரங்களிலும் மற்றும் கொழும்பு மாவட்டத்திற்கு வெளி இடங்களிலும் கால்வாய் முறைமையுடன் சம்பந்தப்படும் அபிவிருத்தி அம்சங்களுடன் சிறந்த ஒரு இணைப்பை ஏற்படுத்துதல் மற்றும் சுற்றாடலை தூய்மையாகப் பேணிப் பராமரித்தல் என்பன இந்தக் கருத் திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாகும்.

வஸ்கடுவப் பிரதேசத்தை சூழவுள்ள பகுதியில் காணப்படும் வெள்ளப்பெருக்கு ஆபத்துக்களை அடையாளப்படுத்தும் பொருட்டு, 2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில், களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள மகா மற்றும் குடா வஸ்கடுவப் பிரதேசத்திற்கு சிறினிவாஷ வீதியில் இருந்து கடல் நீர் வெளிப் பாயும் இடம் வரை கால்வாய் கரைப் பகுதிப் பாதுகாப்பு நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பின்வருவன இந்தக் கருத் திட்டத்தில் உள்ளடங்கும் ஏனைய நன்மைகளாகும்.

- நகர அபிவிருத்தி மாற்றங்கள் காணமாக ஏற்கெனவேயுள்ள கால்வாய் முறைமைகளும் மற்றும் ஏரிகளும் மேம்படுதல்
- ஏரியின் நீர் கொள்ளளவு அதிகரித்தல்
- சுற்றுப்புறப் பகுதி மேலும் அத்துமீறல் செயற்பாடுகளில் இருந்து பாதுகாக்கப்படுதல்
- பொழுதுபோக்கு சார்ந்த செயற்பாடுகள் மேம்படும் வகையில் நீர் நிலைகளை அண்மித்த பகுதிகளில் அழகியல் காட்சி உருவாகுதல்

2019 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் மொத்தப் பெறுமானம் 28.27 மில்லியன் ரூபாவாகும்.



களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள மகா மற்றும் குடா வஸ்கடுவப் பிரதேசத்திற்கான மழை நீர் வடிகாலமைப்பு முறைமையின் கீழ் உத்தேசிக்கப்பட்டுள்ள கேபியன் சுவர் நிர்மாணம்

14. பத்தரமுல்ல மற்றும் அதனை சூழவுள்ள பகுதி ஆகியவற்றின் பாராளுமன்ற மேல் நீரேந்து பரப்பிலுள்ள வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டுப் பணிகள்

பசுமை நகர எண்ணக்கருவின் நிமித்தம் சுற்றாடலை மேம்படுத்துவதன் மூலம் பாராளுமன்ற வளாகத்திலும் மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளிலும் நிகழுகின்ற வெள்ளப்பெருக்குகளைத் தணிப்பதும் மற்றும் மேல் நீரேந்து பரப்பிலுள்ள சதுப்பு நிலங்களை பாதுகாப்பதும் இந்தக் கருத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

மேற்குறித்த பணியின் கீழ், பின்வரும் கருத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

- பத்தரமுல்ல பாலம்துண சந்தி ஏரியை அகழ்ந்து துப்புவராக்கல்
- கிம்புலாவெல சிலுமினி கோவில் கால்வாயை அகழ்ந்து துப்புரவாக்கல்
- அக்குரேகொட சுற்றுப்புறக் கால்வாய் மேற்பரப்புகளை துப்புரவாக்கும் பணிகள்

பின்வருவன இந்தக் கருத் திட்டத்தில் உள்ளடங்கும் ஏனைய நன்மைகளாகும்.

- நீரைத் தேற்கி வைக்கக் கூடிய கொள்ளளவு அதிகரிப்பதாலும் மற்றும் நகர நிலக்காட்சி அமையப் பெறுவதாலும் வெள்ளப்பெருக்குகள் நீங்கிய உயிரியல் சுற்றாடல்நேய சூழல் உருவாகுதல்
- நிலத்தை மண்ணிரப்பியெடுக்கும் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அத்துமீறல் செயற்பாடுகள் தடுக்கப்படுதல்
- திண்மக் கழிவு முகாமைத்துவ வசதிகள் உருவாகுதல்
- நீரின் தரம் மேம்படுதல்
- வடிகாலமைப்பு மேம்பாடுகள் ஏற்படுதல்
- நகர நிலக்காட்சி உருவாகுதல்

2019 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் மொத்த செலவு 1.13 மில்லியன் ரூபாவாகும்.



பாலம்துண சந்தி ஏரியை அகழ்ந்து துப்புரவாக்கல்



அக்குரேகொட ஏரி மேற்பரப்பு துப்புரவாக்கல் பணிகள்

வாடிக்கையாளர் கருத் திட்டங்கள்

***1.* பானந்துறை களவத்த நகர சதுக்கத்திற்கான வாடிகாலமைப்பு மற்றும் நிலக்காட்சி நிர்மாணப் பணிகள்**

வாடிக்கையாளர் தரப்பு: மாநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு

ஆரம்பித்த திகதி: 2018.11.10
கருத் திட்டத்தின் நிலை: 2019.01.15 *ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டுள்ளது.*
மதிப்பிடப்பட்டுள்ள செலவு: 88.29 *மில்லியன் ரூபா* (*நிர்மாண மற்றும்* VAT *வரி நீங்கலாக*)

ஆரம்பித்த திகதி: 19.08.2018
நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ள திகதி: 18.04.2019
நிறைவு செய்ய எதிர்பார்க்கும் உண்மையான திகதி: 30.06.2019
நிறைவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தத் தொகை: 50.7 மில்லியன் ரூபா

தளதா மாளிகை வளாகத்தில் துளை குழாய்மார்க்க வடிகாலமைப்பு முறைமையையும் மற்றும் மழை நீர் வடிகாலமைப்பு முறையையும் நிர்மாணிக்கும் பணி இந்தக்

கருத் திட்டத்தில் அடங்குகின்றது. ஸ்தல விஜயத்தின் போது, தளதா மாளிகையை சுற்றி போதிய வடிகாலமைப்பு வசதி இல்லை என்பது கண்டறியப்பட்டது. சில வடிகாலமைப்புகள் திய அகலவுக்கு திருப்பிவிடப்பட்டிருந்தன. திய அகலவின் இணையும் இடத்தில் அதிகளவு வண்டல்மண் படிந்திருந்தது. மேற்குறித்த பிரச்சினையை தீர்க்கும் பொருட்டு இ.கா.அ.கூ. தாபனம் மேற்பரப்பு வடிகாலமைப்பு முறைமை அடங்கலாக ஒரு தலைமை வடிகாலமைப்புத் திட்டத்தை தயாரித்தது.

வாடிக்கையாளர் தரப்பினது அறிவுரையின் பிரகாரம் மகா மளுவ பகுதிற்கு ஒரு புதிய நீர்தெளி முறைமையும் மற்றும் டேர்பின் முறைமையும் அறிமுகப்படுத்தப்பட்டன.

இந்தக் கருத் திட்டம் 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டது.

2019 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள உசாதுணை சார்ந்த பணியின் பெறுமானம்: 3.1 மில்லியன் ரூபா



உருப்படம் 12: தளதா மாளிகை வளாக நீர்தெளி முறைமைகள்



உருப்படம் 13: குழாய் மதகு நிர்மாணம்

8.4 கண்டி ஸ்ரீ தளதா மாளிகைக்கான உட்கட்டமைப்பு வசதிகள் - கட்டம் IV

வாடிக்கையாளர் தரப்பு: மாநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு
உசாதுணைத் தரப்பு: இ.கா.அ.கூ.
கட்டடக்கலைத் தரப்பு: ந.அ.அ.ச.
ஒப்பந்தத் தரப்பு: சென்ட்ரெல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் (CESL)
ஒப்பந்தத் தொகை: 27.3 மில்லியன் ரூபா
ஒப்பந்த காலம்: 270 நாட்கள்
ஆரம்பித்த திகதி: 20.06.2019
நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ள திகதி: 17.10.2019
நிறைவு செய்ய எதிர்பார்க்கும் உண்மையான திகதி: 30.12.2019
நிறைவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தத் தொகை : 21.7 மில்லியன் ரூபா

தொல்பொருள் அம்சங்களின் விழுமிய மதிப்பை பாதுகாத்து வடிகாலமைப்பு உட்கட்டமைப்பு வசதிகளை புனர்நிர்மாணிப்பது இந்தக் கருத் திட்டத்தின் குறிக்கோளாக இருந்தது. இந்த உசாதுணை சார்ந்த பணியின் கீழ், இந்தக் கூட்டுத் தாபனம் குறித்த வளாகத்தில் சேரும் மழை நீரை குறித்த வளாகத்தில் நீர் தேங்கி நிற்காத வகையில் திய அகலவுக்கு விடும் பொருட்டு குறித்த திட்டத்தை மீளவடிவமைத்துள்ளது.

நீரிறைக்கும் நிலையத்தையும் மற்றும் நீர்தெளி முறைமைக்கான ஒரு கிணற்றையும் நிர்மாணிக்கும் பணியும் மற்றும் தளதா மாளிகை VIP நுழைவாயில் பகுதியில் மதகுகளை நிர்மாணிக்கும் பணியும் இந்தக் கருத் திட்டத்தில் அடங்குகின்றன. 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நிகழ்ந்த பயங்கரவாதத் தாக்குதல்களின் காரணமாக, குறித்த வாடிக்கையாளர் தரப்பின் அறிவுரைகள் பிரகாரம் ஒரு சில மேலதிகப் பணிகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

குறித்த வாடிக்கையாளரின் அறிவுரைகள் பிரகாரம் இந்தக் கருத் திட்டத்திற்கு உடவத்தை வனப் பகுதி இணைப்பு தாழ்வாரமிடுதல் மற்றும் நிலம் தயார்படுத்தல் ஆகிய பணிகளும் சேர்க்கப்பட்டன.

இந்தக் கருத் திட்டம் 2019 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 30 ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டது.

குறித்த ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள உசாதுணை சார்ந்த பணியின் பெறுமானம்: 1.36 மில்லியன் ரூபா



உருப்படம் 14: நீர்தெளி முறைமைக்கான நீரிறைக்கும் நிலையம்



உருப்படம் 15: நீர்தெளி முறைமைக்கான நீரிறைக்கும் கிணறு

9. தல்துவ பொது சந்தை அபிவிருத்தி

உள்ளூர் ரீதியாக ஏற்படும் வெள்ளப்பெருக்குகளைத் தணிப்பதற்கு சரியான உகந்த வடிகாலமைப்பு முகாமைத்துவம் அடங்கலாக வாராந்த சந்தைப் பகுதியின் பாகத்தை அபிவிருத்தி செய்வது இந்தக் கருத் திட்டத்தின் நோக்கமாகும்.

வாடிக்கையாளர் தரப்பு: மாநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு
உசாதுணைத் தரப்பு: இ.கா.அ.கூ.

கருத் திட்டத்தின் செலவு: 45.707 மில்லியன் ரூபா (VAT வரி நீங்கலாக)
ஒப்பந்தத் தரப்பு: வீரசூரிய பில்டெர்ஸ்
ஒப்பந்த காலம்: 180 நாட்கள்
ஆரம்பித்த திகதி: 26.07.2018
2019 ஆம் ஆண்டு இறுதியளவில் காணப்படும் பணி முன்னேற்றம்: பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள உசாதுணை சார்ந்த பணியின் பெறுமானம்: 0.32 மில்லியன் ரூபா



உருப்படம் 16: தல்துவ சந்தையை சூழவுள்ள பகுதிற்கான வடிகாலமைப்பு முகக்குறிப்புத் திட்டம்



உருப்படம் 17: சந்தைப் பகுதிற்கு நிலம் தயார்ப்படுத்தல் பணி

10. அத்திடிய சிறுவர் அநாதைகள் இல்லத்திற்கான உத்தேச புதிய கட்டிடம் - கட்டம் I

வாடிக்கையாளர் தரப்பு: நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு
உசாதுணைத் தரப்பு: இ.கா.அ.கூ.
ஒப்பந்தத் தரப்பு: GPD இன்ஜினியரிங் (ப்ரைவட்) லிமிற்றட்
ஒப்பந்தத் தொகை: 54.95 மில்லியன் ரூபா (VAT வரி நீங்கலாக)
நிறைவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தத் தொகை: 55.08 மில்லியன் ரூபா (VAT வரி நீங்கலாக)
ஒப்பந்த காலப் பகுதி: 270 நாட்கள்
ஆரம்பித்த திகதி: 22.05.2018
நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ள திகதி: 17.02.2019
நிறைவு செய்ய எதிர்பார்க்கும் உண்மையான திகதி: 05.12.2019
2019 ஆம் ஆண்டு இறுதியளவில் காணப்படும் முன்னேற்றம்: பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது

RCC நிர்மாணங்கள் மற்றும் மரக் கூரைகள் கொண்டமையும் இரண்டு கட்டிடங்களின் நிர்மாணப் பணி இந்தக் கருத் திட்டத்தில் அடங்குகின்றது. இவற்றில் ஒரு கட்டிடம் ஒவ்வொரு நில மாடியும் சராசரி 355 $மீ^2$ பரப்பளவுடைய இரண்டு மாடிகள் கொண்டதாகும். மற்றையது 68 $மீ^2$ பரப்பளவான நில மாடியுடைய ஒரு தனி மாடிக் கட்டிடமாகும்.

2019 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள உசாதுணை சார்ந்த பணியின் பெறுமானம்: 0.98 மில்லியன் ரூபா



உருப்படம் 18

11. ராகம வல்பொல கிதுதான புபுதுவ தேசிய நிலையத்திற்கான நிர்மாண மேம்பாட்டுப் பணிகள் - கட்டம் III

வாடிக்கையாளர் தரப்பு: நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு
உசாதுணைத் தரப்பு: இ.கா.அ.கூ.
ஒப்பந்தத் தரப்பு: JSM கன்ஸ்ட்ரக்ஷன் (ப்ரைவட்) லிமிற்றட்
ஆரம்ப ஒப்பந்தத் தொகை: 20.67 மில்லியன் ரூபா (VAT வரி நீங்கலாக)
ஒப்பந்த காலப் பகுதி: 180 நாட்கள்
ஆரம்பித்த திகதி: 09.08. 2018
2019 ஆம் ஆண்டு இறுதிளவில் காணப்படும் பணி முன்னேற்றம்: 99% வீதம்

தங்குமிடவசதிகள் கட்டிடத்தின் நிர்மாணப் பணியும் மற்றும் கட்டிடத்தை சூழவுள்ள பகுதி மழை நீர் வடிகாலமைப்பு முறைமை மேம்பாட்டுப் பணியும் இந்தக் கருத் திட்டத்தில் அடங்குகின்றன. குறித்த தங்குமிடவசதிகள் கட்டிடம் கூரை மொட்டைமாடியுடைய ஒரு RCC தனி மாடிக் கட்டிடமாகும். குறித்த கட்டிடத்தின் நிலப் பரப்பளவு 2500 சதுர அடி^{2} பரப்பளவானதாகும்.

2019 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள உசாதுணை சார்ந்த பணியின் பெறுமானம்: 0.62 மில்லியன் ரூபா

- **நகர அபிவிருத்தி அதிகார சபைக்கான உசாதுணை சார்ந்த பணி**

பின்வரும் கருத் திட்டங்களுக்கான நிர்மாணங்கள் மற்றும் பாலங்கள் என்பன தொடர்பான மழை நீர் வடிகாலமைப்பு தலைமைத் திட்டம் மற்றும் மழை நீர் வடிகாலமைப்பு வடிமைப்புத் திட்டங்கள் தயாரிப்பு இந்த உசாதுணை சார்ந்த பணியில் அடங்குகின்றது. குறித்த பணிக்கான உசாதுணை சார்ந்த கட்டணம் குறித்த கருத் திட்டத்தின் மொத்த செலவில் 3% வீதமாகும்.

12. பொரலஸ்கமுவ குளத்தை சூழவுள்ள பகுதி உத்தேச அபிவிருத்திக் கருத் திட்டம் - கட்டம் I

பொரலஸ்கமுவ குளத்தின் புனர்நிர்மாணப் பணிக்கான திட்டம் ந.அ.அ.ச. மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. நிதிகள் கிடைக்கக் கூடிய தன்மையை பொறுத்து குறித்த கருத் திட்டத்தின் கட்டம் I, கட்டம் II மற்றும் III ஆகியவற்றின் கீழ் கேபியன் சுவர்களை நிர்மாணித்து கால்வாய் கரைப் பகுதிகளைப் பாதுகாப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கருத் திட்டத்தின் செலவு: 68.4 மில்லியன் ரூபா
ஒப்பந்தத் தரப்பு: SF கன்ஸ்ட்ரக்ஷன்
ஒப்பந்த காலப் பகுதி: 01.08.2018 முதல் 31.01.2019 வரை

2019 ஆம் ஆண்டிற்கு I, II மற்றும் III ஆம் கட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள உசாதுணை சார்ந்த பணியின் பெறுமானம்: 8.83 மில்லியன் ரூபா



உருப்படம் 19: ஏரியின் கரைப் பகுதிற்கான கேபியன் சுவர் நிர்மாணம்



உருப்படம் 20: ஏரியின் கரைப் பகுதிற்கு மண்ணிரப்பல்

13. மாகும்புர நகர அபிவிருத்திப் பணி

வாடிக்கையாளர் தரப்பு: ந.அ.அ.ச. மற்றும் 3K கருத் திட்டம்
உசாதுணைத் தரப்பு: ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்புகள் பிரிவு, இ.கா.அ.கூ.
ஒப்பந்தத் தரப்பு: வடிகாலமைப்பு மற்றும் காணி சீராக்கல் பிரிவு, இ.கா.அ.கூ.
கருத் திட்டத்தின் மொத்த செலவு: 1.003 மில்லியன் ரூபா
மதிப்பிடப்பட்டுள்ள உசாதுணை சார்ந்த கட்டணம்: செயற்படுத்துகை செலவில் 3% வீதம்

மாகும்புர இடைமாறல் நகர அபிவிருத்திக் கருத் திட்டம் கொழும்பு பெரும்பாக நகரப் போக்குவரத்து அபிவிருத்திக் கருத் திட்டத்தின் ஒரு பிரிவாகும். பேரூந்துகளும் மற்றும் புகையிரதங்களும் ஒன்றிணைந்து ஒரு ஒருங்கிணைந்த பெருந்தெரு போக்குவரத்து வலையமைப்பை ஏற்படுத்தக் கூடிய ஒரு பேரூந்துத் தரிப்பு நிலையத்தையும் மற்றும் பலநோக்கு மாதிரிப் போக்குவரத்து நிலையத்தையும் நிர்மாணிக்கும் பொருட்டு ஏற்கெனவேயுள்ள வயல் காணிகளை அபிவிருத்தி செய்வது இந்தக் கருத் திட்டத்தின் நோக்கமாகும். மாகும்புர பலநோக்கு மாதிரி நிலையம் (MMC) கொட்டாவ வீதி நுழைவாயிலில் இருந்து தென் அதி வேக வீதி வரை கொழும்பு நகரத்தை நோக்கி 300 மீற்றர் தூரத்தில் அமைந்திருக்கும். மேல் மாகாணத்தில் உள்ள மூன்று பிரதான போக்குவரத்து கேந்திர நிலையங்களை (கடவத்தை, கடுவளை மற்றும் கொட்டாவ) இணைக்கும் உத்தேச வெளிச்சுற்று அதி வேக வீதியும் (OCH) இதனை அண்மித்த பகுதியில் அமைக்கப்படும். குறித்த நகர அபிவிருத்தியின் நிமித்தம் இனங்காணப்பட்டுள்ள ஸ்தலம் 8.6 ஹெக்டேயர் (21 ஏக்கர்) அளவான கைவிடப்பட்டுள்ள (வயல் காணி) சதுப்பு நிலப் பகுதியாகும். இரு பக்கங்களிலும் உள்ள ஹைலெவல் வீதியும் மற்றும் களணி கங்கை பள்ளத்தாக்குப் புகையிரத வீதியும் குறித்த ஸ்தலத்தின் மேற்கு எல்லைப் பகுதியின் ஊடாக சௌகரிகமாக செல்கின்றன. மாகும்புர, கொட்டாவ நகரம் முடிவடையும் இடத்தில் இருந்து சுமார் 1.2 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. கொட்டாவ நகரத்தில் இருந்து ஆரம்பமாகும் 7 உள்ளூர் பேரூந்து வழிகள் இருக்கின்றன. இந்த வழிகளின் ஊடாக மாகாணங்களுக்கு இடையிலான பல பேரூந்துகளும் பயணிக்கின்றன. நிதிகள் கிடைக்கக் கூடிய தன்மையை பொறுப்பு, இந்தக் கருத் திட்டம் பல கட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் வெள்ளப்பெருக்குகள் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு குறித்த கருத் திட்டப் பிரதேசத்தை மண்ணிரப்பி எடுப்பதும் மற்றும் வடிகாலமைப்பு முறைமையை தாபிப்பதும் இ.கா.அ.கூ. தாபனத்தின் பிரதான பணி நோக்கெல்லையாகும்.

MMC தொடர்பான நில அபிவிருத்தி மற்றும் வடிகாலமைப்பு மேம்பாட்டுப் பணிகளுக்கான மேற்பார்வை உள்ளடங்கலாக இ.கா.அ.கூ. தாபனத்தின் ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்புகள் பிரிவு வடிவமைப்பு மற்றும் உசாதுணை சார்ந்த சேவைகளை பொறுப்பேற்று நிறைவேற்றியது. 25 ஆண்டு மீள்வருகை காலப் பகுதி கருத்திற் கொள்ளப்பட்டது. மேலருவிப் பகுதியினுள் நீரை தேக்கி வைப்பதற்கும் மற்றும் ஹைலெவல் வீதிக்கு குறுக்காக இரண்டு மதகுகளை நிர்மாணித்து நீர் வழிந்தோடுவதை கட்டுப்படுத்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள உசாதுணை சார்ந்த பணியின் பெறுமானம்: 8.78 மில்லியன் ரூபா.




உருப்படம் 21: குறித்த ஸ்தலத்தின் ஒட்டுமொத்தத் தோற்றம்



உருப்படம் 22



உருப்படம் 23: MMC கருத் திட்டத்தின் மதகு மற்றும் வடிகாலமைப்பு நிர்மாணப் பணி



உருப்படம் 24: மாகும்புர பலநோக்கு மாதிரிப் போக்குவரத்து நிலையத்திற்கான வடிகாலமைப்பு மேம்பாட்டு பணி தொடர்பான தலைமைத் திட்டம்

14. குடா மற்றும் மகா வஸ்கடுவ பிரதேசத்திற்கான உத்தேச வடிகாலமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

வாடிக்கையாளர் தரப்பு: களுத்துறை மாவட்ட செயலகம்
வடிகவமைப்பு மற்றும் நிர்மாணத் தரப்பு: இ.கா.அ.கூ.
கருத் திட்டத்தின் செலவு: 314 மில்லியன் ரூபா

வஸ்கடுவ பிரதேசத்தில் நிகழும் வெள்ளப்பெருக்கு சார்ந்த பிரச்சினையை அடையாளப்படுத்தும் முகமாக களுத்துறை மாவட்ட செயலகம் விடுத்திருந்த வேண்டுகோளின் பேரில் இந்தக் கருத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. குறித்த கருத் திட்டத்தின் நிமித்தம் கருத்திற் கொள்ளப்படும் இந்தப் பிரதேசம் சுமார் 1.15 கி.மீ^{2} பரப்பளவுடையதாகும். இந்தப் பிரதேசம் 1 ஆம் இலக்கப் புகையிரத நிலையத்தில் இருந்து ஏப்ரு வீதி வரை கிழக்காகவும் மற்றும் கடலுக்கு மேற்காகவும் அமைந்துள்ள காலி வீதியினால் சூழப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடத்திலும் இந்தப் பிரதேசம் கடுமையான வெள்ளப்பெருக்குகளினால் பாதிக்கப்பட்டு வந்துள்ளது.

இது தவிர, மானகல கால்வாயின் கடல் நீர் வெளிப்பாய்ச்சல் பகுதியில் மணல் தடுப்பு உருவாகும் பிரச்சினை அவதானிக்கப்பட்டது. இ.கா.அ.கூ. அந்த மணல் தடுப்பு உருவாகுவதை தடுக்கும் பொருட்டு ஒரு விஷேட நீர் வெளிப்பாய்ச்சல் திட்டத்தை முன்மொழிந்து கடலோரப் பொறியியல் பிரிவில் இருந்து தேவையான அனுமதியை பெற்றுக் கொண்டது. கீழருவிப் பகுதியை நோக்கி நீர் பாய்ந்து செல்லும் கொள்ளளவை அதிகரிக்கும் பொருட்டு புகையிரத மார்க்கத்தின் ஓரமாக மேலதிகக் குறுக்குக் கட்டுமாணங்களை நிர்மாணிக்க விஷேட கவனம் செலுத்தப்பட்டது.

சொந்தக் கருத் திட்டங்கள்


1. இலங்கை மின்சார சபைக்கான (இ.மி.ச.) முத்துராஜவெல 100 ஏக்கர் காணி அபிவிருத்தி

நாடு அவசர நெருக்கடியை எதிர்நோக்கி வருவதால் மின்சாரத்திற்கான தற்போதையை தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு அதிக பல மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகளைத் தாபிப்பதற்கான தேவை இருக்கின்றது. ஆகையால், நிலக் கரி அல்லது டீசல் போன்ற மூலவளங்களைப் பயன்படுத்தி மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகளை நிர்மாணிப்பதை பார்க்கிலும் நிலக் கரி சக்தி மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகள் மிகவும் சுற்றாடல்நேயமானவை என்பதால் ஒரு திரவ நிலை இயற்கை எரி வாயு (LNG) அனல் மின்னுற்பத்திப் பொறித் தொகுதியை நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. அறை வெப்பநிலையில் வாயு வடிவத்தில் இருக்கக் கூடிய இந்த LNG எரி வாயு கடல் மார்க்கமாக எடுத்துச் செல்லப்படும் வகையில் திரவ வடிவத்திற்கு மாற்றப்படுதல் வேண்டும். இந்த LNG எரி வாயு இறக்கப்பட்டதன் பின்னர் வாயு வடிவத்தில் களஞ்சியப் படுத்தப்பட்டு தேவையான மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகளுக்கு குழாய் மார்க்கமாக எடுத்துச் செல்லப்படுகின்றது. இவ்வாறு களஞ்சியப்படுத்தும் இந்தப் பிரிவு மிதவைக் களஞ்சிய ரெகஷிகேஷன் பிரிவு (FSRU) என அழைக்கப்படுகின்றது. இது பொதுவாக ஒரு நுணிப் பகுதியில் நிர்மாணிக்கப்படும். ஆகையால், ஒரு FSRU பிரிவை நிர்மாணிப்பது அதிக செலவு வாய்ந்தது என்பதால் உத்தேச மின்னுற்பத்திப் பொறித் தொகுதிற்கும் மற்றும் களணிதிஸ்ஸ மற்றும் கெரவலப்பிட்டிய ஆகிய இடங்களில் ஏற்கெனவே அமைந்துள்ள மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகளுக்கும் இதே FSRU பிரிவை பயன்படுத்துவதை இலகுபடுத்தும் பொருட்டு, கொழும்பு துறைமுகத்தை அண்மித்த பகுதியில் இரண்டு LNG எரி வாயு மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகளைத் தாபிப்பதற்கு இலங்கை மின்சார சபை (இ.மி.ச.) 100 ஏக்கர் அளவான ஒரு காணியை தேடிப் பெற்றுக் கொள்ள இருந்தது. மேலும், இலங்கையின் பிரதான எரி வாயு ஏற்று நிலையம் மேல் மாகாண பிராந்தியத்தில் அமைந்துள்ளது.

இந்த நோக்கத்தின் நிமித்தம் முத்துராஜவெல சதுப்பு நிலப் பகுதியில் 100 ஏக்கர் அளவான ஒரு காணி இனங்காணப்பட்டுள்ளது. இந்தக் காணி 2 தொகுதிகளைக் கொண்டுள்ளது. தொகுதி I, 55.9 ஏக்கர் அளவுடையதாகும். இந்தக் காணித் தொகுதி இ.கா.அ.கூ. தாபனத்திற்கு உரித்தளிக்கப்பட்டுள்ளது. தொகுதி II, 40.7 ஏக்கர் அளவுடையதாகும். இது வத்தளைப் பிரதேச செயலகத்தின் பாதுகாப்பின் கீழுள்ளது. குறித்த மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகளைத் தாபிக்கும் பொருட்டு இந்தக் காணிகளை இலங்கை மின்சார சபைக்கு (இ.மி.ச.) விடுவித்துக் கொள்வதற்கு ஒரு அமைச்சரவை தீர்மானம் (அமைச்சரவை விஞ்ஞாபன இலக்கம் ஆம் இலக்க 19/0223/113/006 ஆம் 06.02.2019 ஆம் திகதிய) எடுக்கப்பட்டது. தொகுதி I, ஒப்பந்தத் தரப்பு என்ற ரீதியில் இ.கா.அ.கூ. தாபனத்தின் மூலம் அபிவிருத்தி செய்யப்படும். தொகுதி II இ.கா.அ.கூ. தாபனத்தின் மூலம் அபிவிருத்தி செய்யப்பட்டு அதன் பின்னர், பிரதான விலை மதிப்பீட்டு அதிகாரியின் விலை மதிப்பீட்டின் அடிப்படையில் இலங்கை மின்சார சபைக்கு (இ.மி.ச.) குத்தகைக்கு விடுக்கப்படும்.

மேற்குறித்த கருத் திட்டத்தின் காணி அபிவிருத்திப் பணிக்கான EIA அறிக்கையை தயாரிக்கும் விடயம் இ.கா.அ.கூ. தாபனத்தின் மூலம் பொறுப்பேற்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. நீரியல் பற்றிய ஆய்வும் மற்றும் உயிரியல் சுற்றாடல் பற்றிய ஆய்வும் இ.கா.அ.கூ. தாபனத்தின் மூலம் தனது ஊழியர்களை ஈடுபடுத்தி மேற்கொள்ளப்பட்டன. சமூகவியல் பற்றிய ஆய்வு விடயம் வெளித் தரப்புகளுக்கு சாட்டப்பட்டது. HEC RAS, HEC HMS, MIKE11, MIKE 21 மற்றும் MIKE வெள்ளப்பெருக்கு என்பன இந்த ஆய்வுக்கான நீரியல் மாதிரிகளாகும். EIA அறிக்கையை தயாரிப்பதற்கு 11 மில்லியன் ரூபா தொகை செலவாகியது. 26/2/2020 ஆம் திகதி இலங்கை மின்சார சபையுடன் (இ.மி.ச.) நடத்திய சந்திப்பின் போது உடன்பட்டுள்ளவாறு காணியினது அளவின் விகிதாசார அடிப்படையில் இந்த செலலை இங்கை மின்சார சபையும் (இ.மி.ச.) மற்றும் இ.கா.அ.கூ. தாபனமும் பகிர்ந்து கொள்ளும். 2019 ஆம் ஆண்டிற்கு EIA அறிக்கையை தயாரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் பெறுமானம் 3 மில்லியன் ரூபாவாகும்.

அகழ்ந்தெடுக்கப்படும் கடல் மண்ணைப் பயன்படுத்தி காணியை மண்ணிரப்பியெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



உருப்படம் 25: முத்துராஜவெல காணிக்கான வடிகாலமைப்பு முகாமைத்துவத் திட்டம்

2. நடுத்தர வருமான அரச ஊழியர்களுக்கான ராகம வீடமைப்புக் கருத் திட்டத்தின் செயற்படுத்துகையும் மற்றும் உண்மையான காணி உரிமையாளர்களுக்கு மானியம் வழங்கும் பொறிமுறையும்

தேர்ந்தெடுத்த வெள்ளப்பெருக்குகள் தணிப்பு சார்ந்த செயற்பாடுகள், வதிவிடம் மற்றும் வர்த்தகம் சார்ந்த அபிவிருத்தி செயற்பாடுகள் என்பவற்றின் நிமித்தம் இ.கா.அ.கூ. தற்பொழுது ராகமவில் அமைந்துள்ள 20.93 ஹெக்டேயர் (சுமார் 51.7 ஏக்கர்) அளவான ஒரு காணித் துண்டுக்கு உரிமம் கொண்டுள்ளது. ஆகையால், நகரத்திற்கு அண்மித்த பகுதியை கருத்திற் கொள்கின்ற போது குறித்த இடம் ஒரு வீடமைப்பு அபிவிருத்தி கருத் திட்டத்திற்கு மிகவும் பொருத்தமானதாக காணப்படுகின்றது.
மேற்குறித்த விடயங்களை கருத்திற் கொண்டு, இ.கா.அ.கூ. அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் அடங்கலாக பல கட்டிடக் கோபுர கூட்டுஆதன அமைப்பில் ஆகக்கூடிய 400 வீட்டு அலகுகளை உள்ளடக்கி 4.5 ஏக்கர் அளவான குறித்த காணித் துண்டில் அரச ஊழியர்களுக்கான ஒரு நடுத்தர வருமான வீடமைப்பு திட்டத்தை செயற்படுத்த முன்மொழிந்தது.

ஜா - எல பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள மேற்குறித்த காணி அபிவிருத்தி நோக்கங்களின் நிமித்தம் 2018 ஆம் ஆண்டு இ.கா.அ.கூ. தாபனத்தின் மூலம் சுவீகரிக்கப்பட்டுள்ள ஒரு காணியாகும். மேலும், அபிவிருத்தி செய்யப்பட்டதன் பின்னர் குறித்த இந்தக் காணியை கைத்தொழில், வர்த்தக, வீடமைப்பு நோக்கத்திற்கு அல்லது விவசாய நோக்கத்திற்கு ஒதுக்கிக் கொடுக்க இ.கா.அ.கூ. தாபனத்திற்கு அதிகாரத் தத்துவம் உரித்தளிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாரிய அபிவிருத்திக் கருத் திட்டத்தின் ஆரம்பத்தில் இருந்து, உத்தேச அபிவிருத்தியின் நிமித்தம் தமது சொந்த நிலங்களை அர்ப்பணித்த உண்மையான காணி உரிமையாளர்கள் (அனேகமானோர் இன்னும் வீடுகளின் இன்றி இருப்பவர்கள்) ஆகக்குறைந்தது நன்மைகளின் ஒரு பகுதியையாவது தமக்கும் பகிர்ந்தளிக்குமாறு இ.கா.அ.கூ. தாபனத்தை கோரியிந்தார்கள். ஆகையால், இந்த அபிவிருத்திக் கருத் திட்டத்தின் நிமித்தம் தமது காணிகளை அர்ப்பணித்த தனியாள் காணி உரிமையாளர்களின் அத்தகைய காணியின் அளவை விகிதாசார அடிப்படையில் கருத்திற் கொண்டு, புதிதாக நிர்மாணிக்கப்படும் ஒரு வீட்டு உரிமையை வழங்கி, ஒரு மானியத் திட்டத்தை செயற்படுத்த, இ.கா.அ.கூ. பணிப்பாளர்கள் சபை உத்தேசித்தது.

அதற்கிணங்க, பின்வருமாறு இரண்டு தனித்தனி வீடமைப்புக் கருத் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு திட்டமிடப்பட்டுள்ளன.

மானியம் வழங்கல் திட்டத்திற்கான வீடமைப்புக் கருத் திட்டம்

- நடுத்தர வருமானமுடைய அரச ஊழியர்களுக்கான வீடமைப்புக் கருத் திட்டம்

2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் பெறுமானம்:

- மானியம் வழங்கல் திட்டத்திற்கான கட்டடக்கலை வடிவமைப்பு, நிர்மாண வடிவமைப்பு மற்றும் செலவு மதிப்பீடு தயாரித்தல்: 1.0 மில்லியன் ரூபா

- 400 வீட்டு அலகுளுடைய 15 மாடிக் கோபுரத்தின் (நடுத்தர வருமானமுடைய அரச ஊழியர்களுக்கான) கட்டடக்கலை வடிவமைப்பு, ஆரம்ப நிர்மாண வடிவமைப்பு: 9.0 மில்லியன் ரூபா



உருப்படம் 26: நடுத்தர வருமானமுடைய அரச ஊழியர்களுக்கான வீடமைப்புக் கருத் திட்டம்



உருப்படம் 27: முகத்தோற்றப் படம் - மானியம் வழங்கல் திட்டத்திற்கான வீடமைப்புக் கருத் திட்டம்



உருப்படம் 28: மானியம் வழங்கல் திட்டம் - வீடமைப்புக் கருத் திட்டம்

சதுப்பு நில முகாமைத்துவப் பிரிவு

தியசறு பூங்கா

தியசறு ஒரு சதுப்பு நிலமாகும். இது அதன் அழகியல் தோற்றத்திற்கு பாதிப்பு ஏதுமின்றி 2013 ஆம் ஆண்டில் ஒரு பூங்காவாக மாற்றப்பட்டது. இந்த தியசறு பூங்கா கொழும்பு நகரத்தில் அதிகளவான இயற்கை கவர்ச்சிகளுடைய ஒரு பூங்காவாக மாறியுள்ளது. இது சதுப்பு நிலம் சம்பந்தமான CEPA (தொடர்பாடல், கல்வி, பங்கேற்றல் மற்றும் விழிப்புணர்வு) செயற்பாடுகளையும் மற்றும் உள்நாட்டு சுற்றுலா பயணிகளுக்கும் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கும் சுற்றுலா ஸ்தல வசதிகளையும் வழங்கும் ஒரு சதுப்பு நிலக் கேந்திர நிலையமாக காணப்படுகின்றது. இந்தப் பூங்கா ஒரு சதுப்பு நிலமாக இருப்பதால் முலையூட்டிகள், பறவைகள், வண்ணாத்துப் பூச்சிகள், மீன்கள், நீரிலும் நிலத்திலும் வாழும் விலங்குகள், ஊர்வன, மின்மினிப் பூச்சிகள், முதளைகள் மற்றும் தற்காலிக ஆபத்தான விலங்குகள், மீன்களை பிடித்து உண்ணும் பூனைகள் போன்ற வித்தியாசமான விலங்குகளுக்கும் மற்றும் சதுப்பு நில தாவரங்களுக்கும் குடிவாழுவதற்கான வசதிகளை அளிக்கின்றது. இந்த தியசறு சுமார் 65 ஏக்கர் அளவான சதுப்பு நிலப் பிரதேசங்களை உள்ளடக்கியுள்ளது. கற்றல் நிலையம், திறந்த கற்றல் பகுதி, மிதிபலகை நடைபாதைகள், வண்ணாத்துப்பூச்சிப் பூங்கா, சிறுவர் நீர்க்குட்டை, கால்வாய்கள், பறவைகளை பார்க்கக் கூடிய கோபுரம், காத்திருக்கும் பகுதி (ஓய்வெடுக்கும் கூடாரம்), நிலகீழ் நீர் கிணறுகள், விவசாயப் பகுதி, ஆய்வு கூடம், அலுவலகம், டிக்கெட்டுக்களை விநியோகிக்கும் கருமபீடம், வாகனங்கள் நிறுத்துமிடம், களஞ்சிய அறை மற்றும் தொழிலாளர்கள் ஓய்வெடுக்கும் கூடாரம் என்பனவும் இந்தப் பூங்காவில் அமைந்திருக்கின்றன.





விஷேட நிகழ்ச்சிகள்

மக்களை இயற்கையுடன் இணைக்கக் கூடிய வகையில் பிரதானமாக வடிவமைப்பட்டுள்ள வித்தியாசமான குழுக்களுக்கான சதுப்பு நிலங்களை பேணிப் பாதுகாப்பது பற்றிய பல விழிப்புணர்வு சார்ந்த நிகழ்ச்சித் திட்டங்களை தியசறு பூங்கா 2019 ஆம் ஆண்டில் நடத்தியது. ஒரு கண்காட்சி, மர நடுகை நிகழ்ச்சித் திட்டம் மற்றும் சதுப்பு நில சந்தை என்பவற்றை நடத்தியதன் மூலமாக 2019 ஆம் ஆண்டு உலக சதுப்பு நிலங்கள் தினத்தை முன்னிட்டு இ.கா.அ.கூ. தாபனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கொண்டாட்டங்கள் நிகழ்ச்சித் திட்டத் தொடர்களுக்கு இந்தப் பூங்கா பெருமளவில் பங்களித்தது. மேலும், பேராசிரியர் தேவக்க வீரகோன் அவர்கள் சதுப்பு நிலங்களைப் பாதுகாப்பு பற்றிய விரிவுரையை நிகழ்த்தினார்கள். இதே நேரம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கொழும்பு சதுப்பு நில நகர மதிப்பு சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டது. இந்த தியசறு பூங்கா சதுப்பு நில முகாமைத்துவப் பிரிவின் இ.கா.அ.கூ. ஊழியர்களுடன் இணைந்து புத்தாண்டு விழாவை கொண்டாடியது. இந்த தியசறு பூங்கா 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதத்தில் பாடசாலை மாணவர்களுடன் இணைந்து 7 நாட்களாக சிறுவர் தின நிகழ்ச்சித் திட்டத்தை கொண்டாடியது. இது தவிர, புத்திசாதுர்மான உகந்த நகர சதுப்பு நிலப் பாவனை பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்கும் பொருட்டு சுரக்ஷி நிகழ்ச்சித் திட்டம் போன்ற தற்காலிக ஏனைய பல விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களும் இந்தப் பூங்காவினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டன. மேலும், சிறு பிள்ளைகளுக்கும் மற்றும் முதியவர்களுக்கும் மாதத்தின் ஒவ்வொரு மூன்றாம் வாரத்திலும் நடத்தப்படும் ஒரு விஷேட தொணிப்பொருளின் கீழ் வார இறுதி சதுப்பு நில நிகழ்ச்சித் திட்டமும் நடத்தப்படுகின்றது. இந்த நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக அதிக அளவான பார்வையாளர்கள் இந்தப் பூங்காவுடன் இணைக்கப்பட்டனர். மேலும், பல இயற்கை சார்ந்த செயற்பாடுகளின் நிமித்தம் வெளித் தரப்புகளினாலும் இந்தப் பூங்கா பயன்படுத்தப்பட்டது.



சர்வதேசமயப்படுத்தல்

2019 ஆம் ஆண்டானது தியசறு பூங்காவுக்கு சர்வதேச நன்மதிப்பை பெற்றுத்தந்த ஒரு முக்கிய ஆண்டாகும். இ.கா.அ.கூ. தாபனத்தின் சதுப்பு நிலப் பிரிவு ஊழியர்கள், 18 நகர பிதாக்களுடன் நடத்திய ஒரு சுற்று வட்டக் கலந்துரையாடலில் பங்குபற்றினார்கள். இந்தக் கலந்துரையாடல் RAMSAR மாநாட்டுப் பணியகத்தின் மூலம் தென் கொரியாவில் நடத்தப்பட்டது. குறித்த ஆண்டு காலப் பகுதியில் உடனடியாக பல சர்வதேச பிரதிநிதிகள் விஜயம் செய்தனர். நகரப் பூங்காக்களின் அனுபவத்தை பெறும் பொருட்டு 2019 ஆம் ஆண்டில் நகர பிதா வாரியாக பன்சே என்பவரும் விஜயம் செய்திருந்தார்.



நிர்மாணம் மற்றும் பராமரிப்புப் பணிகள்

வசிப்பிடங்கள் மேம்பாட்டுப் பணிகள், பார்வையாளர்களை கவரும் பகுதிகள் மற்றும் புதிய நிர்மாணங்கள் என்பன அடங்கிய பூங்காப் பராமரிப்பு ஊழியர்களின் வசதிகளை மேம்படுத்துவதற்கும் மற்றும் பார்வையாளர்களின் வசதிகளை அதிகமாக மேம்படுத்துவதற்கும் மற்றும் பார்வையாளர்களை கவர்வதற்கும் என இந்தப் பூங்கா பல புதிய பௌதீக அம்சங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. டேர்பிங் பகுதிகள், புதிய மலர்கள் மலரும் பகுதிகள், 500 புதிய சுதேசிய சதுப்பு நிலத் தாவரங்கள் நடுகை, பறவைகளின் வாழ்விடங்கள் சார்ந்த மேம்பாடுகள், நடுகைக்கன்றுகள் நடுகை (2000 வரை), வீட்டுத் தோட்டம்

சார்ந்த மேம்பாடுகள் மற்றும் நடைபாதைகள், நடை பாலங்கள், ஓய்வெடுக்கும் கூடாரங்கள், கற்றல் நிலையங்கள் என்பவற்றின் பராமரிப்பு முதலிய செயற்பாடுகளினால் இந்த அம்சங்கள் மேலும் மெருகூட்டப்பட்டுள்ளன. மேலும், தொழிலாளர்கள் நாளாந்தம் நடைபாதைகளை சுத்தம் செய்தல், அவர்கள் ஒரு வாரத்திற்கு ஒரு தடவை செடிகளைக் கத்தரித்தல், புற்களை வெட்டுதல் மற்றும் கால்வாய்களை ஆள்ரீதியாக சுத்தம் செய்தல் முதலிய வேலைகளும் செய்யப்படுகின்றன. இவை தவிர, மேலும் 2019 ஆம் ஆண்டில், டிக்கெட்டுக்களை விநியோகிக்கும் ஒரு புதிய கருமபீடத்தை நிர்மாணித்தல், சங்கிலித் தொடர் வேலிகளை (முதளைகள் ஊடுருவதை தடுத்தல்) அமைத்தல், பறவைகளை பார்க்கக் கூடிய கோபுரத்தின் கைக் கம்பிகளை பழுதுபார்த்தல், 2 தீவுப் பாலங்களை மீண்டும் நிர்மாணித்தல் என்பன போன்ற ஒரு சில நிர்மாணப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டன.



அபிவிருத்தி

2019 ஆம் ஆண்டு இந்தப் பூங்காவில் இருந்து அண்ணளவாக 9.7 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டது. இது 06 ஆண்டுகள் காலமாக இந்தப் பூங்கா அடைந்துள்ள அபிவிருத்தியைப் பிரதிபலிக்கின்றது. தற்பொழுது இந்த தியசறு பூங்கா சிறுவர்கள், இளைஞர்கள், முதியோர்கள் மற்றும் வெளிநாட்டுப் பயணிகள் ஆகியோருக்கு மத்தியில் பிரபல்லியம் அடைந்துள்ளது. இது இந்தப் பூங்கா நன்கு அபிவிருத்தி அடைந்துள்ளதை சுட்டிக் காட்டுகின்றது. பல தொ.கா. நேப் படங்களும் காட்சிப்படுத்தப்பட்டன. இவை தவிர, இந்தப் பூங்காவின் முகநூல் பக்கம் இந்தப் பூங்காவை விளம்பரப்படுத்தும் முக்கிய கருவிசாதனங்களில் ஒரு கருவிசாதனமாக விளங்குகின்றது.







சதுப்பு நிலங்களைப் பாதுகாத்தல் மற்றும் தாழ்நில அபிவிருத்தி ஆகியவற்றுக்கான வேலையரங்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்

இந்த நிகழ்ச்சித் திட்டம் 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடாந்த நிகழ்ச்சித் திட்டமாக தொடர்ந்தும் நடத்தப்படுகின்றது. காணி அபிவிருத்தி, தாழ்நிலங்கள் பாதுகாப்பு மற்றும் சதுப்பு நிலங்களின் புத்திசாதுர்யமான பாவனை என்பவற்றுடன் சம்பந்தப்படுகின்ற அக்கறையுடைய தரப்பு நிறுவனங்களையும் மற்றும் பொது மக்களையும் விழிப்பூட்டுவது இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும். இந்த ஆண்டு உலக சதுப்பு நிலத் தினம், உலக நீர் தினம் முதலிய விஷேட தினக் கொண்டாட்டங்களும் நடத்தப்பட்டன. சதுப்பு நிலங்களைப் பாதுகாப்பது பற்றி பொது மக்களை விழிப்பூட்டும் 21 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களும் 5.9 மில்லியன் ரூபா மொத்த செலவில் நடத்தப்பட்டன.




களு ஒயா ஆற்றுப் படுக்கைப் பகுதியில் தேர்ந்தெடுத்த வடிகாலமைப்பு மேம்பாட்டுப் பணிகள் மற்றும் களு ஒயா சாத்தியவள ஆய்வின் மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள விரிவான வெள்ளப்பெருக்குகள் தணிப்பு சார்ந்த தெரிவுகள்

ஏற்கெனவேயுள்ள வடிகாலமைப்பு வசதிகள் போதாமையினால் ராகம மருத்துவ பீடப் பகுதியை அண்மித்த பகுதியில் உள்ளூர் ரீதியாக அடிக்கடி வெள்ளப்பெருக்குகள் ஏற்படுகின்றன. ஆகையால், அவ்வாறு ஏற்படுகின்ற வெள்ளப்பெருக்குகளைத் தணிப்பதற்கு ஏற்கெனவேயுள்ள நிர்மாணங்களையும் மற்றும் ஏற்கெனவேயுள்ள வடிகாலமைப்பு வலையமைப்புகளையும் புனர்நிர்மாணிப்பது அத்தியாவசியமாகும்.



பாரிய கருத் திட்டங்களினால் அடையாளப்படுத்தப்படாதுள்ள ராகம நெலும் மாவத்தையில் உள்ளூர் ரீதியாக ஏற்படும் வெள்ளப்பெருக்குகளைத் தணிப்பதற்கான ஒரு திட்டம் 2019 ஆம் ஆண்டில் வடிவமைக்கப்பட்டு அதே ஆண்டின் இறுதிப் பகுதியில் செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. கள ரீதியான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மதகுகளுக்கும் மற்றும் வீதிப் பக்க வடிகாலமைப்புகளுக்கும் தேவையான வடிவமைப்புத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. வடிவமைப்புத் திட்ட அறிக்கை NPD திணைக்களத்தினது அங்கீகாரத்தின் நிமித்தம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. NPD திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் 2020 ஆம் ஆண்டு குறித்த பணியை செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.



கொழும்பு நகரப் பகுதி நீரின் தர முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம்

வானலாவிய அதி உயர்ந்த கட்டிடங்கள் அதிகரித்ததால் கொழும்பு நகரம் துரிதமாக நகரமயமாகி வருகின்றது. இந்த வதிவிடங்களில் இருந்து உருவாகும் கழிவு நீர் அதிகரித்து இறுதியாக அந்த வதிவிடங்களின் / கைத்தொழில்களின் கழிவு நீரை சேகரிப்பதற்கும் மற்றும் சுத்திகரிப்பதற்கும் சரியான ஒரு குழாய்மார்க்க முறைமை வசதி இல்லாததால் அண்மித்த கால்வாய்களினுள் வெளியிடப்படுகின்றது. இது ஏற்கெனவே உக்கிரம் அடைந்து வருகின்ற நிலைமையை பாதிக்கக் கூடிய முக்கியமான ஒரு விடயமாகும். இந்த அதிகளவான புதிய மாசுகள் கவனிக்கப்பட்டு அகற்றப்படாததாலும் மற்றும் நீரேந்து பரப்பினுள் நீரின் தர நிலைமைகள் பற்றிய அறிவு இற்றைப்படுத்தப்படாததாலும், குறித்த இந்தப் பிரச்சினை மேலும் தொடர்ந்து கொழும்பு நகரத்திற்கான இந்த பெறுமதி வாய்ந்த வளம் எனக் குறிப்பிடுவதற்கு முடியாத அளவு இழப்புக்கும் மற்றும் பாரிய சமூக பொருளதார செலவுகளுக்கும் வழிவகுக்கும்.



இ.கா.அ.கூ. தாபனம் குறித்த கால்வாய்கள் மீது நியாயாதிக்க அதிகாரத்தைக் கொண்டுள்ளது. இந்தக் கூட்டுத் தாபனம் இந்தக் கால்வாய்களின் வழமையான பராரிப்புப் பணிகளுக்கும் பிரதானமாக மழை நீரை வடிகாலமைத்து அனுப்புவதற்கும் மற்றும் நீர் மார்க்கங்களை மாசுகள் இன்றி பேணிப் பராமரிப்பதற்கும் பொறுப்புடையதாகும். இ.கா.அ.கூ. தாபனத்தின் நேரடிக் கட்டிப்பாட்டில் வராத மாசுகள் குவியும் கால்வாய் நீரேந்து பரப்புகள் மீதான நியாயாதிக்க அதிகாரத்தை ஏனைய பல நிறுவனங்கள் கொண்டுள்ளன. 1995 ஆம் ஆண்டில் இருந்து CMR பகுதியினுள் காணப்படும் கால்வாய் வலையமைப்பிலுள்ள 24 இடங்களில் அதிக வழியலகுகளின் நிமித்தம் மாதாந்த நீர் சார்ந்த பரிசோதனைகளை இ.கா.அ.கூ. தாபனம் மேற்கொண்டு வந்துள்ளது. நீரேந்து பரப்பு மட்டத்திலும் மற்றும் ஸ்தலத்திலுள்ள கால்வாய்களின் நீர் தர மேம்பாட்டிலும் இலக்குக் கொள்கின்ற திட்டமிடல் முகாமைத்துவ செயற்பாடுகளின் நிமித்தம் குறித்த தரவுகள் படிமுறைப்படுத்தப்படுவதுமில்லை மற்றும் பயன்படுத்தப்படுவதுமில்லை.



ஆகையால், அதிகரித்து வருகின்ற மாசுகளையும் மற்றும் அதனுடன் இணைந்த தாக்கங்களையும் குறைக்கும் பொருட்டு CMR பகுதிற்கு ஒரு நீண்டகால நிலைபெறுதகு நீர் தர முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்தும் தேவை இனங்காணப்பட்டுள்ளது.

ஆகையால், CWQM நிகழ்ச்சித் திட்டம் திட்டமிடப்பட்டு பின்வரும் ஆறு கட்டங்களில் செயற்படுத்தப்பட்டுள்ளது.

(1) பங்காளித்துவங்களை கட்டியெழுப்பல்

(2) பிரச்சினைகளை இனங்காணும் வகையில் கொழும்பு நகர நீரேந்து பரப்பை பெயர்குறித்துப் பிரகடனப்படுத்தல்

(3) குறிக்கோள்களைத் தாபித்து பிரச்சினைகளை இனங்காணுதல்

(4) ஒரு செயற்படுத்துகை நிகழ்ச்சித் திட்டத்தை வடிவமைத்துத் திட்டமிடுதல்

(5) குறித்த திட்டத்தை செயற்படுத்தல்

(6) முன்னேற்றத்தை மீளாய்வு செய்து சீராக்கல்களை மேற்கொள்ளல்



இந்தப் பிரச்சினையின் சிக்கல் வாய்ந்த தன்மையைக் கருத்திற் கொண்டு முழு நீரேந்து பரப்பினதும் நீரின் தர முகாமைத்துவத்திற்கான பரந்த ஒரு நீண்டகால திட்டத்தைத் தயாரிப்பது அவசியமாகும். மாசுபடுத்தும் மூலங்கள் இடம் சார்ந்த மூலங்களாகவும் மற்றும் இடம் சாராத

மூலங்களாகவும் இருக்கலாம். மாசுகளுக்கான காரணங்களும் இணைந்த தாக்கங்களும் ஈடுசெய்வதற்கும் மற்றும் கடுமையாக நீண்டகாலம் நீடித்திருப்பதைக் குறைப்பதற்குமான ஆகக்குறைந்தளவில் இருந்து வேறுபடலாம். ஆகையால், இந்தத் திட்டம், பாதிக்கப்படும் நீரின் தரத்தை மீள்தாபிப்பதற்கும் மற்றும் ஏனைய நீர் நிலைகளினது நீரின் தரத்தைப் பாதுகாப்பதற்கும் பொருத்தமான ஒரு கட்டமைப்பு வசதியை வழங்கக் கூடியதாக இருக்கும்.

மாசுபடுத்தும் மூலங்களை இனங்காணும் பொருட்டு கால்வாய் வலையமைப்பு ஓரமாக கடுமையான கள ரீதியான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கால்வாய்களுக்கு நீர் உட்செல்லும் ஒவ்வொரு பகுதியினதும் நீரின் தரம் பரிசோதிக்கப்பட்டுள்ளது. சேகரிக்கப்பட்டுள்ள தரவுகள் நீரின் தர மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தை தயாரிக்கும் பொருட்டு மதிப்பிடப்பட்டு வருகின்றன.



உள்நாட்டு நீர் மார்க்க போக்குவரத்துக் கருத் திட்டம் (IWT)

இந்தப் பெரும் உள்நாட்டு நீர் மார்க்கப் போக்குவரத்துத் தலைமை திட்டம் உள்நாட்டு நீர் மார்க்கப் பயணிகள் போக்குவரத்தை செயற்படுத்துவதற்கான மூன்று நீர் மார்க்கங்களை இனங்கண்டுள்ளது. இந்த நீர் மார்க்கப் பயண போக்குவரத்து வசதிகள் பின்வருமாறு காணப்படும்:

- கால்வாய் (IW1) ஓரமாக வெல்லவத்தையில் இருந்து பத்தரமுல்ல வரை
- கோட்டையில் இருந்து பேரவெவ ஏரிக்கு (IW2) குறுக்கே யூனியன் ப்ளேஸ் மார்க்கம் வரை
- களணி கங்கை (IW3) ஓரமாக மட்டக்குளியில் இருந்து ஹங்வெல்ல மார்க்கம் வரை

குறித்த தலைமைத் திட்டத்தின் அடிப்படையில், முதலாவது இரண்டு நீர் மார்க்கங்களுக்கும் முற்சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதிக வாகன நெரிசல்கள் காணப்படுகின்ற நேரத்தில் பிரதான போக்குவரத்து வீதிகளில் எழும் வாகனப் போக்குவரத்து நெரிசல்களைக் குறைக்கக் கூடிய பயணிகள் போக்குவரத்திற்காகவும் மற்றும் நீர் மைய பொழுதுபோக்கு சார்ந்த செயற்பாடுகளின் ஊடாக சுய நிலைபெறுதகு கால்வாய் வலையமைப்புக்கு வருமானத்தை ஈட்டுவதற்காகவும் குறித்த உள்நாட்டு நீர் மார்க்கங்களைப் பயன்படுத்துவது இந்தக் கருத் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

கோட்டையில் இருந்து பேரவெவ ஏரிக்கு (IW2) குறுக்காக யூனியன் ப்ளேஸ் மார்க்கம் வரை

பேரவெவ ஏரியில் இருந்து நீர் மார்க்கப் பயணத்தை ஆரம்பிக்கும் வகையில் குறித்த முன்னோடிக் கருத் திட்டம் திட்டமிடப்பட்டிருந்ததால் இரண்டு சௌகரிகமான, மிதக்கக் கூடிய 50 பயணிகள் பயணிக்கக் கூடிய குளிரூட்டிய படகுகள் இலங்கை கடற்படையின் ஒத்துழைப்பில் நிர்மாணிக்கப்பட்டன. படகுப் பயணம் மற்றும் உயிர் காப்பு வசதிகள் ஆகியவற்றின் நிமித்தம் இலங்கை கடற்படையின் உதவியுடன் இந்தக் கருத் திட்டம் 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 22 ஆம் திகதி ஒரு முன்னோடிக் கருத் திட்டமாகவும் இயக்கச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது. வீதிகளில் அதிக வாகன நெரிசல் காணப்படும் காலை 7.30 மணி முதல் 9.30 மணி வரையும் மற்றும் மாலை 3.30 மணி முதல் 6.30 மணி வரையும் கோட்டையில் இருந்து யூனியன் ப்ளேஸ் வரை படகு வசதிகள் பயணப் போக்குவரத்து சார்ந்த சேவைக்காக இந்தப் படகுகள் பயன்படுத்தப்படுகின்றன. எனினும் ஏனைய நேரங்களில் இந்தப் படகுகள் போக்குவரத்து முறைமையின் நிமித்தம் வருமானம் ஈட்டும் பொழுதுபோக்கு சார்ந்த செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்படுகின்றன.



- **கருத் திட்டத்தின் பெயர்:**

உள்நாட்டு நீர் மார்க்கப் போக்குவரத்துக் கருத் திட்டம் (IWT)

- **கருத் திட்டத்தின் நோக்கெல்லை:**

வாகன நெரிசல்களைக் குறைக்கவும் மற்றும் பொழுதுபோக்கு சார்ந்த செயற்பாடுகளின் ஊடாக வருமானம் ஈட்டும் பொருட்டு நீர் நிலைகளை புத்திசாதுர்யமாக பயன்படுத்தவும் கூடிய வகையில் ஏனைய போக்குவரத்து மாதிரிகளுடன் இணைகின்ற பேரவெவ ஏரி ஓரமாக பயணப் படகுகளை சேவையில் ஈடுபடுத்துவது இந்தக் கருத் திட்டத்தின் நோக்கெல்லையாகும்.

- **ஆரம்பித்த திகதி:** 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 22
- **கருத் திட்டத்தின் பெறுமானம்:** 100 மில்லியன் ரூபா

- **2020 ஆம் ஆண்டிற்கும் மற்றும் அதற்கு பின்னரும் உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள்:**

2020:

- IW படகுப் பயணப் போக்குவரத்தை (வெல்லவத்தையில் இருந்து பத்தரமுல்ல வரை) அறிமுகப்படுத்தல்
- பேரவெவ ஏரிக்கு நிலைபெறுதகு நீர் மைய பொழுதுபோக்கு மற்றும் உயிரியல் சுற்றாடல் வசதிகளை அறிமுகப்படுத்தல்

2020 ஆம் ஆண்டிற்கு பின்னர்:

- பேரவெவ ஏரியில் நிரந்தர இறங்குதுறைகளை நிர்மாணித்தல்
- பேரவெவ ஏரியில் நீரூற்றுக்களையும் மற்றும் அழகியல் ரீதியில் இனிமையான விடயங்களையும் அறிமுகப்படுத்தல்
- e-அட்டை முறைமைகளையும் மற்றும் ஸ்மார்ட்டு செயற்பாட்டு வசதிகளையும் பயன்படுத்தல்

- கருத் திட்டங்கள் மற்றும் பிரச்சினைகள்:

- பேரவெவ ஏரி நீரின் தரம் கெடுதல்
- வசதி சார்ந்த சேவைகளுக்கு நிலங்கள் குறைதல்
- பேரவெவ ஏரி உரித்து சார்ந்த பிரச்சினைகள்

சதுப்பு நில அத்துமீறல் செயற்பாடுகள் தடுப்புக் கருத் திட்டம் - கட்டம் I - கொத்தெட்டுவ பகு

கொலன்னாவ சதுப்பு நிலப் பிரதேசத்தில் சுவீகரிக்கப்பட்டுள்ள காணி எல்லையிலும் அதனை

சூழவுள்ள பகுதியிலும் ஒரு நடைபாதையை நிர்மாணித்து அறிமுகப்படுத்தல்

கொழும்பு நகர நீரேந்து பரப்பினுள் நான்கு பிரதான சதுப்பு நிலப் பிரதேசங்களில் சுவீகரிக்கப்பட்டுள்ள காணிக்கு எல்லைகளை குறித்து மீளத்திறக்கும் கருத் திட்டத்தின் பின்னர், அந்த சதுப்பு நிலப் பிரதேசங்களை சூழந்து வாழுகின்ற மக்கள் சட்டவிரோதமாக அத்துமீறல் செயற்பாடுகளில் ஈடுபடுவதால், சுவீகரிக்கப்பட்டுள்ள அந்தக் காணியின் அளவு மிகவும் விரைவாக குறையும் என்பதை இனங்கண்டு கொள்ள முடியும். இந்தப் பிரச்சினைக்கான ஒரு தீர்வாக, நாம் நீர் தேங்கு பிரதேசத்தை பாதுகாக்கும் பொருட்டு சுவீகரிக்கப்பட்டுள்ள காணி எல்லை ஓரமாக ஒரு நடைபாதையை அமைப்பதற்குத் தீர்மானித்தோம். இதன் 1-வது கட்டமாக, PP CO 7415 ஆம் இலக்க பூர்வாங்க நில வரைபு திட்டத்தின் மூலம் கொலன்னாவ பிரதேசத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள சதுப்பு நிலப் பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டது.

சுற்றளவின் மொத்த நீளம் 4000 மீ.

2019 ஆம் ஆண்டு அடைந்த முன்னேற்றம்

இந்தக் கருத் திட்டம் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டதால் குறித்த ஆண்டின் இறுதிப் பகுதியில் பின்வரும் விடயங்கள் நிறைவு செய்யப்பட்டன.

பணி நோக்கெல்லை	2019 நவம்பர் மாதம் வரையான முன்னேற்றம்	மேற்கொள்ளப் பட்டுள்ள பணியின்
ஒரு அம்பிபியஸ் இந்திரத்தின் மூலம் அகழ்ந்தெடுத்த மூலப்பொருட்களை பயன்படுத்தி நடைபாதையை அமைத்தல் மற்றும் சதுப்பு நிலங்களை அகழ்தல்	நிறைவு செய்யப் பட்டுள்ளது (1150 மீ) (எல்லைப் பிரச்சினை இருப்பதால் பல இடங்கள் தவிர)	12,286,452.26
இடித்துத் தள்ளிய மூலப்பொருட்களை பயன்படுத்தி நடைபாதையை அமைத்தல்	பணி நிகழ்கின்றது (76 மீ நீளம் நிறைவு செய்யப் பட்டுள்ளது)	
முன்கூட்டி வார்த்தெடுத்த 450 x 450 மிமீ U வடிவ வடிகாலமைப்பு சாதனத்தை எல்லை ஓரமாக இடுதல்	-	
கால்வாய்க்கு நீரை வெளியிடும் வகையில் 100மீ இடைவெளியில் பிடி குழிகளை நிர்மாணித்தல் மற்றும் குழாய்களை பொருத்துதல்	-	
தனியார் காணிகளையும் மற்றும் அரசாங்கம் சுவீகரித்துள்ள காணிகளையும் வேறாக்கும் பொருட்டு சங்கிலித் தொடர் வேலியை அமைத்தல்	-	

பியகம பட்டிவில சதுப்பு நிலப் பிரதேச சுற்றாடல் தர மேம்பாடு

வாடிக்கையாளர் தரப்பு: தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை


பியகம WTP இன் பயன்தகு நீர் சுத்திகரிப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு பட்டிவில சதுப்பு நிலப் பிரதேச நீரின் தரத்தை மேம்படுத்துவது இந்தக் கருத் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

களணி கங்கை வலது ஆற்றங்கரை நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி (பியகம நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி) அத்தகைய ஒரு வகையான நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியாகும். கம்பஹா மாவட்டத்திற்கு பாதுகாப்பான தூய குடிநீரை வழங்கும் நோக்கில் இந்த நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி திட்டமிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளது.


பியகம நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி நீர் உட்செல் பாகத்தின் அதி மேலருவிப் பகுதியில் அமைந்துள்ள பட்டிவில கால்வாயில் இருந்து உருவாகும் அசுத்த நீர் சுத்திகரிப்புக்காக பயன்படுத்தப்படும் நீரின் தரத்தை பாதிக்கின்ற அத்தகைய ஒரு பிரதான மாசு மூலமாகும். அந்த அசுத்தமான நீர், சமூகத்திலும் பொருளாதாரத்திலும் மற்றும் உயிரியல் சுற்றாடலிலும் பல பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தக் கூடும். பட்டிவில கால்வாயில் இருந்து உருவாகும் கடினமான எண்ணெய் அசுத்தங்களும் மற்றும் இயற்கை மாசுகளும் நீர் சுத்திகரிப்பு செயல்முறையை செயலிழக்க செய்யலாம்.

ஆகையால், இந்தக் கருத் திட்டத்தின் உடாக, பட்டிவில கால்வாயினதும் மற்றும் அதனை அண்மித்த சதுப்பு நிலப் பகுதியினதும் ஏற்கெனவேயுள்ள நிலைமையை மதிப்பிடுவதற்கும் மற்றும் ஒரு சுற்றாடல் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தை முன்மொழிந்து செயற்படுத்துவதற்கும் மற்றும் பட்டிவில கால்வாயினதும் அதனை அண்மித்த சதுப்பு நிலப் பகுதியினதும் நீரின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு அந்த சதுப்பு நிலப் பகுதியிலுள்ள வடிகாலமைப்பு முறைமையை மேம்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.


கருத் திட்டப் பிரதேசம்



முறையியல்



வடிகாலமைப்புப் பிரேரணைத் திட்டம்



ஒப்பந்தத் தொகை: 27,371,410.00 ரூபா **31/12/2019 வரை அடைந்துள்ள முன்னேற்றம்:** 6,087,477.00 ரூபா

கால்வாய் புனர்நிர்மாணப் பணி



சுற்றாடல் மேம்பாடு பற்றிய ஆய்வு (நீரின் தரத்திற்காக நீரை சேகரித்தல்)



செயற்படுத்தும் பிரிவுகளை மாகாண மட்டத்தில் தாபித்தல்

இ.கா.அ.கூ. தாபனத்தினது 2006 இன் 35 ஆம் இலக்கத் திருத்தல் சட்டத்தின் இரண்டாம் பிரிவின் கீழ், மாகாண மட்டத்தில் தாழ்நிலப் பிரதேசம், சதுப்பு நிலப் பிரதேசம், ஈரப் பிரதேசம், தரிசு நிலப் பிரதேசம் முதலிய பிரதேசங்களைப் பிரகடனப்படுத்துவதற்கும் மற்றும் சட்டவிரோதமாக காணிகளை மண்ணிரப்பியெடுத்தல், கால்வாய்களையும் மற்றும் உள்ளக நீர் நிலைகளையும் மாசுபடுத்துதல் மற்றும் கால்வாய் ஒதுக்கம் மற்றும் நீர் தேங்கு பிரதேசங்கள் என பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் அதிகாரபூர்வமற்ற சட்டவிரோதமான நிர்மாணங்களை நிர்மாணித்தல் போன்ற செயற்பாடுகளுக்கு சட்டநடவடிக்கையை எடுப்பதற்கும் இ.கா.அ.கூ. சட்டத்தின் கீழ் இந்தக் கூட்டுத் தாபனத்திற்கு அதிகாரத் தத்துவம் உரித்தளிக்கப்பட்டுள்ளது.

மேற்கொள்ள வேண்டிய பணி நோக்கெல்லையும் மற்றும் பரிமாணமும் கணிசமானளவு அதிகரித்துள்ளன. ஆகையால் இந்தக் கூட்டுத் தாபனத்தின் நிறுவன சார் ஆற்றலை விஸ்தரிப்பது மிகவும் முக்கியமான இன்றியமையாத ஒரு தேவைப்பாடாகும்.

சட்டவிரோதமாக மண்ணிரப்பியெடுக்கும் ஸ்தலங்களும் மற்றும் மண்ணிரம்பும் ஸ்தலங்களும் சோதனையிடப்படுதல் வேண்டும்.

மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள் மற்றும் மாகாண சபைகள் என்பவற்றில் நடத்தப்படும் கூட்டங்களில் இந்தக் கூட்டுத் தாபனம் கலந்து கொள்ள வேண்டும்.

CEA, UDA, ID முதலியவற்றின் மாவட்ட மற்றும் மாகாண அலுவலகங்களில் நடத்தப்படும் கூட்டங்களிலும் இந்தக் கூட்டுத் தாபனம் கலந்து கொள்ள வேண்டும்.

விஷேட கருத் திட்டங்கள் பிரிவு

வரைபுகளைத் தயாரித்து மழை நீர் வடிகாலமைப்புத் திட்டங்களை மேற்கொள்ளும் வகையில் இந்த விஷேட கருத் திட்டங்கள் பிரிவு கருத் திட்டங்களை பொறுப்பேற்று நிறைவேற்றுகின்றது. செலவு மதிப்பீடுகள் மற்றும் கேள்வி ஆவணங்கள் என்பவற்றை தயாரித்தல், செயற்படுத்துகைப் பணியை முகாமை செய்தல் / மேற்பார்வை செய்தல் மற்றும் அநேகமாக நீரியல் / நீர்வலு சார்ந்த பணிகள் என்பன இந்தப் பிரிவு பொறுப்பேற்று நிறைவேற்றும் பணிகளில் அடங்குகின்றன. 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

• வெளிநாட்டு நிதியிடப்பட்டுள்ள கருத் திட்டங்கள்
1. கொழும்பு மாநகர அபிவிருத்தி கருத் திட்டம் (உலக வங்கி நிதியிட்டுள்ள கருத் திட்டம்)
• திறைசேரி நிதியிட்டுள்ள கருத் திட்டங்கள்
2. மாதிவெல தெற்கு நீர்திருப்புகை திட்டத்திற்கான வடிகாலமைப்பு பற்றிய ஆய்வு

வெளிநாட்டு நிதியிடப்பட்டுள்ள கருத் திட்டங்கள்

1. கொழும்பு மாநகர அபிவிருத்தி கருத் திட்டம் (MCUDP)

கொழும்பு நகரத்திலும் மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளிலும் வெள்ளப்பெருக்குகள் பல ஆண்டுகளாக நிகழ்ந்து வருகின்றன. இந்த வெள்ளப்பெருக்குகளினால் அதிகமான மக்களுக்கு கணிசமானளவு பொருளாதார இடையூறுகளும் மற்றும் கணிசமானளவு சமூக கஷ்டங்களும் ஏற்படுகின்றன.

கொழும்பு நகரப் பகுதி நீர் நிலைகளின் வடிகாலமைப்பு முகாமைத்துவ முறைமை மற்றும் வெள்ளப்பெருக்குக் கட்டுப்பாடு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் என்பவற்றை மேம்படுத்துவதிலும் மற்றும் கொழும்பு மாநகரப் பிரதேசத்தில் உட்கட்டமைப்பு வசதிகளையும் மற்றும் சேவைகளையும் வழங்கி அவற்றை முகாமை செய்யக் கூடிய வகையில் மத்திய அரசாங்க நிறுவனங்களினதும் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களினதும் ஆற்றல்களையும் மற்றும் திறன்களையும் மேம்படுத்துவதிலும் இந்த MCUDP கருத் திட்டம் இலக்குக் கொள்கின்றது.

இந்த MCUDP கருத் திட்டத்தில் இரண்டு பிரதான பிரிவுகள் உள்ளடங்குகின்றன.
பிரிவு 1: வெள்ளப்பெருக்குகள் மற்றும் வடிகாலமைப்பு முகாமைத்துவம்

பிரிவு 2: மாநாகர மற்றும் உள்ளூராட்சி மன்ற உட்கட்டமைப்பு வசதிகளையும் மற்றும் சேவைகளையும் நிலைபெறுதகுந்ததாக வழங்குவதற்கும் மற்றும் உதவித் திட்டங்களை செயற்படுத்துவதற்கும் நிறுவனங்களை வலுப்படுத்தல்

வெள்ளப்பெருக்குகள் மற்றும் வடிகாலமைப்பு முகாமைத்துவம் இலங்கைக் காணி அபிவிருத்தி கூட்டுத் தாபனத்தின் (இ.கா.அ.கூ.) கீழ் செயற்படுத்தப்படுகின்ற பிரதான பிரிவாகும். கொழும்பு மாநகரப் பிராந்தியத்தில் காணப்படும் வடிகாலமைப்பு முறைமையை மேம்படுத்தும் பொருட்டு முக்கியம் என இனங்காணப்பட்டுள்ள முந்துரிமை வாய்ந்த வெள்ளப்பெருக்கு மற்றும் வடிகாலமைப்பு முகாமைத்துவ உட்கட்டமைப்பு வசதிகளை புனர்நிர்மாணித்து மேம்படுத்த, இந்தக் கருத் திட்டப் பிரிவு துணையாக அமையும். இந்தக் கருத் திட்டப் பிரிவு பிரதானமாக ஏற்கெனவேயுள்ள வடிகாலமைப்பு முறைமைகளின் நீர் வெளிச்செல் கொள்ளளவுகளை அதிகரிப்பதிலும் மற்றும் புதிய நீர்திருப்புகைக் கால்வாய் மார்க்கங்களையும் மற்றும் மழை நீரை இறைக்கும் நிலையங்களையும் அறிமுகப்படுத்துவதிலும் கவனம் செலுத்தும்.

குறித்த இந்தக் கருத் திட்டம் இந்தக் கூட்டுத் தாபனத்தின் கருத் திட்ட முகாமைத்துவப் பிரிவினால் முகாமை செய்யப்படுகின்றது. வெள்ளப்பெருக்கு மற்றும் வடிகாலமப்புப் பிரிவை செயற்படுத்தும் பிரதான முகவர்நிலையம் இ.கா.அ.கூ. தாபனமாகும்.

இந்த MCUDP கருத் திட்டத்தின் கீழ் இ.கா.அ.கூ. தாபனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள உப கருத் திட்டங்கள் கீழே பட்டியல்படுத்தப்பட்டு காட்டப்பட்டுள்ளன.

இல.	உப கருத் திட்டம்
நிறைவு செய்யப்பட்டுள்ள உப கருத் திட்டங்கள்	
1	தெஹிவளைக் கால்வாய்
2	பிரதான வடிகாலமைப்பு மற்றும் முத்துவெல் சுரங்கவழி
3	புனித செபஸ்தியன் தெற்குக் கால்வாய்
4	தலங்கம குளத்தை அகழ்ந்து துப்புரவாக்கல்
5	வெல்லவத்தைக் கால்வாய்
6	மேம்பாட்டுப் பணிகள் - MED - II
7	மேம்பாட்டுப் பணிகள் - MED - I
8	புனித செபஸ்தியன் வட கால்வாய்
9	கொலன்னாவக் கால்வாய் நீர்திருப்புகைத் திட்டம் - II
நிகழும் உப கருத் திட்டங்கள்	
10	மேம்பாட்டுப் பணிகள் - MED - III
11	புனித செபஸ்தியன் வட பூட்டுக் கதவுகளினதும் மற்றும் நீரிறைக்கும் நிலையத்தினதும் வடிவமைப்பு மற்றும் நிர்மாணம்
12	புதிய முத்துவெல் மற்றும் டொரிங்டென் சுரங்கவழி
13	புனித செபஸ்தியன் தெற்கு நீரிறைக்கும் நிலையத்தின் நிர்மாணம்
14	அம்பதலே நீரிறைக்கும் நிலையம்
15	கொலன்னாவக் கால்வாய் நீர்திருப்புகைத் திட்டம் - III
16	ஒன்றிணைந்த சரியான நேர வெள்ளப்பெருக்கு முகாமைத்துவ (RTC) முறைமை வசதிகள் விநியோகம் மற்றும் நிறுவுகை
17	கொலன்னாவக் கால்வாய் நீர்திருப்புகைத் திட்டம் - I
18	கொலன்னாவ நீர்திருப்புகைத் திட்டம் - IV
19	நீரின் தர மேம்பாட்டிற்கான நீரடித்து விடும் கதவுகளின் வடிகமைப்பு மற்றும் நிறுவுகை

நிறைவு செய்யப்பட்டுள்ள (2019 ஆம் ஆண்டிற்கு முன்னர்) உப கருத் திட்டங்கள்

1.1. தெஹிவளைக் கால்வாயின் கால்வாய் கரைப் பகுதிப் பாதுகாப்பு நிர்மாணப் பணிகள்

கருத் திட்டத்தின் பெறுமானம்: 128,205,449.45 ரூபா
ஆரம்பித்த திகதி: 20.05.2013
நிறைவு செய்த திகதி: 27.02.2015

- இந்த உப கருத் திட்டத்தில் பின்வரும் பிரதான பணி நோக்கெல்லைகள் உள்ளடங்குகின்றன.
- கால்வாய் கரைப் பகுதிப் பாதுகாப்பு
- இயக்கச் செயற்பாட்டுப் பராமரிப்பு (இ.ப.) வீதிகளினதும் மற்றும் பக்க வடிகாலமைப்புகளினதும் புனர்நிர்மாணப் பணிகள்
- கால்வாய் ஓரத்தில் இருந்து பாறைப் பயிர்களை அகற்றல்



1.2. அளுத் மாவத்தை மதகு, முத்துவெல் பெட்டி வடிவ வடிகாலமைப்பு, முகத்துவெல் சுரங்கவழிக் கால்வாய் என்பவற்றின் நிர்மாணம் மற்றும் முத்துவெல் கடல் நீர் வெளிச்செல் பகுதி மேம்பாட்டுப் பணிகள் மற்றும் பிரதான வடிகாலமைப்பு முறைமையின் கால்வாய் கரைப் பகுதிப் பாதுகாப்பு பணிகள்

கருத் திட்டத்தின் பெறுமானம்: 342,438,294.31 ரூபா
ஆரம்பித்த திகதி: 27.11.2012
நிறைவு செய்த திகதி: 31.10.2014

இந்தக் கருத் திட்டத்தில் பின்வரும் பிரதான பணி நோக்கெல்லைகள் உள்ளடங்குகின்றன.

- கால்வாய் கரைப்பகுதிப் பாதுகாப்புப் பணிகள்
- அளுத் மாவத்தை மதகு மீள்நிர்மாணப் பணிகள்
- உட்செல் சுரங்கவழி புனர்நிர்மாணப் பணிகள்
- கடல் நீர் வெளிச்செல் பகுதி புனர்நிர்மாணப் பணிகள்
- பெட்டி வவெ வடிகாலமைப்பு வசதிகள் முறைமையை துப்புரவு செய்யும் பணிகள்
- கால்வாய்களை அகழந்து துப்புரவாக்கும் பணிகள்





1.3. புனித செபஸ்தியன் தெற்குக் கால்வாயின் கால்வாய் பாதுகாப்பு நிர்மாணப் பணிகள்

கருத் திட்டத்தின் பெறுமானம்: 194,965,674.59 ரூபா
ஆரம்பித்த திகதி: 27.10.2014
நிறைவு செய்த திகதி: 20.06.2016

இந்தக் கருத் திட்டத்தில் பின்வரும் பிரதான பணி நோக்கெல்லைகள் உள்ளடங்குகின்றன.

- கால்வாய் கரைப் பகுதிப் பாதுகாப்புப் பணிகள்
- இ.ப. வீதியினதும் மற்றும் பக்க வடிகாலமைப்புகளினதும் நிர்மாணப் பணிகள்
- கால்வாய்களை அகழ்ந்து துப்புரவாக்கும் பணிகள்



1.4. காலி வீதிப் பாலத்தடியிலுள்ள வெல்லவத்தைக் கால்வாய்க்கான நீர் காவிச்செல் கொள்திறன் மேம்பாட்டுப் பணிகள்

கருத் திட்டத்தின் பெறுமானம்: 111,570,072.22 ரூபா
ஆரம்பித்த திகதி: 21.07.2016
நிறைவு செய்த திகதி: 27.11.2017

இந்த உப கருத் திட்டத்தில் பின்வரும் பிரதான பணி நோக்கெல்லைகள் உள்ளடங்குகின்றன.

- தகட்டுத் தூணிடும் மற்றும் கனைகளை இட்டு மூடும் பணிகள்
- மண்ணாலான தடைகளை அகற்றும் பணிகள்
- கால்வாய்களை அகழ்ந்து துப்புரவாக்கும் பணிகள்



1.5. தலங்கமக் குளத்தை அகழ்ந்து துப்புரவாக்கும் பணிகள்

கருத் திட்டத்தின் பெறுமானம்: 107,283,697.70 ரூபா
ஆரம்பித்த திகதி: 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம்
நிறைவு செய்த திகதி: 31.08.2017

இந்த உப கருத் திட்டத்தில் பின்வரும் பிரதான பணி நோக்கெல்லைகள் உள்ளடங்குகின்றன.

- வெல் அத்த மரங்களை அகற்றல்
- வெல் அத்த மரங்களின் வேர்களை அகற்றல்
- நிலகீழ் நீரை அகழ்ந்து துப்புரவாக்கல்
- அகற்றப்பட்டதும் மற்றும் அகழ்ந்து துப்புரவாக்கப்பட்டதுமான பொருட்களை அகற்றல்




1.6. மாதிவெலக் கிழக்கு நீர்திருப்புகைத் திட்டத்திற்கான மேம்பாட்டுப் பணிகள்: கட்டம் - II

கருத் திட்டத்தின் பெறுமானம்: 106,798,220.87 ரூபா
ஆரம்பித்த திகதி: 16.12.2016
நிறைவு செய்த திகதி: 04.12.2018

இந்த உப கருத் திட்டத்தில் பின்வரும் பிரதான பணி நோக்கெல்லைகள் உள்ளடங்குகின்றன.

- கேபியன் சுவர்களை நிர்மாணித்தும் மற்றும் ரெனோமீற்றர்களை நிறுவியும் கால்வாய் கரைப் பகுதிகளை பாதுகா ாத்தல்
- இ.பா. வீதியினதும் மற்றும் பக்க வடிகாலமைப்புகளினதும் புனர்நிர்மாணம்
- பக்க வடிகாலமைப்புகளுக்கான நீர்வீழ்ச்சி வடிவ சாய் கட்டுமாணங்களின் நிர்மாணம்
- கால்வாய்களை அகழ்ந்து துப்புரவாக்கல்





<u>நிறைவு செய்யப்பட்டுள்ள (2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில்) உப கருத் திட்டங்கள்</u>

1.7. புனித செபஸ்தியன் வட கால்வாயின் கால்வாய் கரைப் பகுதிப் பாதுகாப்பு நிர்மாணப் பணிகள்

கருத் திட்டத்தின் பெறுமானம்: 322,500,102.88 ரூபா
ஆரம்பித்த திகதி: 22.05.2017
நிறைவு செய்த திகதி: 29.01.2019

இந்த உப கருத் திட்டத்தில் பின்வரும் பிரதான பணி நோக்கெல்லைகள் உள்ளடங்குகின்றன.

- கேபியர் சுவர்களை நிர்மாணித்தும் மற்றும் தகட்டுத் தூண்களை அமைத்தும் கால்வாய் கரைப் பகுதிகளைப் பாதுகாத்தல்
- இ.ப. வீதி, நடைபாதை மற்றும் பக்க வடிகாலமைப்பு என்பவற்றின் நிர்மாணம்
- கால்வாய்களை அகழ்ந்து துப்புரவாக்கல்


1.8. மாதிசெவலக் கிழக்கு நீர்திருப்புகைத் திட்டத்திற்கான மேம்பாட்டுப் பணிகள்: கட்டம் - I

கருத் திட்டத்தின் பெறுமானம்: 167,873,795.03 ரூபா
ஆரம்பித்த திகதி: 10.10.2016
நிறைவு செய்த திகதி: 31.01.2019

இந்த உப கருத் திட்டத்தில் பின்வரும் பிரதான நோக்கெல்லைகள் உள்ளடங்குகின்றன.

- கால்வாய் கரைப் பகுதிப் பாதுகாப்புப் பணிகள்
- இ.ப. வீதியினதும் மற்றும் பக்க வடிகாலமைப்புகளினதும் நிர்மாணப் பணிகள்
- கதவு முறைமையுடைய புதிய மதகு நிர்மாணப் பணிகள்
- நீர்மார்க்கங்களை அதிகரித்தல்
- புதிய சாய் கட்டுமாண நிர்மாணப் பணிகள்
- தடையாகவுள்ள ஏற்கெனவேயிருக்கின்ற சாய் கட்டுமாணங்களை அகற்றல்
- கால்வாய்களை அகழ்ந்து துப்பரவாக்கல்

கருத் திட்டப் பிரதேசம்



நிகழும் பணி



1.9. கொலன்னாவக் கால்வாய் நீர்திருப்புகைத் திட்டம் - கட்டம் II

ஒப்பந்தத் தரப்பு: எட்வெர்ட் என்ட் க்ரிஸ்ட்டி
ஒப்பந்தத்தின் பெறுமானம்: 282,740,936.50 ரூபா
ஆரம்பித்த திகதி: 27.12.2017
நிறைவு செய்த திகதி: 15.10.2019

இந்த உப கருத் திட்டத்தில் பின்வரும் பிரதான பணி நோக்கெல்லைகள் உள்ளடங்குகின்றன.

- இ.பா. வீதி மற்றும் பக்க வடிகாலமைப்புகள் அடங்கலாக கால்வாய் கரைப் பகுதிப் பாதுகாப்புப் பணிகள்
- குறுக்குப் பெட்டி வடிவ மதகுகளினதும் மற்றும் குழாய்மார்க்க மதகுகளினதும் நிர்மாணம்
- கால்வாய்களை அகழ்ந்து துப்புரவாக்கல்



நிகழும் உப கருத் திட்டங்கள்

1.10. மாதிவெலக் கிழக்கு நீர்திருப்புகைத் திட்டத்திற்கான மேம்பாட்டுப் பணிகள்: கட்டம் - III

ஒப்பந்தத் தரப்பு: E என்ட் C கோமுதி JV
ஒப்பந்தத்தின் பெறுமானம்: 344,577,482.70 ரூபா
ஆரம்பித்த திகதி: 11.01.2017
நிறைவு செய்ய எதிர்பார்த்த திகதி: 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம்

இந்த உப கருத் திட்டத்தில் பின்வரும் பிரதான பணி நோக்கெல்லைகள் உள்ளடங்குகின்றன.

- ஏற்கெனவேயிருக்கின்ற பிராதான வெள்ளப்பெருக்கு கட்டுப்பாட்டு கதவு நிர்மாணத்தின் மடி கதவுகளினது புனர்நிர்மாணப் பணிகள்
- இரண்டாம்நிலைத் துணைக் கால்வாய்க்கான புதிய வெள்ளப்பெருக்கு கட்டுப்பாட்டுக் கதவு நிர்மாணப் பணிகள் மற்றும் புதிய கதவுகள் நிறுவுகைப் பணிகள்
- இ.ப. வீதி மற்றும் பக்க வடிகாலமைப்புகள் அடங்கலாக கால்வாய் கரைப் பபகுதிப் பாதுகாப்புப் பணிகள்
- தே.நீ.வ.ச. சபைக்கு சொந்தமான நீர் மார்க்கங்களை அதிகரித்தல் மற்றும் புதிய குழாய்மார்க்க ஆதரவுக் கட்டுமாணங்களை நிர்மாணித்தல்
- நீரோட்டத்திற்கு பிரதான தடையாக அமைகின்ற நீர்ப்பாசன திணைக்களத்திற்கு சொந்தமான கதவு நிர்மாணங்களை அகற்றல்
- லோ லெவல் வீதிப் பாலத்தின் ஒரு மேலதிக வளை பகுதியை திறத்தல்

கருத் திட்டப் பிரதேசம்





1.11. புனித செபஸ்தியன் வட பூட்டுக் கதவினதும் மற்றும் நீரிறைக்கும் நிலையத்தினதும் வடிகவமைப்பு மற்றும் நிர்மாணப் பணிகள்

ஒப்பந்தத் தரப்பு: சைனா ஜியோ என்ஜினியரிங் கார்பரேஷன்
ஒப்பந்தத்தின் பெறுமானம்: 9,766,653.08 அ.டொ. + 473,212,403.68 இ.ரூ.
ஆரம்பித்த திகதி: 01.06.2017
நிறைவு செய்ய எதிர்பார்த்த திகதி: 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம்
நீரிறைக்கும் கொள்திறன்: 30 மீ/செக்கன் இது 5 எண்ணிக்கையான 6மீ3/செக்கன் என்ற அளவுக்கு நீரை இறைக்கக் கூடிய பாம்பிகளைக் கொண்டுள்ளது.

இந்த உப கருத் திட்டத்தில் பின்வரும் பிரதான பணி நோக்கெல்லைகள் உள்ளடங்குகின்றன.

- கதவுக் கட்டுமாண நிர்மாணம் மற்றும் புதிய நிலைக்குத்தான கதவுகளைப் பொருத்துதல்
- நீரோட்டத்திற்கு பிரதானமாக தடையாக அமைகின்ற ஏற்கெனவேயிருக்கின்ற நிர்மாணங்களை அகற்றல்
- திரைகளும் மற்றும் ஏனைய தேவையான உபகரணங்களும் அடங்கலாக புதிய நீரிறைக்கும் நிலையத்தின் நிர்மாணப் பணிகள் மற்றும் நீரிறைக்கும் பாம்பிகளின் நிறுவுகைப் பணிகள்
- கால்வாய் கரைப் பகுதிப் பாதுகாப்புப் பணிகள்
- கால்வாய்களை அகழ்ந்து துப்புவராக்கல்





1.12. டொரிங்டென் சுரங்கவழியினதும் மற்றும் புதிய முத்துவெல் சுரங்கவழியினதும் வடிவமைப்பு மற்றும் நிர்மாணப் பணிகள்

ஒப்பந்தத் தரப்பு: சைனா பெற்றோலியம் பைப்லைன் இன்ஜினியரிங் கம்பனி லிமிற்றட்
ஒப்பந்தத்தின் பெறுமானம்: 32,098,189 அ.டொ. + 246,060,603.00 இ.ரூ.
ஆரம்பித்த திகதி: 30.05.2018
நிறைவு செய்ய எதிர்பார்த்த திகதி: 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம்
புதிய முத்துவெல் சுரங்கவழி: 3 மீ விட்டம், 700 மீ நீளம், கொள்திறன் 15 மீ3/செக்கன்
டொரிங்டென் சுரங்கவழி: பிரதான சுரங்கவழியின் விட்டம் 3மீ (1100 மீ நீளம்), ஸ்பைன் வலையமைப்பும் மற்றும் பக்க சுரங்கவழி வலையமைப்பும் இங்கு காணப்படுகின்றன. (1.2 மீ - 2.0 மீ விட்டம்; 2500மீ நீளம்), கொள்திறன் 32 மீ3/ செக்கன்

இந்த உப கருத் திட்டத்தில் பின்வரும் பிரதான பணி நோக்கெல்லைகள் உள்ளடங்குகின்றன.

- நீர் உட்செல் மார்க்கத்தின் நிர்மாணம்
- ஏற்கைக் கனை நிர்மாணம்
- நீர் வெளிச்செல் மார்க்கத்தின் நிர்மாணம்
- சுரங்கம் துளைத்தல்
- சுரங்கவழிகளின் நிர்மாணம்





1.13. அம்பதலே நீரிறைக்கும் நிலையத்தின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணம்

ஒப்பந்தத் தரப்பு: சால்கொன் இன்ஜினியரிங் பெர்ஹாட்
ஒப்பந்தத்தின் பெறுமானம்: 5.85 மில்லியன் அ.டொ. + 1,181.53 மில்லியன் இ.ரூ.
ஆரம்பித்த திகதி: 03.09.2018
நிறைவு செய்ய எதிர்பார்த்த திகதி: 2020 ஆம் ஆண்டு யூலை மாதம்
நீரிறைக்கும் கொள்திறன்: 20 மீ3/ செக்கன் இது 4மீ3/ செக்கன் நீரிறைக்கும் கொள்திறனுடைய 5 எண்ணிக்கையான நீரிறைக்கும் பாம்பிகளைக் கொண்டுள்ளது

இந்த உப கருத் திட்டத்தில் பின்வரும் பிரதான பணி நோக்கெல்லைகள் உள்ளடங்குகின்றன.

- ஏற்கெனவேயுள்ள கதவு நிர்மாணத்திற்கு புதிய நிலைக்குத்தான கதவுகளைப் பொருத்தல்
- திரைகளும் மற்றும் ஏனைய தேவையான உபகரணங்களும் அடங்கலாக புதிய நீரிறைக்கும் நிலையத்தின் நிர்மாணப் பணிகள் மற்றும் நீரிறைக்கும் பாம்பிகளின் நிறுவுகைப் பணிகள்
- கால்வாய் கரைப் பகுதிப் பாதுகாப்புப் பணிகள்

1.14. புனித செபஸ்தியன் தெற்கு நீரிறைக்கும் நிலையத்தின் நிர்மாணம்

ஒப்பந்தத் தரப்பு: சைனா ஜியோ என்ஜினியரிங் கார்பரேஷன்
ஒப்பந்தத்தின் பெறுமானம்: 5,934,884.90 அ.டொ. + 165,833,566.49 இ.ரூ.
ஆரம்பித்த திகதி: 01.02.2019
நிறைவு செய்ய எதிர்பார்த்த திகதி: 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம்
நீரிறைக்கும் கொள்திறன்: 10 மீ3/செக்கன் இது 5மீ3/செக்கள் நீரிறைக்கும் கொள்திறனுடைய 2 எண்ணிக்கையான நீரிறைக்கும் பாம்பிகளைக் கொண்டுள்ளது

இந்த உப கருத் திட்டத்தில் பின்வரும் பிரதான பணி நோக்கெல்லைகள் உள்ளடங்குகின்றன.

- ஏற்கெனவேயிருக்கின்ற கதவுகளைப் புனர்நிர்மாணித்தல்
- திரைகளும் மற்றும் ஏனைய தேவையான உபகரணங்களும் அடங்கலாக புதிய நீரிறைக்கும் நிலையத்தின் நிர்மாணப் பணிகள் மற்றும் நீரிறைக்கும் பாம்பிகளின் நிறுவுகைப் பணிகள்
- கால்வாய் கரைப் பகுதிப் பாதுகாப்புப் பணிகள்
- கால்வாய்களை அகழ்ந்து துப்புரவாக்கல்

1.15. கொலன்னாவக் கால்வாய் நீர்திருப்புரகத் திட்டம் - I

ஒப்பந்தத் தரப்பு: E என்ட் C - RR JV
ஒப்பந்தத்தின் பெறுமானம்: 859,487,036.93 ரூபா
ஆரம்பித்த திகதி: 01.02.2019
நிறைவு செய்ய எதிர்பார்த்த திகதி: 2020 ஆம் ஆண்டு யூலை மாதம்

இந்த உப கருத் திட்டத்தில் பின்வரும் பிரதான பணி நோக்கெல்லைகள் உள்ளடங்குகின்றன.

- கொத்தெட்டுவ அணைக் கட்டுக்குக் குறுக்காகவும் ஏற்கெனவேயிருக்கின்ற கொலன்னாவ - கொத்தெட்டுவ பிரதான வீதியின் கீழாலும் 15 மீ அகலமான பெட்டி வடிவ மதகுகளை நிர்மாணித்தல்
- ஒவ்வொன்றும் 5.0மீ அகலமும் மற்றும் x 3.5 மீ உயரமும் உடைய மூன்று நிலைக்குத்தான கதவுகளை நிறுவுதல்
- இ.ப. வீதி மற்றும் பக்க வடிகாலமைப்புகள் அடங்கலாக கால்வாய் கரைப் பாதுகாப்புப் பணிகள்
- கால்வாய்களை அகழ்ந்து துப்புரவாக்கல்

1.16. கொலன்னாவக் கால்வாய் நீர்திருப்புகைத் திட்டம் - கட்டம் III

ஒப்பந்தத் தரப்பு: E என்ட் C - RR JV
ஒப்பந்தத்தின் பெறுமானம்: 1004 மில்லியன் ரூபா
ஆரம்பித்த திகதி: 23.10.2018
நிறைவு செய்ய எதிர்பார்த்த திகதி: 2020 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம்

இந்த உப கருத் திட்டத்தில் பின்வரும் பிரதான பணி நோக்கெல்லைகள் உள்ளடங்குகின்றன.

- இ.ப. வீதி மற்றும் பக்க வடிகாலமைப்புகள் அடங்கலாக கால்வாய் கரைப் பாதுகாப்புப் பணிகள்
- குறுக்காக பெட்டி வடிவ மதகுகளையும் மற்றும் குழாய் வடிவ மதகுகளையும் நிர்மாணித்தல்
- கால்வாய்களை அழந்து துப்புரவாக்கல்

1.17. கொலன்னாவக் கால்வாய் நீர்திருப்புகைத் திட்டம் - IV

ஒப்பந்தத் தரப்பு: E என்ட் C - RR JV
ஒப்பந்தத்தின் பெறுமானம்: 1,431,682,105.43 ரூபா
ஆரம்பித்த திகதி: 01.02.2019
நிறைவு செய்ய எதிர்பார்த்த திகதி: 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம்

இந்த உப கருத் திட்டத்தில் பின்வரும் பிரதான பணி நோக்கெல்லைகள் உள்ளடங்குகின்றன.


- களுப் பாலத்திற்கு அருகிலுள்ள கித்தம்பாஹுவ கால்வாய்க்குக் குறுக்கே கதவுகளை நிர்மாணித்தல் மற்றும் ஒவ்வொன்றும் 6.0மீ அகலமும் மற்றும் x 4.5மீ உயரமும் உடைய மூன்று நிலைக்குத்தான கதவுகளை நிறுவுதல்
- களுப் பாலத்திற்கு அருகிலுள்ள சீதாவத்தை - அம்பதலே வீதி ஓரமாக ஏற்கெனவே அமைந்துள்ள பாலத்தை 18மீ அகலமான ஒரு தனி அளவுப் பாலத்தைக் கொண்டு மீளிடுதல்
- CPC கூட்டுத் தாபனத்திற்கு சொந்தமான கதவு நிர்மாணங்களை இடித்துத் தள்ளல் மற்றும் நடை பாலத்தை நிர்மாணித்தல்
- CPC கூட்டுத் தாபன வளாகத்திற்கு அருகில் கால்வாய் படல நிரலை நிர்மாணித்தல்
- இ.ப. வீதி மற்றும் பக்க வடிகாலமைப்புகள் அடங்கலாக கால்வாய் கரைப் பகுதிப் பாதுகாப்புப் பணிகள்
- கால்வாய்களை அகழ்ந்து துப்புரவாக்கல்

1.18. நீரடித்து விடும் கதவுகளின் நிர்மாணம்

ஒப்பந்தத் தரப்பு: DGES-RR-INDOEAST JV
ஒப்பந்தத்தின் பெறுமானம்: 609,618,238.99 இ.ரூ.
ஆரம்பித்த திகதி: 01.03.2019
நிறைவு செய்ய எதிர்பார்த்த திகதி: 2020 ஆம் ஆண்டு மே மாதம்

இந்த உப கருத் திட்டத்தில் பின்வரும் பிரதான பணி நோக்கெல்லைகள் உள்ளடங்குகின்றன.

- பிரதான கால்வாய் முறைமைக்கு மூன்று கதவுகளை நிர்மாணித்தல்:
  - யக்பெத்தப் பாலம் (கொலன்னாவக் கால்வாய்)
  - ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தைப் பாலம் (ஹீன் எலக் கால்வாய்)
  - துறைமுக அணுகு வீதி மதகு (பிரதான வடிகாலமைப்பு)
- ஒவ்வொரு இடத்திலும் நிலைக்குத்தான கதவுகளை நிறுவுதல்
- கதவு நிர்மாணங்களுக்கு அருகில் கால்வாய் கரைப் பகுதிப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளல்



1.19. சரியான நேரக் கட்டுப்பாட்டு முறைமை (RTC)

பொறியியலாளர்களின் மதிப்பீடு: 414 மில்லியன் ரூபா
ஆரம்பித்த திகதி: 2017 ஆம் ஆண்டு யூலை மாதம்
நிறைவு செய்ய எதிர்பார்த்த திகதி: 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம்

<u>குறிக்கோள்கள்</u>

1. ஒன்றிணைந்த ஒரு வெள்ளப்பெருக்குக் கட்டுப்பாட்டு மற்றும் நீர் முகாமைத்துவத் தகவல் முறைமையை உருவாக்கல்
2. கொழும்பு மாநகரப் பிரதேசத்திற்கு முன்கூட்டிய எச்சரிக்கை சமிஞ்சை சாதனத்தை நிறுவுதல்
3. இனிமையான ஒரு நகர சுற்றாடலை உருவாக்கும் பொருட்டு நீரின் சாத்தியமான களஞ்சிய வசதிகளையும் மற்றும் பாவனையையும் கருத்திற் கொண்டு நீரிறைக்கும் பாம்பிகள் மற்றும் சேமிப்பு வசதிகள் போன்ற வெள்ளப்பெருக்குக் கட்டுப்பாட்டு வசதிகளுக்கான அனுகூல செயற்பாட்டு விதிமுறைகளை தயாரித்தல்.
4. நகர அபிவிருத்தி மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவற்றில் இருந்து மாநகரங்களுக்கு எழும் நீர் சம்பந்தமான தற்போதைய மற்றும் எதிர்கால ஆபத்துக்களை கணிப்பிட்டு மதிப்பிடுதல்.

<u>நோக்கெல்லையும் மற்றும் செயற்பாடுகளும்</u>

1. மழை வீழ்ச்சி அளவீடுகளில் இருந்து வரும் அவதானிப்புகள் மற்றும் கணித ரீதியான காலநிலை வானிநிலை எதிர்வுகூறல்கள் மற்றும் செய்மதி நுட்ப மழை வீழ்ச்சி அவதானிப்புகள் போன்ற ஏற்கெனவேயுள்ள தரவுமூலங்களை பயன்படுத்தி ஒன்றிணைந்த ஒரு மழை வீழ்ச்சித் தரவுகள் முறைமையைத் தயாரித்தல்.
2. கொழும்பு மாநரகப் பிரதேசத்திற்கு மழை வீழ்ச்சிக் கண்காணிப்பு நிலையங்களை அமைத்தல்.
3. கால்வாய் பகுதிகளில் / ஆற்றுப் பகுதிகளில் / நீர்க் குட்டைப் பகுதிகளில் நீர் மட்டக் கண்காணிப்பு அளவீட்டு நிலையங்களை அமைத்தல் மற்றும் கால்வாய் நீரோட்டம் சார்ந்த அளவீட்டு முறைமையைத் தாபித்தல்.
4. வெள்ளப்பெருக்குக் கட்டுப்பாட்டு மற்றும் நீர் முகாமைத்துவ நிலையத்திற்கு கண்காணிப்பு உபகரண சாதனங்களில் இருந்து தொடர்பாடல் தொடர்புகளை ஏற்படுத்தல்.
5. நீரில் மூழ்குவதை எதிர்வுகூறுவதற்கான மழை வீழ்ச்சி ஒன்றிணைப்பு, நீரியல் எதிர்வுகூறல் மாதிரி, ஹைட்ரோடயனமிக் மாதிரி என்பவற்றை உள்ளடக்குகின்ற ஒரு வெள்ளப்பெருக்குக் கட்டுப்பாட்டு எதிர்வுகூறல் முறைமையை உருவாக்கல்.
6. கதவுகளினதும் மற்றும் நீரிறைக்கும் பாம்பிகளினதும் சிறந்த இயக்கத்தைக் கணிப்பிடும் பொருட்டு ஒரு நிர்ணய உதவு முறைமையை உருவாக்கல் மற்றும் சரியான நேர இயக்கத்திற்கான ஒரு ஸ்காடா கட்டுப்பாட்டு முறைமையை தாபித்தல்.
7. கொழும்பு மாநகரப் பகுதிற்கு நீர் முகாமைத்துவம் சார்ந்த சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் தரவுகள் ஒன்றிணைப்பு, தகவல் பரம்பல் ஆகியவற்றுக்கான ஒரு நிலையத்தைத் தாபித்தல்.
8. நகரமயமாதல் மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவற்றின் காரணமாக அதிகரித்து வருகின்ற ஆபத்துக்களை மதிப்பிடும் பொருட்டு தொடர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திற்கான ஒரு முறைமையைத் தாபித்தல் மற்றும் பரிகார நடவடிக்கைகளை முன்மொழிதல்.

திறைசேரி நிதிட்டுள்ள கருத் திட்டங்கள்


2. மாதிவெலத் தெற்கு நீர்திருப்புகைக் கருத் திட்டம்

மாதிவெலத் தெற்கு நீர்திருப்புகைத் தெரிவு ஒரு குறுக்கு ஆற்றுப் படுக்கை நீர்திருப்புகை அமைப்பில் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனினும், அந்த நீர்திருப்புகையில் கீழ்காணும் சில குறைபாடுகள் காணப்படுகின்றன.

a) பன்னிப்பிட்டிய ஆற்றுப் படுக்கை ஓரத்தின் ஊடாக நீரைத் திருப்பும் பொருத்தமான ஒரு நிர்மாண முறையியல் தொடர்பான அதிக நிர்மாண செலவு மற்றும் கஷ்டம்.
b) வெரஸ் கங்கை ஆற்றுப் படுக்கைப் பகுதி களு எலவுக்கு நிகழக் கூடிய சாத்தியமான பாதக நீர் சார் தாக்கங்கள்.
c) பாதகான சமூக மற்றும் சுற்றாடல் பிரச்சினைகள்.

மேற்குறித்த மட்டுப்பாடுகளின் காரணமாக, குறித்த தெரிவுகளுக்கும் மற்றும் அதன் மூலமாக தீர்மானமெடுக்கும் தரப்புகளின் ஆலோசனையில் பொருத்தமான தீர்வை முடிவு செய்தல் ஆகிய இரண்டு அம்சங்களினதும் நிமித்தம் ஒரு தெரிவு சார்ந்த ஆய்வை மேற்கொள்ளும் பொருட்டு ஒரு களஞ்சிய நீர்க் குட்டை முறைமை சார்ந்த ஒரு மாற்றுவழித் தீர்வு முன்மொழியப்பட்டது. ஆகையால், இந்தத் தெரிவு சார்ந்த ஆய்வுக்கான ஒரு நீரியல் மாதிரி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. நீர் சேமிப்புக் குட்டை சார்ந்த முறைமையில் பிரதானமாக கவனம் செலுத்தி வெள்ளப்பெருக்குகள் தணிப்பு மாதிரிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இரு தெரிவுகளின் நிமித்தம் பொருளாதார ஒத்தீட்டு ஆய்வும் மேற்கொள்ளப்பட்டது.

இவை தவிர அளவை சார்ந்த பணிகளும் மற்றும் சில பூர்வாங்கப் பணிகளும் 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.



நிர்மாணப் பிரிவு

திறைசேரி நிதியிட்டுள்ள கருத் திட்டங்கள்

1. கடவத்தை "சுவத்த உயன" பராமரிப்புப் பணி

2019 ஆம் ஆண்டிற்கு மேற்குறித்த கருத் திட்டத்தின் ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நிதித் தொகை 20 மில்லியன் ரூபாவாகும். குறித்த ஆண்டு முழுதிலும் குறித்த பராமரிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது.

மண் ஏற்றல், எடுத்துச் செல்லல் மற்றும் மண் பரவுதல் என்பன அடங்கலாக தற்காலிகமாக மண்ணை எடுத்துச் செல்லல் மற்றும் உள்ளக வீதிகளின் பராமரிப்புப் பணிகள், டேர்ப் கட்டிங் செய்தல், கால்வாய்களை சோதனையிடுதல், கால்வாய் கரைப் பகுதிகளை சுத்தம் செய்தல் மற்றும் கால்வாய் மேற்பரப்புப் பகுதிகளை சுத்தம் செய்தல் முதலிய பணிகள் இந்தக் கருத் திட்டத்தில் உள்ளடங்குகின்றன.

2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் மொத்தப் பெறுமானம் 22.55 மில்லியன் ரூபாவாகும். 2019 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் ஒட்டுமொத்தத் திரண்ட பெறுமானம் 2.55 மில்லியன் ரூபாவாகும்.



2. ராகம பெசிலிக்கா ஏரியின் உத்தேச புனர்நிர்மாணப் பணிகள்

குறித்த கருத் திட்டத்தின் மதிப்பிடப்பட்டுள்ள மொத்த செலவு 28.95 மில்லியன் ரூபாவாகும். குறித்த இந்தக் கருத் திட்டம் 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கருத் திட்டத்தை 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் இறுதியளவில் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

நடை பாலம், ***11*** எண்ணிக்கையான பிடிகுழிகள் ஆகியவற்றின் நிர்மாணப் பணிகள் மற்றும் 272மீ நீளமான தடுப்பு சுவர்களின் நிர்மாணப் பணிகள் போன்ற பணிகள் இந்தக் கருத் திட்டத்தில் உள்ளடங்குகின்றன.

2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் பெறுமானம் 15.82 மில்லியன் ரூபாவாகும். 2019 ஆம் ஆண்டு மே மாதம் இறுதியளவு வரை மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் திரண்ட பெறுமானம் 15.82 மில்லியன் ரூபாவாகும்.



வாடிக்கையாளர் கருத் திட்டங்கள்

வாடிக்கையாளர் தரப்பு - மாநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு

1. ஹொரண பேரூந்துத் தரிப்பு நிலையத்தின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணப் பணிகள் - கட்டம் III, IV மற்றும் கட்டம் V

மேற்குறித்த கருத் திட்டத்திற்கான கேள்வி ஒப்பந்தம் மாநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் மூலம் சுக்கித்தப்புறவர பிராந்திய நகர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது. குறித்த கருத் திட்டத்தின் மதிப்பிடப்பட்டுள்ள மொத்த செலவு VAT வரி நீங்கலாக 139.45 மில்லியன் ரூபாவாகும். மினுக்கல் வேலைகள், மின்சார வேலைகள், உலோக வேலைகள், கூரை நிர்மாணிக்கும் பணிகள், கழுவு அறை நிர்மாணப் பணிகள் மற்றும் உள்ளக வீதிகளின் நிர்மாணப் பணிகள் மற்றும் குறித்த பேரூந்துத் தரிப்பு நிலையத்தில் ஜோகுசுவா கழிவு நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியின் நிர்மாணப் பணிகள் என்பன இந்த செலவில் உள்ளடங்குகின்றன.

குறித்த கருத் திட்டம் 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. குறித்த இந்தக் கருத் திட்டம் 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதமளவில் நிறைவு செய்யப்பட்டது. 2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் பெறுமானம் 41.84 மில்லியன் ரூபாவாகும். மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் திரண்ட பெறுமானம் 131.40 மில்லியன் ரூபாவாகும்.



2. பாதுக்க விளையாட்டு மைதான அபிவிருத்திப் பணி - கட்டம் II

மேற்குறித்த கருத் திட்டத்திற்கான கேள்வி ஒப்பந்தம் மாநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் மூலம் சுக்கித்தப்புறவர பிராந்திய நகர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது.

குறித்த கருத் திட்டத்தின் மதிப்பிடப்பட்டுள்ள செலவு VAT வரி நீங்கலாக 41.57 மில்லியன் ரூபாவாகும். விளையாட்டு மைதானத்தின் மேம்பாட்டுப் பணிகள், வாகனம் நிறுத்தும் நிலையத்தின் நிர்மாணம், நடைபாதைகளின் நிர்மாணம், நிலக்காட்சிப்படுத்தல் பணிகள், தேறிய மாணி வாசிப்பு முறைமை நிறுவுகை மற்றும் உடைகள் மாற்றும் அறைகளின் நிர்மாணம் முதலிய பணிகள் இந்த செலவில் உள்ளடங்குகின்றன.

குறித்த கருத் திட்டம் 2018 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. குறித்த இந்தக் கருத் திட்டம் 2019 ஆம் ஆண்டு மே மாதம் இறுதியளவில் நிறைவு செய்யப்பட்டது.

2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் பெறுமானம் 37.64 மில்லியன் ரூபாவாகும். மேற்கொள்ளப்பட்டுள்ள திரண்ட பணியின் பெறுமானம் 38.18 மில்லியன் ரூபாவாகும்.



3. குறித்த நிலையத்திற்கும் மற்றும் களுத்துறைப் பேரூந்துத் தரிப்பு நிலையத்திற்கும் இடையில் வர்த்தக அபிவிருத்தி வசதிகளை நிர்மாணித்தல் - கட்டம் III

மேற்குறித்த கருத் திட்டத்திற்கான கேள்வி ஒப்பந்தம் மாநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் மூலம் சுக்கித்தப்புறவர பிராந்திய நகர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது. குறித்த கருத் திட்டத்தின் மதிப்பிடப்பட்டுள்ள செலவு VAT வரி நீங்கலாக 17.18 மில்லியன் ரூபாவாகும். கட்டுமாணப் பணிகள் மற்றும் மினுக்கல் வேலைகள் அடங்கலாக இரண்டு மாடிக் கட்டிடத்தின் நிர்மாணப் பணி இந்த செலவில் உள்ளடங்குகின்றது.

குறித்த கருத் திட்டம் 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. குறித்த இந்தக் கருத் திட்டம் 2019 ஆம் ஆண்டு யூலை மாதமளவில் நிறைவு செய்யப்பட்டது. குறித்த ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் பெறுமானம் 1.40 மில்லியன் ரூபாவாகும். மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் திரண்ட பெறுமானம் 17.60 மில்லியன் ரூபாவாகும்.



4. கிரிமண்டல மாவத்தை சரியான நேர வெள்ளப்பெருக்குக் கட்டுப்பாட்டு மற்றும் நீர் முகாமைத்துவ நிலையத்தின் நிர்மாணம்

மேற்குறித்த கருத் திட்டத்திற்கான கேள்வி ஒப்பந்தம் பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் மூலம் வழங்கப்பட்டது. குறித்த கருத் திட்டத்தின் திருத்தி மதிப்பிடப்பட்டுள்ள செலவு VAT வரி நீங்கலாக 752.00 மில்லியன் ரூபாவாகும். குறித்த இந்தக் கருத் திட்டம் 2017 ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. குறித்த இந்தக் கருத் திட்டத்தை 2020 ஆம் ஆண்டு மே மாதமளவில் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

HVAC முறைமை, தீ கண்டுபிடித்து தீயணைத்துப் பாதுகாக்கும் முறைமை மற்றும் 2 எண்ணிக்கையான பயணி மின்தூக்கிகள் முதலியவற்றுடன் சம்பந்தப்படுகின்ற ஒரு ஐந்து மாடிக் கட்டிடத்தின் (3250 ச.மீ. பரப்பளவான) நிர்மாணப் பணி குறித்த கருத் திட்டத்தில் உள்ளடங்குகின்றது.

2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் பெறுமானம் 181.66 மில்லியன் ரூபாவாகும். மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் திரண்ட பெறுமானம் 223.50 மில்லியன் ரூபாவாகும்.



வாடிக்கையாளர் தரப்பு - நகர அபிவிருத்தி அதிகார சபை

5. ஹோமாகம உத்தேச காணி அபிவிருத்திப் பணி

மேற்குறித்த கருத் திட்டத்திற்கான கேள்வி ஒப்பந்தம் நகர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் வழங்கப்பட்டது. குறித்த கருத் திட்டத்தின் மொத்த செலவு VAT வரி நீங்கலாக 90.79 மில்லியன் ரூபாவாகும். காணி (1.5 ஏக்கர்கள்) மேம்பாட்டுப் பணி, 75மீ நீளமான கேபியன் சுவர் நிர்மாணப் பணி, 62மீ நீளமான கால்வாய் நிர்மாணப் பணி மற்றும் 75மீ நீளமான கொங்கிறீட்டு வடிகாலமைப்பு வசதியின் நிர்மாணப் பணி முதலிய பணிகள் இந்த செலவில் உள்ளடங்குகின்றன.

குறித்த கருத் திட்டம் 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. குறித்த இந்தக் கருத் திட்டத்தை 2020 ஆம் ஆண்டு சனவரி மாதமளவில் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் பெறுமானம் 65.50 மில்லியன் ரூபாவாகும். மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் திரண்ட பெறுமானம் 65.50 மில்லியன் ரூபாவாகும்.



6. பேரவெவ ஏரி நிரல் பூங்கா அபிவிருத்திக் கருத் திட்டம்

குறித்த கருத் திட்டத்தின் மதிப்பிடப்பட்டுள்ள மொத்தப் பெறுமானம் 24.87 மில்லியன் ரூபாவாகும். கைத் தண்டவாளத்தின் நிர்மாணம், கொங்கிறீட்டு வடிகாலமைப்பு வசதி நிர்மாணம், மின்சார வேலைகள், பிடி குழிகளின் நிர்மாணம் மற்றும் வாண்வழிகளின் நிர்மாணம் மற்றும் கிழக்கு பேரவெவ ஏரியின் மேற்குக் கால்வாய் கரைப் பகுதி ஓரமாக கால்வாய் கரைப் பகுதிப் பாதுகாப்பு சுவரின் (சுமார் 86மீ) நிர்மாணம் முதலிய பணிகள் இந்த செலவில் உள்ளடங்குகின்றன.

குறித்த கருத் திட்டம் 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. குறித்த இந்தக் கருத் திட்டத்தை 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் இறுதியளவில் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் பெறுமானம் 10.55 மில்லியன் ரூபாவாகும். மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் திரண்ட பெறுமானம் 10.55 மில்லியன் ரூபாவாகும்.



7. **பேலியகொட உத்தேச 600 வீட்டு அலகுகள் திட்டத்திற்கான கேபியன் சுவர்கள் நிர்மாணம் மற்றும் மண் நிரப்பல் வேலைகள்**

மேற்குறித்த கருத் திட்டத்திற்கான கேள்வி ஒப்பந்தம் நகர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் வழங்கப்பட்டது. குறித்த கருத் திட்டத்தின் மொத்த செலவு இடைநேர் செலவுகளும் மற்றும் VAT வரியும் நீங்கலாக 217.34 மில்லியன் ரூபாவாகும். மண் நிரப்பல் (2 ஏக்கர்கள்) வேலைகள், கேபியன் சுவர்களின் (600மீ) நிர்மாணம், கால்வாய் மேம்பாட்டுப் பணி மற்றும் ஒரு மதகு நிர்மாணம் முதலிய பணிகள் இந்த செலவில் உள்ளடங்குகின்றன.

குறித்த கருத் திட்டம் 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. குறித்த இந்தக் கருத் திட்டத்தை 2020 ஆம் ஆண்டு மே மாதமளவில் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் பெறுமானம் 8.21 மில்லியன் ரூபாவாகும். மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் திரண்ட பெறுமானம் 8.21 மில்லியன் ரூபாவாகும்.



வாடிக்கையாளர் தரப்பு - பொலன்னறுவை மாவட்ட செயலகம்
"பிபிதெமு பொலன்னறுவை" மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

8. மெதிரிகிரிய மாவட்ட வைத்தியசாலைக்கான 30 மருத்துவர்கள் தங்கக் கூடிய உத்தேச மருத்துவ அதிகாரிகளின் பங்களா - கட்டம் I மற்றும் கட்டம் II

குறித்த கருத் திட்டத்தின் மதிப்பிடப்பட்டுள்ள மொத்த செலவு VAT வரி நீங்கலாக 260.67 மில்லியன் ரூபாவாகும். குறித்த இந்தக் கருத் திட்டம் 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கருத் திட்டம் 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதமளவில் நிறைவு செய்யப்பட்டது.

சகல சிவில், எந்திர மற்றும் மின்சார வேலைகள் மற்றும் 2 எண்ணிக்கையான பயணி மின்தூக்கிகள் என்பவற்றுடன் சம்பந்தப்படுகின்ற ஒரு நான்கு மாடிக் கட்டிடத்தின் (3250 ச.மீ. பரப்பளவான) நிர்மாணப் பணி என்பன இந்த செலவில் உள்ளடங்குகின்றன.

2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் பெறுமானம் 15.50 மில்லியன் ரூபாவாகும். 2019 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் திரண்ட பெறுமானம் 218.67 மில்லியன் ரூபாவாகும்.



9. **வெலிக்கந்தை பிரதேச வைத்தியசாலைக்கான உத்தேச வெ.நோ.பி., க்ளினிக் மற்றும் நிருவாகக் கட்டிடத்தின் நிர்மாணப் பணி**

குறித்த கருத் திட்டத்தின் மதிப்பிடப்பட்டுள்ள மொத்த சலவு VAT வரி நீங்கலாக 185.45 மில்லியன் ரூபாவாகும். குறித்த இந்தக் கருத் திட்டம் 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கருத் திட்டம் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் நிறைவு செய்யப்பட்டது.

சகல சிவில், எந்திர மற்றும் மின்சார வேலைகள் மற்றும் குளிரூட்டிகள் நிறுவுகைப் பணி முதலிய பணிகளுடன் சம்பந்தப்படுகின்ற ஒரு இரண்டு மாடிக் கட்டிடத்தின் நிர்மாணப் பணி குறித்த இந்தக் கருத் திட்டத்தில் உள்ளடங்குகின்றது.

2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் பெறுமானம் 9.78 மில்லியன் ரூபாவாகும். 2019 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் திரண்ட பெறுமானம் 169.78 மில்லியன் ரூபாவாகும்.



சொந்தக் கருத் திட்டங்கள்

1. அனுராதபுர உத்தேச சுற்று பங்களா மற்றும் வசதிக் கட்டிடத் தொகுதி

குறித்த கருத் திட்டத்திற்கு மதிப்பிடப்பட்டுள்ள மொத்த செலவு (VAT வரி நீங்கலாக) 108.90 மில்லியன் ரூபாவாகும். சுற்று பங்களா மற்றும் வசதிக் கட்டிடத் தொகுதியின் நிர்மாணப் பணி இந்த செலவில் உள்ளடங்குகின்றது.

குறித்த கருத் திட்டம் 2017 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. குறித்த இந்தக் கருத் திட்டம் 2019 ஆம் ஆண்டு மே மாதமளவில் நிறைவு செய்யப்பட்டது. வசதிக் கட்டிடத் தொகுதிற்கான நிர்மாணப் பணி 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இறுதியளவில் நிறைவு செய்யப்பட்டது.

2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் குறித்த வசதிக் கட்டிடத் தொகுதியின் நிமித்தம் மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் பெறுமானம் 4.30 மில்லியன் ரூபாவாகும். 2019 ஆம் ஆண்டு இறுதி வரை மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் திரண்ட பெறுமானம் 30.53 மில்லியன் ரூபாவாகும்.

2019 ஆம் ஆண்டு இறுதியில், சுற்று பங்களாவின் நிமித்தம் மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் திரண்ட பெறுமானம் 48.25 மில்லியன் ரூபாவாகும்.



2. முத்துராஜவெல இ.கா.அ.கூ. தாபன வேலைப்பட்டறை இடம்பெயர்த்தல் உத்தேச நிர்மாணம்

குறித்த கருத் திட்டத்தின் மதிப்பிடப்பட்டுள்ள மொத்த செலவு VAT வரி நீங்கலாக 239.67 மில்லியன் ரூபாவாகும். குறித்த இந்தக் கருத் திட்டம் 2017 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கருத் திட்டத்தை 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் இறுதியளவில் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

சகல சிவில், எந்திர மற்றும் மின்சார வேலைகளுடன் சம்பந்தப்படுகின்ற ஒரு இரண்டு மாடிக் கட்டிடத் தொகுதியின் (கட்டிடத் தொகுதி A, B மற்றும் K) நிர்மாணப் பணி குறித்த கருத் திட்டத்தில் உள்ளடங்குகின்றது.

2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் பெறுமானம் 72.50 மில்லியன் ரூபாவாகும். 2019 ஆம் ஆண்டு இறுதியளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் திரண்ட பெறுமானம் 144.83 மில்லியன் ரூபாவாகும்.



3. கிரிமண்டல மாவத்தை உத்தேச விளையாட்டுக் கட்டிடத் தொகுதி

குறித்த கருத் திட்டத்தின் மதிப்பிடப்பட்டுள்ள மொத்த செலவு 10% வீத இடைநேர் செலவுகளும் மற்றும் VAT வரியும் நீங்கலாக 70.39 மில்லியன் ரூபாவாகும். குறித்த இந்தக் கருத் திட்டம் 2018 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கருத் திட்டத்தை 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் இறுதியளவில் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

உருக்காலான கட்டுமாணங்கள் உடைய இரண்டு மாடிக் கட்டிடத்தின் நிர்மாணப் பணி குறித்த கருத் திட்டத்தில் உள்ளடங்குகின்றது.

2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் பெறுமானம் 7.13 மில்லியன் ரூபாவாகும். 2019 ஆம் ஆண்டு இறுதியளவு வரை மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் திரண்ட பெறுமானம் 19.80 மில்லியன் ரூபாவாகும்.



4. முத்துராஜவெல உத்தேச கழிவு நீர்ப் பேட்டையின் நிர்மாணம் - கட்டம் I

குறித்த கருத் திட்டத்தின் மதிப்பிடப்பட்டுள்ள மொத்த செலவு VAT வரி நீங்கலாக 385.01 மில்லியன் ரூபாவாகும். குறித்த இந்தக் கருத் திட்டம் 2017 ஆம் ஆண்டு யூன் மாதத்தில்

ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கருத் திட்டத்தை 2020 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் இறுதியளவில் நிறைவு செயய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

முன்கூட்டி வார்த்தெடுத்த தூண்களின் நிர்மாணம் மற்றும் உருக்காலான கட்டுமாண நிர்மாணம், கழிவு சேமிப்பு டாங்கி, உற்பத்திப் பொறித் தொகுதி, யன்னல் திண்டு என்பவற்றை தயாரித்தல் முதலியன குறித்த கருத் திட்டத்தில் உள்ளடங்குகின்றன.

2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் பெறுமானம் 112.71 மில்லியன் ரூபாவாகும். 2019 ஆம் ஆண்டு இறுதியளவு வரை மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் திரண்ட பெறுமானம் 250.44 மில்லியன் ரூபாவாகும்.



5. ராகம காணி அபிவிருத்திப் பணி

ராகமவிலுள்ள ஒரு காணி அபிவிருத்திப் பணி குறித்த கருத் திட்டத்தில் உள்ளடங்குகின்றது.

குறித்த கருத் திட்டம் 2019 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. குறித்த இந்தக் கருத் திட்டத்தை 2020 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் இறுதியளவில் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் பெறுமானம் 23.89 மில்லியன் ரூபாவாகும். 2019 ஆம் ஆண்டு இறுதியளவு வரை மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் திரண்ட பெறுமானம் 23.89 மில்லியன் ரூபாவாகும்.



6. ராஜகிரிய தலைமை அலுவலகக் கட்டிடப் புதுப்பித்தல் பணிகள்

காணி மற்றும் நீர் விநியோகப் பிரிவு, ஊடகப் பிரிவு, தேநீர் தயாரிக்கும் அறை, தலைவரின் அலுவலகம், சணசப் பிரிவு முதலியவற்றை மீளொழுங்கமைக்கும் பணிகள் 2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நிறைவு செய்யப்பட்டிருந்தன.

2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் பெறுமானம் 7.29 மில்லியன் ரூபாவாகும். 2019 ஆம் ஆண்டு இறுதி வரை மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் திரண்ட பெறுமானம் 108.91 மில்லியன் ரூபாவாகும்.



7. கெரவலப்பிட்டிய மணல் கழுவி அரித்தெடுக்கும் பொறித் தொகுதியின் நிர்மாணம்

குறித்த கருத் திட்டத்தின் மதிப்பிடப்பட்டுள்ள மொத்த செலவு (VAT வரி நீங்கலாக) 184.56 மில்லியன் ரூபாவாகும்.

மணல் கழுவி அரித்தெடுக்கும் பொறித் தொகுதியின் நிர்மாணம், நீர்க் குட்டையின் நிர்மாணம், மின்மாற்றி மற்றும் MDB அறைகளின் நிர்மாணம், கடல் மணல் பொதியிடும் பொறித் தொகுதி, உடைகள் மாற்றும் அறை, அலுவலக அறை, ஆய்வு கூடம், RO பொறித் தொகுதி என்பவற்றின் நிர்மாணம் மற்றும் சிற்றறைகளாகப் பிரிக்கும் வேலை முதலிய பணிகள் இந்தக் கருத் திட்டத்தில் உள்ளடங்குகின்றன.

குறித்த இந்தக் கருத் திட்டம் 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கருத் திட்டம் 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இறுதியளவில் நிறைவு செய்யப்பட்டது. 2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் பெறுமானம் 139.46 மில்லியன் ரூபாவாகும். 2019 ஆம் ஆண்டு இறுதியளவு வரை மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் திரண்ட பெறுமானம் 178.57 மில்லியன் ரூபாவாகும்.





காணிகள் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு

காணிகள் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு இந்தக் கூட்டுத் தாபனத்தின் பிரதான தொழிற்பாட்டு உதவு கரங்களில் ஒரு பிரிவாகும். இந்தப் பிரிவு கீழ்காணும் தொழிற்பாடுகளின் ஊடாக இந்தக் கூட்டுத் தாபனத்தின் குறிக்கோள்களை அடைய உதவுகின்றது.

1. நீரைத் தேக்கி வைக்கும் நோக்கத்திற்காகவும் மற்றும் அபிவிருத்தி நோக்கத்திற்காகவும் காணிகளை சுவீகரித்தல்

பாதுகாப்பு வலயத்திற்கு எதிராக நிகழும் அத்துமீறல் செயற்பாடுகளைத் தடுக்கும் பொருட்டும் மற்றும் குறித்த வலயப் பகுதியை சுற்றியுள்ள கால்வாய் முறைமைகளை மேம்படுத்தும் பொருட்டும் முத்துராஜவெலவிலுள்ள சதுப்பு நிலங்களைப் பாதுகாக்கும் நோக்கத்திற்காக அண்மையில் முத்துராஜவெல காணிகள் சுவீகரித்தல் விடயம் இனங்காணப்பட்டுள்ளது.
இது தவிர, இந்தக் காணிகள் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு அனுராதபுரம், திருகோணமலை மற்றும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களுக்கு அந்தந்தப் பிரதேசங்களின் எதிர்கால அபிவிருத்திப் பணிகளுக்கு உதவும் குறிக்கோளுடன் சுற்று பங்களாக்களையும் மற்றும் பிராந்திய அலுவலக வசதிகளையும் நிர்மாணிப்பதற்காக அந்தப் பிரதேசங்களில் அமைந்துள்ள ஒரு சில காணித் துண்டுகளை உரித்தளித்துக் கொடுக்கும் செயல்முறையிலும் ஈடுபடுகின்றது.

இந்தக் கூட்டுத் தாபனம் ராகம, கொலன்னாவ மற்றும் ஒலியமுல்ல ஆகிய பிரதேங்களில் நிகழும் வெள்ளப்பெருக்குகளைத் தணிக்க உதவுவதற்காகவும் மற்றும் அந்தந்தப் பிரதேசங்களில் வடிகாலமைப்பு மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்காகவும் கால்வாய் அபிவிருத்திகளின் நிமித்தம் அந்தப் பிரதேசங்களிலுள்ள காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

2. காணிகளை கைமாற்றுவது பற்றிய வழிகாட்டல்களின் பிரகாரம் காணிகளை அகற்றல்

கொழும்பு பிரதான வர்த்தக கேந்திர நிலையத்தை அணமித்த பகுதி கருத்திற் கொள்ளப்பட்டு முத்துராஜவெலப் பிரதேசம் மேற்குப் பிராந்தியத்தில் ஒரு சேவை விநியோகப் பகுதியாக இனங்காணப்பட்டுள்ளது. கெரவலப்பிட்டிய வெளிச்சுற்று அதிவேக வீதி நிர்மாணக் கருத் திட்டத்தின் அபிவிருத்தியை அடுத்து, சேவைகள் விநியோகத்துடன் சம்பந்தப்படுகின்ற கருத் திட்டங்களின் நிமித்தம் முத்துராஜவெலப் பிரதேசத்திலுள்ள காணிகளுக்கான கேள்விகள் கடுமையாக அதிகரித்திருந்தன. ஆகையால், இந்தக் கூட்டுத் தாபனம் முத்துராஜவெலப் பிரதேசத்தில் சேவை விநியோகப் பல அபிவிருத்திக் கருத் திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

போட்டிக் கேள்வி நடைமுறையின் ஊடாக போட்டிக் கோள்வி விலை மனுக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர், விநியோக செயற்பாடுகளுடன் இணைந்த பலநோக்கங்களின் நிமித்தம் விநியோக சேவை வசதிகளைத் தாபித்துக் கொள்ளும் பொருட்டு சுமார் 34 ஏக்கர்கள் அளவான பல காணித் துண்டுகள் ஹேமாஸ் லொஜிஸ்ட்டிக் (ப்ரைவட்) லிமிற்றட், பிரமிட்டு லங்கா (ப்ரைவட்) லிமிற்றட், ஈஸ்ட்டு வெஸ்ட்டு க்லியரிங் என்ட் போர்வாடிங் லிமிற்றட், டார்ட்டு க்ளோபெல் லொஜிஸ்ட்டிக்ஸ் (ப்ரைவட்) லிமிற்றட் மற்றும் ஜோன் கீல்ஸ் லொஜிஸ்ட்டிக்ஸ் (ப்ரைவட்) லிமிற்றட் முதலிய நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டன.

கடந்த ஒரு சில வருடங்களில், முத்துராஜவெலக் கைத்தொழில் வலயத்திலுள்ள அநேகமான காணிகள் பல கைத்தொழில் செயற்பாடுகளுக்காகவும் மற்றும் தேசிய நீதியில் முக்கியத்துவம் வாய்ந்த கருத் திட்டங்களுக்காகவும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. பெற்றோலியம் டாங்க் பார்ம், லிற்றோ கேஸ் மற்றும் இ.மி.ச. மின்னுற்பத்திப் பொறித் தொகுதி முதலியன குறித்த வலையத்தினுள் அமைந்துள்ள சில முக்கியமான கருத் திட்டங்களாகும்.

கொழும்பு நகரப் பகுதியில் காணப்படும் குப்பை கூழங்கள் பிரச்சினைக்கு தீர்வுகாணும் பொருட்டு, இந்தக் கூட்டுத் தாபனம் முத்துராஜவெலவிலுள்ள சுமார் 10 ஏக்கர்கள் அளவான காணியை வெஸ்ட்டேர்ன் பவர் கம்பனி (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனத்திற்கு ஒதுக்கிக் கொடுத்துள்ளது. சக்திக் கருத் திட்டங்களுக்கான இந்தக் கழிவுப் பொருட்களில் இருந்து தேசிய க்றிட் மின்சார முறைமைக்கு 10-20 மெ.வொ. வரையான மின்சாரத்தை உற்பத்தி செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

காணிகள் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு தனியாள் வீடமைப்பு நோக்கத்தின் நிமித்தம் நீண்டகாலக் குத்தகைகள், குறுங்காலக் குத்தகைகள், நேரடி விற்பனைகள் மற்றும் விற்பனைகள் என்பவற்றின் ஊடாக காணிகளைப் பகிர்ந்தளிப்பதிலும் சம்பந்தப்படுகின்றது. ஆகையால் இந்தப் பிரிவு 2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் விற்பனைகளில் / குத்தகைளில் இருந்து சுமார் 718 மில்லியன் ரூபா காசுப் பாய்ச்சலை ஈட்டியுள்ளது. 2020 ஆம் ஆண்டிற்கு காணி விற்பனைகள் மற்றும் காணி குத்தகைகள் ஆகியவற்றில் இருந்து 1168 மில்லியன் ரூபா வருமானம் கிடைக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

3. சதுப்பு நிலங்கள் மற்றும் கால்வாய் ஒதுக்கப் பகுதிகள் என்பவற்றை பிரகடனப்படுத்தல்

அண்மை காலத்தில் பல புதிய அபிவிருத்திப் பரிமாணங்கள் ஏற்பட்டுள்ளதாலும், இந்தக் கூட்டுத் தாபனத்தின் நோக்கெல்லை அதிக அபிவிருத்தி மைய மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு அம்சங்களை நோக்கி மாற்றம் அடைந்துள்ளது. வெளப்பெருக்குகள் கட்டுப்படுத்தல், சதுப்பு நிலங்களைப் பாதுகாத்தல், கால்வாய் கரைப் பகுதிகளை அழகுபடுத்தல் மற்றும் கால்வாய் கரைப் பகுதிகள் ஓரமாக நடைபாதைகளை அமைத்தல் முதலிய விடயங்களுக்கு அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மேற்குறித்த பணிகளுக்கு உதவியாக அமையும் வகையில், காணிகள் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு கட்டம் கட்டமாக நாட்டில் சதுப்பு நிலங்களைப் பிரகடனப்படுத்தும் கரும விடயத்திலும் ஈடுபடுகின்றது. அந்தந்த ஏனைய பிரிவுகளின் ஆலோசனைகளில் கால்வாய் கரைப் பகுதிகளைப் பாதுகாப்பதை வர்த்தமானியில் பிரசுரிக்கும் விடமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு பிரகடனப்படுத்தும் பணிகளின் கீழ் மேல் மாகாணம், தென் மாகாணம், ஊவா மாகாணம், மத்திய மாகாணம், சபரகமுவ மாகாணம் மற்றும் வட மத்திய மாகாணம் முதலிய மாகாணங்கள் ஏற்கெனவே வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. கிழக்கு மாகாணம், வட மாகாணம் மற்றும் வடமேல் மாகாணம் ஆகிய மாகாணங்களைப் பிரகடனப்படுத்தும் கரும பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேல் மாகாணத்திலுள்ள கால்வாய் கரை ஒதுக்கப் பகுதிகள் ஏற்கெனவே பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. தென் மாகாணத்திலுள்ள கால்வாய் கரை ஒதுக்கப் பகுதிகளைப் பிரகடனப்படுத்த தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4. கொழும்பு நகரப் பெரும்பாக வெள்ளப்பெருக்குக் கட்டுப்பாட்டு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டுக் கருத் திட்டத்தின் (GCFC-EIP) நிமித்தம் சுவீகரிக்கப்பட்டுள்ள நீர் தேங்கு நிலங்களின் முகாமைத்துவம்

நீரைத் தேக்கி வைக்கும் நோக்கத்தின் நிமித்தம் GCFC - EI கருத் திட்டத்திற்கான சுவீகரிக்கப்பட்டுள்ள சதுப்பு நிலக் காணிகளையும் இந்தக் கூட்டுத் தாபனம் பராமரிக்கின்றது. இந்தக் கூட்டுத் தாபனத்தின் சட்டப் பிரிவு மற்றும் பாதுகாப்புப் பிரிவு ஆகிய பிரிவுகளின் உதவியுடன் இந்தக் கூட்டுத் தாபனத்தின் காணிகள் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவின் மூலம் இந்தக் காணிகள் தற்பொழுது முகாமை செய்யப்படுகின்றன.

5. சட்டவிரோதமாகக் குறியிருக்கும் குடியிருப்பாளர்களை வேறு இடங்களில் மீளக்குடியமர்த்தல் மற்றும் அத்தகைய குடியிருப்பாளர்களுக்கு காணி உறுதிகளை வழங்குதல்

இந்தக் கூட்டுத் தாபனத்தின் மூலம் சுவீகரிக்கப்பட்டுள்ள சதுப்பு நிலக் காணிகளில் அத்துமீறி சட்டவிரோதமாக குடியிருக்கும் நபர்களை மீளக்குடியமர்த்துவதற்கு இந்தக் கூட்டுத் தாபனத்தின் காணிகள் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு தேவையான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது. அத்தகைய கருத் திட்டங்கள் முத்துராஜவெல, வெதமுல்ல, பொக்குண வீதி, தெஹிவளை ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ளன. அத்தகைய குடும்பங்களுக்கு காணி உறுதிகளை மாற்றி வழங்கும் பொருட்டு தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திட்டமிடல் மற்றும் வணிக அபிவிருத்திப் பிரிவு

1. நிர்மாணக் கைத்தொழிலின் நிமித்தம் கடற்கரை மணலை அகழ்ந்தெடுத்தல்

சீமெந்து விநியோகமும் மற்றும் மணல் விநியோகமும் கொங்கிறீட்டு உற்பத்தியில் மிகவும் அத்தியாவசியமான ஒட்டுமொத்த மூலப்பொருட்களாக விளங்குவதால் நிர்மாண மூலப்பொருட்களை விநியோகிக்கும் கைத்தொழில்கள் நிர்மாணக் கைத்தொழிலில் பாரிய ஒரு பங்களிப்பை செய்கின்றன. அண்மை காலத்தில் நிர்மாணக் கைத்தொழில் கடுமையாக பாரியளவில் வளர்ச்சி அடைந்துள்ளதால் மணலுக்கான கேள்வி மிகவும் கணிசமானளவு அதிகரித்துள்ளது. மணலின் விநியோகத்தை உறுதிப்படுத்தி தொடர்ச்சியாக மேற்கொள்வதானது ஒரு பெரும் பிரச்சினையாக இருந்து வந்துள்ளது. மணல் விநியோகம் ஆற்று மணலை அகழ்வதன் ஊடாக பிரதான மூலமாக காணப்பட்டாலும், அதிகளவில் ஆற்று மணல் அகழ்ந்தெடுக்கப்படும் விடயத்தைக் கருத்திற் கொண்டு அரசாங்கம் விதிமுறைகளையும் மற்றும் ஒழுங்குவிதிகளையும் விதித்துள்ளது.



இந்த நீண்டகால பாதகமான சுற்றாடல் எதிர் விளைவுகளைக் கருத்திற் கொண்டு, அரசாங்கம் ஆற்று மணல் அகழ்ந்தெடுத்தல் மீது கடுமையான மட்டுப்பாடுகளை விதித்ததோடு நின்றுவிடாமல் அதற்கு ஒரு மாற்றுவழித் தீர்வைக் காணுவதற்கும் முற்பட்டுள்ளது. மேலும் ஆற்று மணல் அதற்குள்ள பற்றாக்குறையின் காரணமாக அதன் விலைகள் மிகப் பெரிய அளவில் அதிகரித்துள்ளன. சாத்தியமான ஒரு குறைந்த செலவுடைய தீர்வுத் தெரிவைக் கண்டுகொள்வது மிகப் பெரும் தேவையாக இருந்தது.

கடற்கரை மணல் ஆற்று மணலுக்கு மிகச்சிறந்த பிரயீட்டுப் பொருட்களில் ஒன்றாகும். கடற்கரை மண்ணை மிகவும் நியாயமான விலையில் போதிய அளவுகளில் பெற்றுக் கொள்ள முடியும். இந்தக் கடற்கரை மணலை மிகவும் சுற்றாடல்நேயமான முறையில் பெற்றுக் கொள்ள முடியும்.
இலங்கைக் காணி அபிவிருத்திக் கூட்டுத் தாபனம் (இ.கா.அ.கூ.) 1993 ஆம் ஆண்டு முதல் கடற்கரை மணலை அகழ்ந்து குவிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றது. நிலங்களை சீராக்கும் நோக்கங்களின் நிமித்தம் ஆரம்பத்தில் கடற்கரை மணல் அகழ்ந்தெடுக்கப்பட்டது. மணலுக்கான கேள்வி இடைவெளியைக் குறைக்கும் பொருட்டு இ.கா.அ.கூ. 2013 ஆம் ஆண்டு முதல் நிர்மாணக் கைத்தொழில்களுக்கு கடல் மணலை ஏகபோக முறையில் விநியோகித்து வந்துள்ளது.

ஆண்டு	ஒப்பந்தத் தரப்பு	அகழ்ந்து குவித்த மணலின் அளவு
1994/1995	நெதர்லாந்து பொஸ்காலிஸ் இன்டர்நெஷனல்	5 மில்லியன் மீ^{3}
2005/2007	ரொஹ்டே நீல்ஷென் ஏ/எஸ் டென்மார்க்	3 மில்லியன் மீ^{3}
2011/2013	பெல்ஜியம் ட்ரெக்கிங் இன்டர்நெஷனல்	3.8 மில்லியன் மீ^{3}

இ.கா.அ.கூ. தாபனத்திற்கு மணலை களஞ்சியப்படுத்த கெரவலப்பிட்டியவில் ஒரு ஸ்தலம் ஒதுக்கப்பட்டுள்ளது. கடற்கரையில் இருந்து ஏறத்தாழ 15 கிமீ தூரத்தில் அமைந்துள்ள ஒரு மணல் அகழும் ஸ்தலத்தில் இருந்து மணல் அகழப்பட்டு கெரவலப்பிட்டியவிலுள்ள ஒரு விஷேட களஞ்சிய ஸ்தலத்தில் குவிக்கப்படுகின்றது. நிர்மாணக் கைத்தொழிலுக்கு 2.5 மில்லியன் மீ3 அளவுக்கும் அதிகமான மணலை விநியோகிக்கும் பொருட்டு தற்பொழுதும் கூட ஒரு மணல் அகழ்ந்து குவிக்கும் கருத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

- குறித்த கருத் திட்டத்தின் நோக்கெல்லை
  - காணிகளை சீராக்கும் நிமித்தம் கடற்கரை மணலை அகழ்ந்து குவித்தல் - 1.5 மில்லியன் மீ3
  - நிர்மாணக் கைத்தொழில்களுக்கு மணலை விநியோகிக்கும் பொருட்டு கடற்கரை மணலை அகழ்ந்து குவித்தல் - 2.5 மில்லியன் மீ3
- குறித்த ஒப்பந்தத்தின் பெறுமானம் - 19.975 மில்லியன் அ.டொ.
- ஒப்பந்தத் தரப்பு - ரொஹ்டே நீல்ஷென் ஏ/எஸ் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனம்
- முன்னேற்றம்
  - 2019.12.31 ஆம் திகதி வரை அழ்ந்தெடுத்த மணல் - 2,899,334 மீ3


கெரவலப்பிட்டியவில் இருந்து பெறப்படும் கடற்கரை மணல் கெரவலப்பிட்டியவில் அமைந்துள்ள மணல் கழுவி அரித்தெடுக்கும் பொறித் தொகுதியில் இடப்பட்டு கழுவி அரித்தெடுக்கப்படுகின்றது. மணல் கழுவி அரித்தெடுக்கும் இந்தப் பொறித் தொகுதியில் இருந்து நாள் ஒன்றுக்கு தற்பொழுது 750 கியூப்களுக்கும் அதிகமான மணல்கள் விநியோகிக்கப்படுகின்றன. இந்தக் கடற்கரை மணல் 'சங்ஸ்தா மணல்' என்ற வணிகப் பெயரில் விற்பனை செய்யப்படுகின்றது.

கடற்கரை மணலுக்கான கேள்வி அதன் விலை காரணமாக கடந்த ஒரு சில ஆண்டுகளில் பிரமாண்டமான அளவு அதிகரித்துள்ளது. நிர்மாணப் பணிகளுக்கு மணலின் பொருத்தப்பாடு தொடர்பாக பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வு மாற்றம் அடைந்துள்ளது.

எனினும், 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத பயங்கரவாத தாக்குதல்களின் விளைவாக சமூகத்திலும் மற்றும் உயிரியல் சுற்றாடலிலும் நிகழ்ந்த நிலைகுலைவு காரணமாக 2019 ஆம் ஆண்டில் மணல் விற்பனையில் ஒரு வீழ்ச்சி காணப்பட்டது.

கீழ்காணும் வரைபு 2013 ஆம் ஆண்டு முதல் வருடாந்தம் விற்பனை செய்யப்பட்டுள்ள கடற்கரை மணல்களின் அளவுகளை சுட்டிக் காட்டுகின்றது.

2013 - 2019 ஆம் ஆண்டு காலப் பகுதிற்கான கடற்கரை மணல் விற்பனை அளவுகள் பற்றிய விபரம்



'சங்ஸ்தா மணலின்' தொடர் விநியோகத்தை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் புவியல் ரீதியாக கிடைக்கக் கூடிய தன்மையை அதிகரிப்பதற்கும் கீழ்காணும் நடவடிக்கைகள் இ.கா.அ.கூ. தாபனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்தகைய நடவடிக்கைகள் எதிர்வரும் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படும்.

• *மணலை கழுவி அரித்தெடுக்கும் புதிய பொறித் தொகுதிகளை நிறுவுதல்*

மணலின் தரக் கட்டுப்பாட்டுப் பொறிமுறையை மேம்படுத்தவும் மற்றும் உற்பத்தியின் பெறுமான விகிதத்தை அதிகரிக்கவும் பொருட்டு மணலை கழுவி அரித்தெடுக்கும் செயல்முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

நாள் ஒன்றுக்கு 500 கியூப்கள் கொள்திறனுடைய ஒரு பொறித் தொகுதி அசெட் இன்ஜினியரிங் நிறுவனத்தினால் இயக்கப்படுகின்றது. இந்தப் பொறித் தொகுதி 2017 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. நாள் ஒன்றுக்கு 275 கியூப்கள் கொள்திறனுடைய ஒரு REDECO பொறித் தொகுதியும் 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

மணல் பொதியிடும் பொறித் தொகுதியைத் தாபித்தல்


சந்தைப் பிரவேசத்தை மேம்படுத்தும் பொருட்டு 50 கி.கி. நிறையுடைய மணல் உறைகள் அறிமுகப் படுத்தப்பட்டன. சிறிய அளவுகளில் மணல் தேவைப்படும் சிறிய அளவான ஒப்பந்தத் தரப்புகள் மற்றும் வீடு கட்டும் நிர்மாணத் தரப்புகள் வாடிக்கையாளர்காக இலக்குக் கொள்ளப்பட்டுள்ளனர்.

கடற்கரை மணல் விற்பனை

இந்தக் கூட்டுத் தாபனத்திற்கு கடற்கரை மணல் விற்பனையில் இருந்து அதிகளவான வருமானப் பங்களிப்பு கிடைத்தது. கடந்த ஒரு சில ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது, 2019 ஆம் ஆண்டில், இந்தக் கூட்டுத் தாபனத்தால் 128,087.12 கியூப் மணல் பரிமாண அளவு இலக்கை அடைய முடிந்தது. இந்த அளவான மணல் விற்பனை செய்யப்பட்டதில் இருந்து 1,068,742,230.92 இ.ரூ. வருமானம் ஈட்டப்பட்டது.


மொத்த வருமானம் (2019): 1,068.74 மில்லியன் ரூபாவாகும்.

மாதாந்தம் விற்பனை செய்யப்பட்டுள்ள கடற்கரை மணல் அளவுகள் பற்றிய விபரங்கள் - 2019




கீழ்காணும் வரைபடம் கடந்த தொடர்ச்சியான நான்கு ஆண்டுகளுக்குரிய மணல் விற்பனை மாதிரியை சுட்டிக் காட்டுகின்றது.

வரைபடம் 01 - மாதாந்த கடல் மணல் விற்பனை



வரைபடம் - மாதாந்தம் விற்பனை செய்யப்பட்டுள்ள கடல் மணல் அளவுகள்



வருமானம் ஈட்டும் செயற்பாடுகள்

1. *தியத்த உயன*

தியவன்னா ஒயா ஆற்றங்கரைப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த தியத்த உயனப் பூங்கா 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்தப் பூங்கா ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள நாளில் இருந்து இதனை அண்மித்த பகுதியில் வசிக்கும் மக்களை மட்டுமன்றி நாடு முழுதிலும் வசிக்கும் சகல மக்களையும் கவர்ந்து வெற்றி கண்டுள்ளது. இந்தப் பூங்கா ஒரு சதுப்பு நிலப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதால் இதனை வர்த்தகத் தலைநகரத்தில் இருந்து இலகுவாக அடைய முடியும். நகரத்தில் அதிக சன நெருக்கடி நிலவுவதால் அத்தகைய நெருக்கடியை தவிர்த்து குடும்பங்கள் அவற்றின் நேரங்களை சற்று தரமாக கழிப்பதற்கு இது ஓய்வெடுக்கக் கூடிய பொருத்தமான ஒரு இடமாகும். நீரூற்றுக்களின் இனிமையான நீரோசையும் இனிமையான காட்சிகளும் பூங்காவின் ஒட்டுமொத்த அமைப்புக்கும் இனிமையான ஒரு சூழலை பெற்றுத் தருகின்றன.

இதன் அருகில் நீரூற்றுக்கள் மட்டுமன்றி அமைதியாக ஓடும் தியவன்னா ஓயாவின் நீர் வளங்களும் காணப்படுவதாலும் மற்றும் நாளின் எல்லா நேரத்திலும் நீரும் இனிமையான தென்றல் காற்றும் கிடைக்கக் கூடிய சுகபோக பசுமைகள் நிறைந்த ஒரு அமைதியான சூழலில் அமைந்துள்ளதாலும் இந்தப் பூங்கா பொது மக்களுக்கு அவர்கள் பொழுதுபோக்கக் கூடிய பொருத்தமான ஒரு இடமாக விளங்குகின்றது.



தியவன்னா ஒயாவை கடந்து செல்லும் ஒருவர் அந்தப் பகுதியில் பொது மக்கள் ஓய்வெடுப்பதற்கு சிறந்த முறையில் அழகான ஆசனங்கள் அமைக்கப்பட்டுள்ள இனிய பூங்கா தோட்டத்தையும் அதனை சூழவுள்ள இனிமையான காட்சிகளையும் பார்த்து அங்கு சற்று தங்கி ஓய்வெடுத்துச் செல்லாமல் இருக்க மாட்டார்.

இந்தப் பூங்காவைப் பார்வையிடுபவர்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய உணவு விற்பனை கடைகளும் காணப்படுகின்றன. பார்வையாளர்கள் ஆரோக்கியமான அமைதியான ஒரு சூழலில் தீன் பண்டங்களை உண்டும் மற்றும் பானங்களைப் பருகியும் ஓய்வெடுக்க முடியும்.

தியத்த உயனப் பூங்காவில் காணப்படும் அழகான நீரியல் உயிரினங்கள் பல சிறுவர்களை ஈர்க்கின்றன. மாலை நேரங்களில் அதிக மக்கள் இந்த நீரியல் உயிரினங்களை பார்வையிடுவதற்காக திரண்டு வருவார்கள். இது நகரத்தில் வாழுகின்ற மக்களின் வாழ்க்கைக்கு மிகவும் இனிமையான பொழுதுபோக்கு வசதிகளை வழங்குகின்றது.

3D முற்பரிமாண கண்ணுக்கினிய சித்திரரக் காட்சிப் பகுதி அதிகமான பார்வையாளர்களை கவரக் கூடிய பகுதியாகும். இந்தப் பகுதியில் மக்கள் அவர்களின் அன்பானவர்களுடன் இணைந்து புகைப்படங்களை எடுத்து மகிழலாம்.



இந்தப் பகுதியில் காணப்படும் முக்கிய சிறப்பம்சங்கள் பின்வருமாறு:

- ஆற்றங்கரைப் பக்க ஓரமாக தியவன்னா ஒயா நீரோடும் ஆற்றங்கரைப் பகுதிகளில் அமைந்துள்ள அழகான இனிமையான பூ விற்பனைக் கடைகள்
- ஆற்றுப் படகுகளை அல்லது மிதக்கும் படகுகளை மற்றும் மிதி ஊர்திகளை பெற்று பொழுதுபோக்காகப் பயணம் செய்யக் கூடிய வசதிகள்
- இலை வடிவான பேரூந்துத் தரிப்பிடம்
- சீமெந்தினால் செய்யப்பட்டுள்ள அமர்வு ஆசங்கள் மற்றும் மேசைகள்
- மத்திய நீரூற்று
- நிறம் மாறிவரும் நீரூற்று வசதி
- சிறுவர்கள் விளையாடக் கூடிய பகுதிகள்
- ஓய்வெடுக்கக் கூடிய இனிமையான சூழல் - மாணவர்கள் கற்கவும் கூடிய சூழல்
- உணவு விற்பனை நிலையங்கள் - வகை வகையான உள்ளூர் மற்றும் வெளிநாட்டு டிபென்களையும் மற்றும் பானங்களையும் அருந்தி தாகம் தணிக்கக் கூடிய வசதிகள்
- தாழ்வார நடைபாதைகளின் ஓரமாக நடந்து செல்லக் கூடிய, துள்ளிக் குதிக்கக் கூடிய மற்றும் துவிச்சக்கர வண்டிகளை ஓட்டக் கூடிய வசதிகள்
- 3D பரிமாண புகைப்படங்களை எடுக்கக் கூடிய வசதி
- நீரியல் உயிரினங்களைப் பார்வையிடும் வசதி

தேசிய ரீதியில் போட்டிக் கேள்வி நடைமுறையின் ஊடாக வணிகத் தரப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு வருட காலப் பகுதிற்கு மாதாந்த வாடகை அடிப்படையில் கேள்வி ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்தக் கேள்வி ஒப்பந்தங்கள் ஐந்து வருடங்கள் வரை வருடாந்த அடிப்படையில் புதுப்பிக்கப்படும்.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த பயங்கரவாதத் தாக்குதல்களை அடுத்து மக்களின் சமூக நிலை இயல்புநிலைக்குத் திரும்பும் வரை இந்த வணிகத் தரப்புகளுக்கு சலுகைகள் வழங்கப்பட்டிருந்தன. ஆதலால் உணவு விற்பனைக் கடைகளில் இருந்து கிடைக்கும் வருமானத்தில் ஒரு வீழ்ச்சி காணப்படுகின்றது.

உணவு விற்பனை நிலையங்கள்: 25.28 மில்லியன் ரூபா
பூ விற்பனைக் கடைகள்: 35.94 மில்லியன் ரூபா
ஊக்குவிப்பு சார்ந்த செயற்பாடுகள்: 04.44 மில்லியன் ரூபா
மொத்த வருமானம் (2019): 65.66 மில்லியன் ரூபா

3. பெல்லன்வில



கொழும்பு நகரத்தில் வாழுகின்ற உள்ளூர்வாசிகள் இதைப் பற்றி நன்கு அறிந்துள்ளனர். ஒவ்வொரு நாளும் ஓடுவதற்கும், துள்ளிக் குதித்துப் பயிற்சி உடற்பயிற்சி செய்வதற்கும் மற்றும் துவிச்சக்கர வண்டிகளை ஓட்டுவதற்கும் என நூற்றுக்கான அல்லது ஆயிரக்கணக்கான மக்கள் இங்கு வருகின்றனர். இந்த மிக முக்கியமான இடத்தை பார்வையிடுவது இரவு நேரத்தில் கொழும்பு நகரத்தில் செய்யக் கூடிய விடயமாகும்.

கொழும்பு பொரலஸ்கமுவ பிரதேசத்தில் அமைந்துள்ள பெல்லன்விலப் பூங்கா, இலங்கையில் இன்று வரை நாம் கதைத்த பேசிய ஏனைய பூங்காகக்களை விடவும் சற்று வித்தியாசமான பூங்காவாகும்.

வெள்ளப்பெருக்கு அச்சுறுத்தலை தடுக்கும் நோக்கில் 'வெரஸ் கங்கை' கருத் திட்டத்தின் முதல் கட்டமாக இந்த பெல்லன்விலப் பூங்கா 2014 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. நடந்து செல்லக் கூடிய நடைபாதை, துவிச்சக்கர வண்டிகளை ஓட்டக் கூடிய ஓடு பாதை மற்றும் உணவு விற்பனை நிலையங்கள் என்பன இந்தப் பூங்காவின் பிரதான சிறப்பம்சங்களாக விளங்குகின்றன. இந்தப் பூங்கா உண்மையில் குடும்ப உறவினர்களுடன் அல்லது நண்பர்களுடன் மாலை நேரங்களில் பொழுபோக்காக நேரத்தை கழிக்க மிகவும் இனிமையான ஒரு இடமாகும்.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த பயங்கரவாதத் தாக்குதல்களை அடுத்து மக்களின் சமூக நிலை இயல்புநிலைக்குத் திரும்பும் வரை சலுகைகள் வழங்கப்பட்டிருந்தன. ஆதலால் உணவு விற்பனைக் கடைகளில் இருந்து கிடைக்கும் வருமானத்தில் ஒரு வீழ்ச்சி காணப்படுகின்றது.

உணவு விற்பனைக் கடைகள்: 12.09 மில்லியன் ரூபா
ஊக்குவிப்பு சார்ந்த செயற்பாடுகள்: 0.75 மில்லியன் ரூபா
மொத்த வருமானம் (2019): 12.84 மில்லியன் ரூபா



3. கிம்புலாவெல



உடற்பயிற்சி சார்ந்த செயற்பாட்டு வசதிகள் 2015.01.12 ஆம் திகதி திறந்த வைக்கப்பட்டன. இந்த வசதிகளின் நிமித்தம் 103 அங்கத்தவர்கள் உறுப்புரிமையை பெற்றுள்ளனர். தற்பொழுது இந்த எண்ணிக்கை 483 வரை அதிகரித்துள்ளது. இதனால் பொது மக்களின் ஆரோக்கியமான வாழ்க்கைப் பாணிகளுக்கு மேலும் பெறுமானம் சேர்கின்றது.

பயனுள்ள, வினைத் திறன் வாய்ந்த மற்றும் ஊக்குவிக்கக் கூடிய உடற்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்பட்டதன் மூலமாக இது முழுமை அடையச் செய்யப்பட்டுள்ளது. எமது பயிற்றுவிப்பாளர்கள் மிகவும் தகைமையானவர்கள். இவர்கள் கைத்தொழிலின் புதிய போக்குகளுக்கு ஏற்ப இந்த வசதிகளைப் பேணிப் பராமரித்து வருகின்றனர்.

புதிதாக சேருகின்ற அங்கத்தவர்களுக்கு இவர்கள் மிகவும் கவனிக்கக் கூடிய உதவக் கூடிய அனுபவம் வாய்ந்தவர்களாவர்.

உடற்பயிற்சி நிலையம்: 16.19 மில்லியன் ரூபா
ஊக்குவிப்பு சார்ந்த செயற்பாடுகள்: 0.33 மில்லியன் ரூபா
மொத்த வருமானம் (2019): 16.52 மில்லியன் ரூபா



4. கெலிமடள

"பொரலஸ்கமுவ - கெலிமடள சிறுவர் பூங்கா" கொழும்பு - ஹொரண வீதியில் அமைந்துள்ளது. இந்தக் கெலிமடளப் பூங்கா 2018 ஆம் ஆண்டு "வெரஸ் கங்கை" கருத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்தப் பூங்காதான் விஷேட தேவைகளையுடைய சிறுவர்களுக்கு என இலங்கையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள முதலாவது சிறுவர் பூங்காவாகும். நடந்து செல்லக் கூடிய நடைபாதை, உணவு விற்பனை நிலையங்கள் மற்றும் சிறுவர் பூங்காப் பகுதி என்பன இந்தப் பூங்காவின் சிறப்பம்சங்களாக விளங்குகின்றன. இந்தப் பூங்கா உண்மையில் குடும்ப உறவினர்களுடன் அல்லது நண்பர்களுடன் மாலை நேரங்களில் பொழுதுபோக்காக நேரத்தை கழிப்பதற்கு மிகவும் சிறந்த இனிமையான ஒரு இடமாகும்.

வலதுகுறைந்த சிறுவர்களுக்கு என திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ள 21 வித்தியாசமான வகைப் பொழுதுபோக்குச் செயற்பாடுகள் காணப்படுகின்றன. விஷேட தேவைகளையுடைய சிறுவர்கள் விஷேடமான பாதுகாப்பின் கீழ் கூடுமான வரை ஆகக் கூடிய கூட்டுச் செயற்பாடுகளில் பங்குபற்ற முடியும்.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த பயங்கரவாதத் தாக்குதல்களை அடுத்து மக்களின் சமூக நிலை இயல்புநிலைக்குத் திரும்பும் வரை சலுகைகள் வழங்கப்பட்டிருந்தன. ஆதலால் உணவு விற்பனைக் கடைகளில் இருந்து கிடைக்கும் வருமானத்தில் ஒரு வீழ்ச்சி காணப்படுகின்றது.

உணவு விற்பனைக் கடைகள்: 1.32 மில்லியன் ரூபா
ஊக்குவிப்பு சார்ந்த செயற்பாடுகள்: 0.18 மில்லியன் ரூபா
மொத்த வருமானம் (2019): 1.50 மில்லியன் ரூபா



5. கால்வாய் ஒதுக்கப் பகுதி விளம்பரப் பலகைகள் வசதி

மொத்த வருமானம் (2019): 5.99 மில்லியன் ரூபா

அநேகமாக பகுத்தறிவுடைய சாத்தியமான ஒரு வாடிக்கையாளர் பார்க்கும் முதலாவது விடயம் இந்தக் கம்பனியின் வெளிக்கள சின்னமாகும். இந்தக் கம்பனியின் லோகோ போதியளவில் தெளிவானதாகவும் மற்றும் போதியளவில் கவரக் கூடியதாகவும் (வெளிச்சமல்லாமல் தெளிவற்றதாக இருத்தல் கூடாது) மற்றும் இங்கு என்ன விற்பனை செய்யப்படுகின்றது என்பதை பகுத்தறிவுடைய சாத்தியமான வாடிக்கையாளர்கள் நன்கு அறிந்து கொள்ளக் கூடிய வகையில் போதிய தகவல்களை அளிக்கக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். நாம் குறித்த பிரதேசத்தின் மாநகர சபையினது அனுமதியுடன், தனியார் தரப்புகள் அல்லது கம்பனிகள் அவற்றின் உற்பத்திகளை அல்லது சேவைகளை விளம்பரப்படுத்தக் கூடிய வகையில், இ.கா.அ.கூ. தாபனத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கால்வாய் கரைப் பகுதிகளிலும் மற்றும் ஏனைய பகுதிகளிலும் இடவசதிகளை வழங்கியுள்ளோம்.





6. கார்ட்டென்ஸ் ஆர்க் ரெஸ்ட்டுரன்ட்டு

கார்ட்டென்ஸ் ஆர்க் ரெஸ்ட்டுரன்ட்டு இலங்கையில் காணப்படும் மிகப் பெரிய மிதக்கும் ரெஸ்ட்டுரன்ட்டாகும். இது நாவலவில் அமைந்துள்ள நகர சதுப்பு நிலப் பூங்காவை அண்மித்த தியவன்னா ஒயாவின் அமைதியான நீர் நிலைப் பகுதியில் இயங்குகின்றது. இது 2014 ஆம் ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த வகையான செயற்பாட்டு வசதியில் இருந்து மாதாந்த அடிப்படையில் 0.18 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்படுகின்றது.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த பயங்கரவாதத் தாக்குதல்களை அடுத்து மக்களின் சமூக நிலை இயல்புநிலைக்குத் திரும்பும் வரை வணிகத் தரப்புகளுக்கு சலுகைகள் வழங்கப்பட்டிருந்தன. ஆதலால் இந்த ரெஸ்ட்டுரன்ட்டில் இருந்து கிடைக்கும் வருமானத்தில் ஒரு வீழ்ச்சி காணப்படுகின்றது.

மொத்த வருமானம் (2019): 0.9 மில்லியன் ரூபா



7. இறங்குதுறைப் படகு சேவை

பாராளுமன்ற வீதியில் ஏற்படும் வாகனப் போக்குவரத்து நெரிசல்களின் காரணமாக ஏற்படும் நேர வீணாதலை வெற்றிகரமாக தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு இலங்கைக் கடற்படையின் உதவியுடன் மாணவர்களுக்கு படகுப் போக்குவரத்து வசதிகள் வழங்கப்படுகின்றன. இ.கா.அ.கூ. தாபனம் தியத்த உயனப் பூங்காவில் இருந்து ராஜகிரியவில் அமைந்துள்ள கேட்வே கல்லூரிக்கு ஒரு இறங்குதுறைப் படகு சேவையை ஆரம்பித்துள்ளது. செய்து கொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு (பு.ஒ.) இணங்க இ.கா.அ.கூ. தாபனமும் இலங்கைக் கடற் படையும் (இ.க.ப.) கட்டணத்திற்காக படகு சேவையை இயக்கி நிருவகிக்கும். வோர்ட்டெஸ் எஜ் வளாகத்துடன் இணையும் ராஜகிரிய கேட்வே கல்லூரிப் பகுதியை சூழ்ந்து அழகான இனிமையான நீர் மார்க்க வசதிகள் இருப்பதால் இந்த பிரத்தியேகமான முன்னெடுப்பு நடவடிக்கை முடியுமான வரையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தப் படகு சேவை இந்தக் கூட்டுத் தாபனத்திற்கு மேலதிகமாக ஒரு வருமானத்தைப் பெற்றுத் தருவது மட்டுமல்லாமல் அதிக போக்குவரத்து நெரிசல்கள் காப்படும் நேரத்தில் ஒரு தேசிய பிரச்சினையாக எழுகின்ற வாகனப் போக்குவரத்து நெரிசல்களைக் குறைப்பதற்கான சிறந்த ஒரு தீர்வை வழங்கவும் உதவுகின்றது. இது கால்வாய்களின் பராமரிப்பு சார்ந்த செலவுகளைக் குறைப்பதற்கும் உதவுகின்றது. மொத்த வருமானம் (2019): 0.73 மில்லியன் ரூபா.





8. அன்னப்பறவை வடிவப் படகு சேவை

ஓய்வையும் மற்றும் அமைதியையும் பெற்றுக் கொடுப்பது தியவன்னா ஒயாவின் வாக்குறுதியாகும். அன்னப்பறவை வடிவப் படகு சேவை மகிழ்ச்சியைப் பெற்றுக் கொடுக்கின்றது. இதே நேரம் சதுப்பு நிலக் கால்வாய் கரைப் பகுதி ஓரமாக பயணிக்கும் ஒரு படகு சேவை நகரத்தில் வாழுகின்ற மக்கள் இயற்கையின் இனிமையுடன் இணைவதற்கும் உதவுகின்றது. பொது மக்களின் நிமித்தம் இந்த வசதியை இயக்குவதற்கு நாம் ஒரு தனியார் தரப்பை தேர்ந்தெடுத்து ஒப்படைத்துள்ளோம்.

மொத்த வருமானம் (2019): 0.34 மில்லியன் ரூபா




பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் பிரிவு

இந்தப் பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் பிரிவின் பிரதான தொழிற்பாடுகள் பின்வருமாறு:

- பின்வருவனவற்றின் இயக்கப் பராமரிப்புப் பணிகள்
  - மண்ணை நகர்த்தும் / அகழ்ந்தெடுக்கும் இயந்திர உபகரணங்கள்
  - டிப்பெர்கள், ட்ரக்டெர்கள் மற்றும் டெய்லர்கள்
  - ஏனைய இலகு வாகனங்கள் மற்றும் பாரம் தூக்கும் கனரக வாகனங்கள் மற்றும் ஏற்றியிறக்கல் போக்குவரத்து இயந்திராதிகள்
- 6மீ ஆழம் வரை கால்வாய்களை, ஏரிகளை அகழ்ந்து துப்புராவாக்கல் / வண்டல் மண்களை அகற்றல்
- குறிப்பாக வெள்ளப்பெருக்கு அனர்த்த அவசரநிலைகளில் பதிலீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- இந்தக் கூட்டுத் தாபனத்திற்கு சொந்தமான இலகு வாகனங்களின் பழுபார்ப்பு மற்றும் சேர்விஸ் பணிகளை மேற்கொள்ளல்
- நிர்மாணம் மற்றும் ஒட்டு வேலைகளை கவனித்தல்

கிடைக்கக் கூடிய இயந்திர வகைகள்

(1) இயந்திராதிகள் (**P&E) (214)**
(2) மண்ணை நகர்த்தி/அகழ்ந்தெடுக்கும் இயந்திர உபகரணங்கள் (105)**, (3)** கனரக வாகனங்கள் (109)**,** அகழ்ந்து துப்புரவாக்கும் இயந்திராதிகள் (74)**, (4)** தூக்கு இயந்திர உபகரணங்கள் (25)**, (5)** டிப்பெர்கள்/ஏனைய வாகனங்கள் (59)**, (6)** ட்ரக்டெர்கள் (50)



மேற்பரப்புகளையும் மற்றும் உப மேற்பரப்புகளையும் சுத்தம் செய்வதற்கான மிதக்கும் டோஷர்




வண்டல் மண்களை அகற்றும் / சுத்தம் செய்யும் செயற்பாடுகளுக்கான நீண்டு சுருங்கும் கரமுடைய மெல்லிய நில அம்பிபியஸ் அகழ்வு இயந்திரம்



வண்டல் மண்களை அகற்றும் / சுத்தம் செய்யும் செயற்பாடுகளுக்கான பேர்ஜ் மவுண்டெட்டு அகழ்வு இயந்திரங்கள்



6மீ ஆழம் வரை அகழ்ந்து துப்புவராக்கக் கூடிய 12 அங்குல வெட்டி உறிஞ்சியெடுத்து அகழ்ந்து துப்புரவாக்கும் இயந்திரம்



அகழ்ந்து துப்புரவாக்கி இறைத்தெறியக் கூடிய 6 அங்குல அம்பிபியஸ் சொப்ட் நில அகழ்வு இயந்திரம்



நிலத்தில் ஓடும் கனரக இயந்திர உபகரணங்கள்





விநியோகங்கள் பிரிவு

செயல்முறையை மேலும் மேம்படுத்தும் பொருட்டு விநியோகங்கள் மற்றும் களஞ்சியப் பிரிவு தொழில் திறமைகளை அறிமுகப்படுத்தி வருகின்றது.

இ.கா.அ.கூ. தாபனத்தின் தொழில் சார் பொருத்தப்பாட்டில் ஒருமுகப்படும் மிகச்சிறந்த வாடிக்கையாளர்களாக இருக்க வேண்டும் எனும் எமது உள்ளக வாடிக்கையாளர்களுக்கு ஒரு தொழில் தேர்ச்சி வாய்ந்த சேவையை வழங்கும் முகமாக இந்த விநியோகங்கள் பிரிவு ஒரு தூரநோக்குத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. "**சுற்றாடல் தேவைப்பாடுகளை அனுசரித்து இறுதிப் பயனர்களின் தேவைகளை பயனுள்ளதாகவும், வினைத் திறன் வாய்ந்ததாகவும், பொருளாதார ரீதியாகவும் நிறைவேற்றுவதற்கான மூலப்பொருட்களையும் மற்றும் சேவைகளையும் பெற்று வழங்குவது**" இதன் செயற்பணியாகும்.

இந்த செயற்பணியின் சார்பாக, விநியோகங்கள் பணிக்குழு கட்டமைக்கப்பட்டுத் தாபிக்கப்பட்டுள்ளது. இ.கா.அ.கூ. தாபனத்தின் இந்த விநியோகங்கள் பிரிவு 2019 ஆம் ஆண்டிற்கு இந்தக் கூட்டுத் தாபனத்தின் குறிக்கோள்களை அடையும் பொருட்டு கணிசமானளவு பங்களித்துள்ளது. குறித்துரைக்கப்பட்டுள்ள நியம தரங்களை அனுசரித்து அணுகூல விலையில் உரிய கால நேரத்திற்கு பொருட்களையும் மற்றும் சேவைகளையும் பெற்றுக் கொடுத்து அதிகமான கருத் திட்டங்களை உரிய நேர காலத்திற்கு நிறைவு செய்யக் கூடிய வகையில் இந்தப் பிரிவு பெரிதும் பங்களித்துள்ளது. பெறுகை செயல்முறையின் நிமித்தம் பின்வரும் மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. கொள்வனவு சார்ந்த தரவுகள் தளத்தைத் தாபிப்பது அத்தகைய ஒரு செயற்பாடாகும். இந்தத் தரவுத் தளம் சகல பிரிவுகளில் இருந்தும் அனுப்பி வைக்கப்படுகின்ற கொள்வனவு சார்ந்த கோரல்கள் பற்றிய விரிவான முழுமையான விபரங்களை உள்ளடக்கியிருக்கும். செல்லும் நேரத்தைக் குறைப்பதற்கும் மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கும் இந்தத் தரவுத் தளம் பங்களித்துள்ளது. மேலும் இந்த வசதி, சேவை மற்றும் ஒப்பந்தப் பிரதேசங்களுக்கு என விஸ்தரிக்கப்பட்டு உள்ளக வாடிக்கையாளர்களுக்கும் பார்க்கக் கூடிய வகையில் வழங்கப்பட்டது. இந்தக் கூட்டுத் தாபனத்தின் ஏனைய பிரிவுகளுக்கு மத்தியில் சரியான தொடர்பாடல் மார்க்கங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன. பிரதானமாக மத்திய களஞ்சிய நிலையங்கள், வேலைப்பட்டறை, போக்குவரத்துப் பிரிவு மற்றும் விநியோகங்கள் பிரிவு என்பவற்றின் செயல்முறைகள் அத்தகைய செயல்முறைகளை நெறிப்படுத்தும் நோக்கில் ஒருங்கிணைக்கப்பட்டன. செயல்முறைகளை ஒருங்கிணைத்து தற்பொழுது காணப்படுகின்ற தடைகளைக் குறைப்பதற்கு பிரிவு சார்ந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் பயனுள்ளதாக அமைந்தன. இனங்காணப்பட்டுள்ள கருத் திட்டங்களின் பெறுகை சார்ந்த செயல்முறையை ஒருங்கிணைக்கும் பணி விநியோகங்கள் பிரிவில் இருந்து தேர்ந்தெடுத்த ஒரு பிரதிநிதியிடம் ஒப்படைக்கப்பட்டது. விநியோக சங்கிலி செயல்முறையின் நிமித்தம் சிறந்த விநியோகங்கள் முகாமையாளர் ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார். இந்த விடயம் அந்தந்தப் பிரதிப் பொது முகாமையாளர்களினாலும் மற்றும் ஸ்தலப் பொறியியலாளர்களினாலும் பாராட்டப்பட்டது. வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்கும் பொருட்டு ஆசன அமர்வு ஒழுங்குகள் மீளமைக்கப்பட்டுள்ளன. கொள்வனவு பற்றிய ஒரு பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தைத் தொடர்ந்து, கேள்வி மனுக்களை திறக்கும் புதிய ஒரு முறையியல் அறிமுகப்படுத்தப்பட்டது. கேள்வி மனுக்களை திறக்கும் குழுவுக்கும் மற்றும் கேள்வி மனுக்களை மதிப்பீடு செய்யும் குழுவுக்கும் மாத்திரம் கேள்வி மனுக்கள் திறக்கும் தகவல்கள் கிடைக்கச் செய்யப்பட்டன. பொறியிடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டிருந்த கேள்வி மனுக் கடித உறைகள் அந்தந்தக் கேள்வி மனு மதிப்பீட்டு அதிகாரிகளுக்கு நேரடியாக அனுப்பப்பட்டன. களஞ்சியக் காப்பாளர்களுக்கும் மற்றும் விநியோகங்கள் பிரிவின் ஊழியர்களுக்கும் என அறிமுகப்படுத்திய தகவல் முகாமைத்துவ முறைமையும் (SAP) விநியோக சங்கிலி செயல்முறையை அடுத்த கட்டத்திற்குக் கொண்டுசெல்ல உதவியாக அமைந்தது. பி.பொ.மு. (நிதி) அவர்களினால் பயிற்சித் தொடர்கள் நடத்தப்பட்டன. சகல களஞ்சியக் காப்பாளர்களுக்கும் கணனி இயந்திரங்கள் வழங்கப்பட்டன. களஞ்சியக் காப்பாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் அறிவைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு அமர்வுக்காக டொயோட்டா மோட்டார் கம்பனிக்கு விஜயம் செய்தனர். 10'x8', அளவாக மாற்றப்பட்டுள்ள 6 பெட்டிகள் கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சிய வசதியை மேம்படுத்துவதற்காகவும் மற்றும் செயல்முறையை நெறிப்படுத்துவதற்காகவும் களஞ்சியக் காப்பாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டன. டீசல் டாங்கிகள் நிறுவப்பட்டு பகிர்ந்தளிப்பின் நிமித்தம் கிடைக்கச் செய்யப்பட்டன. இந்த டாங்கியின் கொள்ளளவு 24,000 லீற்றர்களாகும்.

மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவு

<u>ம.வ.அ. பிரிவின் முக்கிய தொழிற்பாடுகள்</u>

1. ம.வ. செயற்பாடுகள் (நிருவாகம்)

பிரதானமாக ம.வ. தொழிற்பாடுகளின் இயக்கச் செயற்பாடுகளை சுலபமாக மேற்கொள்ளல் மற்றும் ஊழியர்களின் நலன்புரி விடயங்களை உறுதிப்படுத்தல்.

2. ம.வ. அபிவிருத்திகள்

- தனியான குறிக்கோள்களையும் மற்றும் நிறுவனம் சார்ந்த குறிக்கோள்களையும் அடையும் பொருட்டு இந்தக் கூட்டுத் தாபனத்தினுள் மனித வள மூலதனத்தை சரியான முறையில் திட்டமிடுதல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.

3. ம.வ. பயிற்சி மற்றும் அபிவிருத்தி

- நிறுவனம் சார்ந்த செயலாற்றுகையை மேற்படுத்தும் நோக்கத்தின் நிமித்தம் ஊழியர்களின் திறன்களை மேம்படுத்தி குறிக்கோள்களை அடைதல்.

ம.வ. செயற்பாடுகள்		ம.வ. அபிவிருத்திகள்	ம.வ. பயிற்சிகள்
▪ வருடாந்த இடமாற்றங்களையும் மற்றும் சேவையின் பேரில் இடமாற்றங்களையும் செய்தல். ▪ மனித வலு / சொத்துக்கள் / வாகனங்கள் / இயந்திராதிகள் உபகரணங்கள் என்பவற்றில் விபத்துக்களுடன் தொடர்புடைய காப்புறுதி விடயங்களையும் மற்றும் விபத்துக் காப்புறுதிக் கோரல்களையும் கையாளுதல். ▪ ஒழுக்காற்று நிருவாக விடயங்களை கையாளுதல். ▪ ஊழியர்களின் நலன்புரி விடயங்களை கவனித்தல். ▪ ஊழியர் நன்மைகளை முடிவுறுத்துதல். பாதுகாப்புப் பிரிவு, போக்குவரத்துப் பிரிவு மற்றும் மருத்துவ நிலையங்கள் என்பவற்றுடன் இணைந்து செயற்படுதல். ▪ உள்வருகை மற்றும் வெளிச்செல் அஞ்சல் விடயங்களை கவனித்தல்.	▪ சம்பளங்களையும் மற்றும் ஊதியங்களையும் நிருவகித்தல். ▪ வருடாந்த / சம்பளங்களை சம்பளப் படியேற்றங்களை செய்து வழங்கல். ▪ செயலாற்றுகையை மதிப்பிட்டு விருதுகளை வழங்கல். ▪ தொழிற்சங்க விடயங்களை முகாமை செய்து கையாளுதல். ▪ ஊழியர்களின் மனக்குறைகளை கவனித்து அவற்றுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தல். ▪ ஆட்சேர்ப்புத் திட்டத்தையும் மற்றும் பதவியுயர்வு முறையையும் சரியாகப் பேணுதல். ▪ நேர முகாமைத்துவத்தை பேணுதல். ▪ உள்ளக மற்றும் வெளியக சுற்றறிக்கைகளை பேணுதல்.	▪ ம.வ. களை திட்டமிடுதல். ▪ ஊழியர்களைத் தேர்ந்தெடுத்து ஆட்சேர்த்தல். ▪ பதவியுயர்வுகளை வழங்குதல். ▪ ம.வ. கொள்கையைத் தயாரித்தல், அதனை செயற்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல். ▪ பணிப்பாளர்கள் சபையினதும் மற்றும் சிரேஷ்ட முகாமையாளர்களினதும்தீர்மானங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் செயற்படுத்துதல். ▪ கூட்டிணைந்த திட்டங்களையும் மற்றும் வருடாந்த வரவுசெலவுத் திட்டங்களையும் தயாரித்தல். ▪ இந்தக் கூட்டுத் தாபனத்திற்கான தரமான முகாமைத்துவ முறைமைகளைக் கொண்டு தரமான கொள்கைக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் பொருட்டு செயல்முறைகளையும், நடைமுறைகளையும் மற்றும் பொறுப்புக்களையும் கவனித்துக் காண்காணித்து மேம்படுத்துதல். ▪ இ.கா.அ.கூ. தாபனம் மற்றும் REDECO நிறுவனம் ஆகியவற்றுடன் சம்பந்தமான விடயங்களை கவனித்தல்.	▪ உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் நடத்துதல். ▪ பயிற்சித் தேவைப்பாடு சார்ந்த மதிப்பீடுகளை மேற்கொள்ளல். ▪ வருடாந்த பயிற்சித் திட்டங்களைத் தயாரித்தல். ▪ தேர்ந்தெத்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் நிமித்தம் ஒரு பயிற்சிக் குழு அதிகாரிகளின் மூலம் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்படுதல். ▪ மதிப்பீட்டுத் தகவுதிறன்களின் அடிப்படையில் பின்னூட்டல் செய்தல். ▪ உயர் கற்கைகளின் நிமித்தம் நிதி உதவிகளை வழங்கல்.

<u>ஆட்களைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் ஆட்சேர்த்தல்</u>

2019.01.01 ஆம் திகதி முதல் 2019.12.31 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்டுள்ள ஆட்சேர்ப்புகள் பற்றிய விபரங்கள்

ஊழியர் வகுதி	**2019**
நிரந்தர ஊழியர்	47
ஒப்பந்த ஊழியர்	15
பயிலுநர்கள்	33
மொத்தம்	**95**

2019.12.31 ஆம் திகதிற்கான மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை	
நிரந்தர ஊழியர்	1358
ஒப்பந்த ஊழியர்	50
மொத்தம்	**1408**

ம.வ. திட்டமிடுகை - (2020 ஆம் ஆண்டிற்கான உத்தேச புதிய ஆளணி பற்றிய விபரம்)

பதவிப் பெயர்	சம்பளக் குறியீடு	அனுமதிக்கப்பட்டுள்ள ஆளணி	தற்போதுள்ள ஆளணி	பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை	உத்தேச ஆளணி
பொது முகாமையாளர்	HM 2-2	01	01	-	01
மேலதிகப் பொது முகாமையாளர்	HM 2-1	02	02	-	02
பிரதிப் பொது முகாமையாளர்	HM 1-3	12	11	01	12
உதவிப் பொது முகாமையாளர்	HM 1-1	16	14	02	16
முகாமையாளர் வகுதி	MM 1-1	148	125	23	154
கனிஷ்ட முகாமையாளர் வகுதி	JM 1-1	112	81	31	124
சட்ட உத்தியோகத்தர்	MA 5-1	06	02	04	09
இயக்கச் செயற்பாட்டு / அறிவுறுத்தல் வகுதி	MA 04	-	01	(01)	-
துணை உத்தியோகத்தர் வகுதி	MA 03	59	48	11	65
முகாமைத்துவ உதவியாளர் - தொழில் நுட்ப வகுதி	MA 2-2	213	153	60	251
முகாமைத்துவ உதவியாளர் - தொழில் நுட்பம் சாராத வகுதி	MA 1-2	210	177	33	210
ஆரம்ப மட்ட வகுதி - தேர்ச்சியுடைய	PL 03	325	317	08	419
ஆரம்ப மட்ட வகுதி - அரைத் தேர்ச்சியுடைய	PL 02	114	72	42	116
ஆரம்ப மட்ட வகுதி - தேர்ச்சி சாராத	PL 01	508	404	104	452
உத்தேச புதிய பதவிகள்	-	-	-	-	25
முழு மொத்தம்		**1726**	**1408**	**318**	**1856**

பயிற்சி மற்றும் அபிவிருத்தி

புதிதாக ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள ஊழியர்களுக்கான ஒரு புதிய ஊழியர் ஆரம்பப் பயிற்சியை நடத்தல். தொழில்தருநருக்கும் மற்றும் ஊழியருக்கும் இடையில் வலிமையான ஒரு உறவைக் கட்டியெழுப்புவதில் முக்கியமான ஒரு கட்டமாக பேணப்படுகின்றது. ம.வ. பயிற்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு மேற்பார்வை மற்றும் முகாமைத்துவ வகிபங்குகளின் நிமித்தம் அபிலாஷையுடைய தலைவர்களை உருவாக்கும் பொருட்டு இந்தக் கூட்டுத் தாபனத்தின் நியாயமான தொழில் செயன்முறைகளுக்கும் மற்றும் ஊழியர்களின் அபிவிருத்திற்கும் உதவும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் வழங்குகின்றது. பயிற்சிக் குழுவின் சிபாரிசுடன் மிகப் பொருத்தமான மற்றும் தகுதியுடைய ஊழியர்கள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பெயர்குறித்து சிபாரிசு செய்யப்பட்டனர்.

ஊழியர்களின் எதிர்கால வகிபங்குகள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் நிமித்தம் அபிவிருத்தித் திறன்களை மேம்படுத்தும் பொருட்டு உள்நாட்டுப் பயிற்சிகளிலும் மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகளிலும் பிரதானமாக ஒருமுகப்படுகின்ற ஊழியர்களுக்கு மத்தியில் போட்டித் தன்மை வாய்ந்த அனுகூலங்களை பேணுவதற்காகவும் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

மேலும், 60 எண்ணிக்கையான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன. இந்தப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினால் சுமார் 744 ஊழியர்கள் நன்மை அடைந்துள்ளனர். இந்தப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்கு 3,768,607.30/= ரூபா தொகையான நிதி செலவிடப்பட்டுள்ளது. மேலும் 14 எண்ணிக்கையான வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன. இந்தப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினால் 22 ஊழியர்கள் நன்மை அடைந்தள்ளனர். இந்தப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மொத்தம் 5,369,529/= ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது.

மேலும், 2019 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் ஒரு நிறைவேற்று உத்தியோகத்தருக்கு அவரின் உயர் கல்விற்காக நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. அந்த நிதி உதவி186,000/- ரூபா தொகையாகும்.

ஆகையால், 2019 ஆம் ஆண்டில் பயிற்சிக்கும் மற்றும் அபிவிருத்திற்கும் செலவிடப்பட்டுள்ள மொதத் தொகை 9.324 மில்லியன் ரூபாவாகும்.

ISO தர முகாமைத்துவ முறைமை மற்றும் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு

- **தர முகாமைத்துவ முறைமை - ISO 9001:2015**

2017. 04. 06 ஆம்திகதிமுதல்2020. 04. 05 ஆம்திகதிவரையானகாலப் பகுதியில் விநியோகிக்கப்பட்டுள்ள QSC 05194 ஆம் இலக்க சான்றிதழை அடுத்து இலங்கைக் காணி அபிவிருத்திக் கூட்டுத் தாபனம் தனது ISO 9001: 2008 தர முகாமைத்துவ முறைமையில் இருந்து ISO 9001: 2015 தர முகாமைத்துவ முறைமைக்கு பரிவர்த்தனையாகியது.

பதவியுயர்வு

ஊழியர் ஒருவரின் கடமைகள் மற்றும் தொழிற்பாடுகள், நிறுவனம் சார்ந்த குறிக்கோள்களை அடைதல் என்பவற்றை மதித்து மதிப்பீடு செய்வதன் அடிப்படையில் பதவியுயர்வு மேற்கொள்ளப்படுகின்றது. இது பொறுப்பையும் மற்றும் கஷ்டமான தன்மையையும் பொறுத்து மாறலாம். பொறுப்பு அளவுகளை அதிகரிப்பதில் சம்பந்தப்படுகின்ற நிலை மாற்றங்களின் அடிப்படையில் பதவியுயர்வுகள் வழங்கப்படுகின்றன. பதவியுயர்வினால் சேரும் நன்மைகள் சிறந்த பணி செயலாற்றுகைக்கு ஒரு ஊக்குவிப்பாக விளங்குகின்ற வேளையில் ஒழுக்க நெறியை மேம்படுத்தி தனியாள் சாதனை மற்றும் மதிப்பு உணர்வு ஆகியவற்றை ஏற்படுத்துகின்றது.

- அனுமதிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம் ஊழியர்களின் தகைமைகள் மற்றும் அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தக் கூட்டுத் தாபனத்தின் அனுமதிக்கப்பட்டுள்ள ஆளணியில் நிலவும் வெற்றிடங்களின் அடிப்படையில் பதவியுயர்வுகள் வழங்கப்பட்டன.

- அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவியுயர்வு வழங்கும் திட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறு தரத்திற்கு தரம் பதவியுயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆகையால், அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவிகளின் அடிப்படையில், 2019 ஆம் ஆண்டு காலப் பகுதி முழுதிலும் பதவிநிலைப் பதவிகளை தொடர்ந்து 55 தரப் பதவியுயர்வுகளும் மற்றும் 18 பதவியுயர்வு நியமனங்களும் வழங்கப்பட்டுள்ளன.

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

இந்த உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு இந்தக் கூட்டுத் தாபனத்தின் தலைவரின் கீழ் நேடியாகத் தொழிற்படுகின்றது. இந்தக் கூட்டுத் தாபனத்தின் நிதி விடயங்கள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் ஆகியவற்றுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் பயன்தகு தன்மையை உறுதிசெய்வதற்கான பொறுப்பை இந்தப் பிரிவு கொண்டுள்ளது. தவறுகளையும் மற்றும் மோசடிகளையும் கண்டறிந்து தடுப்பதற்கு பின்பற்றப்படுகின்ற உள்ளக செவ்வைபார்த்தலின் போதிய தன்மையையும் மற்றும் நம்பத்தகு தன்மையையும் உறுதிசெய்யும் பொருட்டு நிதி விடயங்களையும் மற்றும் ஏனைய செயற்பாடுகளையும் மதிப்பீடு செய்யும் குறிக்கோளுடன் இந்த உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு எழுவாரியான மதிப்பாய்வுகளையும் மற்றும் சுயாதீனமான மதிப்பாய்வுகளையும் மேற்கொள்வதில் சம்பந்தப்படுகின்றது.

இந்த உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஆகக்குறைந்த செலவில் ஆகக்கூடிய பலன்களை அடைந்து கொள்ளும் முகமாக பயனுள்ள தீர்மானங்களை மேற்கொள்ளக் கூடிய வகையில் உயர் முகாமைத்துவத்திற்கு உதவுகின்ற வேளையில் பல செயற்பாடுகளுடன் தொடர்புடைய செலவுப் பயன் பகுப்பாய்வு விடயங்களையும் பொறுப்பேற்று மேற்கொள்கின்றது. இந்த உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு பின்வரும் முக்கிய விடயப் பிரிவுகளை உள்ளடக்குகின்றது.

- திரைசேரி நிதியிட்டுள்ள கருத் திட்டங்கள் அடங்கலாக பௌதீக செயலாற்றுகை மற்றும் நிதி சார்ந்த செயலாற்றுகை ஆகியவற்றின் அடிப்படையில் இந்தக் கூட்டுத் தாபனம் பொறுப்பேற்று மேற்கொள்ளும் கருத் திட்டங்களின் செயல்முறை ரீதியான சாத்தியத்தைக் கண்காணித்தல்.

- பொறியிடப்பட்டு அனுப்பி வைக்கப்படும் கேள்வி மனுக்களைத் திறப்பதில் பங்குபற்றல், ஒரு அவதானிப்புப் பிரிவு என்ற ரீதியில் பெறுகைக் குழுக் (பெ.கு.) கூட்டங்களில் கலந்து கொள்ளல், பெறுகை சார்ந்த ஆவணங்களை செவ்வைபார்த்தல் மற்றும் தொழில் நுட்ப மதிப்பீட்டு அறிக்கைகளை செவ்வைபார்த்தல் மற்றும் NPA வழிகாட்டல்கள் சரியாக முழுமையாகப் பின்பற்றப்பட்டுள்ளனவா என உறுதிசெய்தல் என்பவற்றின் மூலம் பெறுகை செயல்முறையின் பயன்தகு தன்மையைக் கண்காணித்தல்.

- கனரக இயந்திராதிகளையும் மற்றும் வாகனங்களையும் வாடகைக்கமர்த்துவது தொடர்பாக செயற்படுத்தப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாடுகளின் போதிய தன்மையை உரிய நடைமுறைகளை அனுசரித்து அதனை நிர்ணயித்து மதிப்பீடு செய்தல்.

- கொடுப்பனவு முறைமையின் ஊடாக விடுக்கப்படும் கொடுப்பனவுக் கோரல்கள் மற்றும் செலவுப்பட்டியல்கள் ஆகியவற்றை படிமுறைப்படுத்தும் விடயத்துடன் சம்பந்தப்படுகின்ற நடைமுறைகளை மீளாய்வு செய்தல் மற்றும் பல மூலங்களில் இருந்தும் கிடைக்கின்ற வருமானங்களை சேகரிக்கும் பொருட்டு சிறந்த செயன்முறைகளை அல்லது நடைமுறைகளை தயாரித்து அவற்றை செயற்படுத்துதல்.

- புதிதாக செயற்படுத்தப்பட்டுள்ள ERP முறைமையை கருத்திற் கொண்டு, அணுகு கட்டுப்பாட்டு முறைமையை மதிப்பீடு செய்தல், பயனர் ID ஐ மதிப்பீடு செய்தல் மற்றும் வணிகம் சார்ந்த செயல்முறைகள், இடைமுகவெட்டுக்கள் மற்றும் இரகசியம் முதலிய விடயங்களுடன் தொடர்பான தகவுதிறன்களை மதிப்பீடு செய்தல்.

- உரிய நடைமுறைகளை நிர்ணயித்து அவற்றை அனுசரித்து செயலாற்றுகையை உறுதிசெய்தல் மற்றும் செயற்படுத்தப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் போதிய தன்மையை மதிப்பிடுதல் ஆகியவற்றின் நிமித்தம் கனரக இயந்திராதிகளை (இந்தக் கூட்டுத் தாபனத்திற்கு சொந்தமானதும் மற்றும் வாடகைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதும்) ஈடுபடுத்துவதைக் கண்காணித்தல்.

- இந்தக் கூட்டுத் தாபனத்தின் குறிக்கோள்கள் வணிக மாதிரிகளுடனும் மற்றும் கூட்டுத் தாபனத்தின் திறமுறைத் திட்டங்களுடனும் இணைகின்றனவா என்பதை உறுதிசெய்தல்.

- பொருட்பதிவேட்டு அறிக்கைகளின் செவ்வைத் தன்மையையும் மற்றும் பூரணத்துவத்தையும் உறுதிசெய்வதற்கு கட்டுப்பாட்டு முறைமைகளை மேம்படுத்துதல் மற்றும் கொடுக்கல்வாங்கல்களை நிச்சயப்படுத்தி உறுதிசெய்தல் மற்றும் பொருட்பதிவேடுகளைப் பாதுகாத்தல்.

- வெரஸ் கங்கை மழை நீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டுக் கருத் திட்டத்தைக் கணக்காய்வு செய்தல்.

- கழிவு முகாமைத்துவக் கருத் திட்டம் அதன் குறிக்கோள்களின் நோக்கெல்லையை அடைகின்றதா என்பதை உறுதிசெய்து கொள்ளல்.

- சட்டவிரோதமாக காணிகளை மண்ணிரப்பி எடுக்கும் செயற்பாடுகளை அல்லது நிர்மாண செயற்பாடுகளை ஆரம்ப கட்டத்திலேயே இனங்காணுதல்.

- கொள்கைகளுக்கும் மற்றும் நடைமுறைகளுக்கும் இணங்க உறுதிசெய்வதன் மூலம் காணிகளின் இருப்பை முகாமை செய்தல் மற்றும் உண்மையான காணி இருப்பை உறுதிசெய்து கொள்ளும் பொருட்டு அறிக்கைகளையும் மற்றும் தரவுகளையும் மதிப்பீடு செய்தல்.

- கடல் மணல் கழ்ந்தெடுக்கும் செயல்முறையை பௌதீக ரீதியில் அவதானித்தல மற்றும் கடல் மணல் விற்பனையுடன் தொடர்புடைய உரிய பொருத்தமான ஆவணங்களை செவ்வைபார்த்தல் போன்ற கடல் மணல் கருத் திட்டத்துடன் சம்பந்தமான செயற்பாடுகளை மீளாய்வு செய்து மதிப்பீடு செய்தல்.

- உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை, இயக்கச் செயற்பாட்டுக் கட்டுப்பாட்டு முறைமைகள் ன்பவற்றின் பயன்தகு தன்மையையும் மற்றும் பொறித் தொகுதி மற்றும் இயந்திர உபகரணங்கள் பிரிவினது கனரக இயந்திராதிகள் மற்றும் இலகு வாகனங்கள் என்பவற்றின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புப் பணிகளுடன் சம்பந்தமான இலக்குகள் அடையப்படுவதையும் மதிப்பீடு செய்தல்.

- சட்டமுறையான தேவைப்பாடுகளை அணுசரித்து கணக்காய்வுக் குழுக் கூட்டங்களைக் கூட்டுதல் மற்றும் சரியான பரிகார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை இலகுபடுத்தும் முகமாக கூட்டத்தின் கூட்டக் குறிப்புகளுடன் தாமதியாமல் உடனடியாக தனது சிபாரிசுகளை பணிப்பாளர்கள் சபைக்கு அறிக்கையிடுதல்.

- வெளிவாரி கணக்காய்வு சம்பந்தமான தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதில் கணக்காய்வாளர் அதிபதியுடன் ஒருங்கிணைந்து உதவுதல்.

- இந்தக் கூட்டுத் தாபனத்தின் உயர் முகாமைத்துவம் சாட்டும் விஷேடமான விசாரணைப் பணிகளை மேற்கொள்ளல்.

மேற்குறித்த பணிகள் நிறைவேற்றப்படுவதற்கு மேலதிகமாக, இந்த உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு வ/ப காணி சீராக்கல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத் தாபனம் மற்றும் LRDC சேர்விஸெஸ் ப்ரைவட் லிமிற்றட் நிறுவனம் போன்ற துணைக் கம்பனிகளின் உள்ளகக் கணக்காய்வு விடயங்களையும் மேற்கொள்கின்றது.

சட்டப் பிரிவு

இந்த சட்டப் பிரிவு, இலங்கைக் காணி அபிவிருத்திக் கூட்டுத் தாபனத்தின் 1968 இன் 15 ஆம் இலக்க சட்டத்தினது ஏற்பாடுகளினாலும் மற்றும் அதற்கான அடுத்தடுத்து வந்த திருத்தங்களினாலும் உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரத் தத்துவங்களின் பிரகாரம் செயல்படுகிறது.

இதன் சட்ட அம்சங்கள் பின்வருமாறு:


1. நில அபிவிருத்தி, மீள்குடியேற்றம், சமூக ஆலோசனை மற்றும் குறைந்த வருமான குடியேற்றப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு சட்ட உதவிகளை வழங்குதல் என்பன பற்றிய சட்டசார் ஆவணங்களைத் தயாரித்தல்.
2. கூட்டுத் தாபனத்தினால் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் சார்பாகவும் மற்றும் கூட்டுத் தாபனத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்படும் வழக்குகளுக்கு எதிராகவும் வாதாடுதல்.
3. கூட்டுத் தாபனத்தின் நாளாந்தப் பிரச்சினைகளுடன் தொடர்புடைய கசல விடயங்களிலும் ஆலோசனை வழங்குதல்.
4. அதிகாரமற்ற முறையில் காணிகளை மண்ணிரப்பியெடுக்கும், வடிகால் வடிவமைப்பு பற்றிக் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறும், கால்வாய் ஒதுக்கப் பகுதிகளில் சட்டவிரோதமாக குடியிருக்கும், கால்வாய்களை மாசுபடுத்தும் சகல செயற்பாடுகளுக்கு எதிராகவும், அத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்ளும் நபர்களுக்கு எதிராகவும், இ.கா.அ.கூ. தாபனத்தின் 2006 இன் 35 ஆம் இலக்க திருத்தல் சட்டத்தினது ஏற்பாடுகளின் பிரகாரம் சட்டநடவடிக்கைகளை எடுத்தல்.
5. பு.ஒ., விற்பனை ஒப்பந்தங்கள், ஒப்பந்த/உசாதுணை உடன்படிக்கைகள், நீண்டகாலக் குத்தகை ஒப்பந்தங்கள், வருடாந்த குத்தகை ஒப்பந்தங்கள், குறுங்காலக் குத்தகை ஒப்பந்தங்கள், காணி உறுதிகளை மாற்றிக் கொடுத்தல் முதலியன சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களையும் மற்றும் வெளிநாட்டுத் தொழில் தொடர்பான முறிகள் (சம்பளமற்ற / சம்பளத்துடனான), வாகனக் கடன் ஒப்பந்த ஆவணங்கள், அற்றோனித் தத்துவ ஆவணங்கள் மற்றும் காணி அங்கீகார சான்றிதழ்களுக்கான காணி உரித்து ஆவணங்கள் முதலிய ஆவணங்களையும் தயாரித்து உறுதிப்படுத்துதல்.
6. திருத்தங்களுக்கான பிரேரணைத் திட்டங்கள் அமைச்சரவையின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அமைச்சரவை வழங்கிய அங்கீகாரத்திற்கு இணங்க இ.கா.அ.கூ. தாபனத்தின் இறுதி நகல் சட்டமூலம் சட்டவரைஞர் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபரின் திணைக்களத்தினால் அங்கீகார சான்றிதழும் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த இறுதி நகல் சட்டமூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் முகமாக அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளும் பொருட்டு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நிதி சார்ந்த மீளாய்வு

இந்தக் கூட்டுத் தாபனம் முன்னைய ஆண்டு 3% வீழ்ச்சியுடன் ஒப்பிடும் போது, குறித்த மீளாய்வு ஆண்டு காலப் பகுதியில் 6.5 பில்லியன் ரூபா புறழ்வை ஈட்டியிருந்தது. கடல் மணல் விற்பனையிலும் மற்றும் கெரவலப்பிட்டிய கொம்போஸ்ட்டு உர உற்பத்திப் பொறித் தொகுதி வசதியில் இருந்து கிடைக்கும் வருமானத்திலும் வீழ்ச்சி ஏற்பட்டமை இந்தக் குறைவுக்கான முக்கிய காரணமாக அமைந்தது.

குறித்த கைத்தொழில் பேரண்டளவில் சவால்களை எதிர்நோக்கியிருந்தாலும், முன்னைய ஆண்டில் பெற்ற 1,620 மில்லியன் ரூபா இலாபத்துடன் ஒப்பிடும் போது, இ.கா.அ.கூ. தாபனத்தின் மூலம் இந்த ஆண்டு 752 மில்லியன் ரூபா வரிக்கு முன்னரான வருமானத்தை ஈட்டுவதற்கு முடிந்தது.




2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, மேன்தலை சார்ந்த செலவுகள் 8% வீதத்தால் குறைவடைந்துள்ளன. எனினும், பணிக்கொடைகளின் நிதியேற்பாடு அடங்கலாக தனிநபர் செலவுகள் அதிகரித்ததன் காரணமாக நிருவாகம் சார்ந்த செலவுகளும் அதிகரித்துள்ளன. மேலும், முன்னைய ஆண்டு காலப் பகுதியில் தீராத மற்றும் சந்தேகத்திற்கிடமான பற்றுக்கள் எனக் கருத்திற் கொள்ளப்பட்டிருந்த பற்றுக்கள் அறவிடப்பட்டதன் காரணமாக தீராத மற்றும் சந்தேகத்திற்கிடமான பற்றுக்களுக்கான நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதால் ஏனைய இயக்கச் செயற்பாட்டு வருமானம் 3 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகையால் அதிகரித்துள்ளது.

பிரதானமாக கடல் மணல் கடன் வசதிகள் பயன்படுத்தப்பட்டதன் விளைவாக இந்தக் கூட்டுத் தாபனத்தின் வட்டி சார்ந்த செலவு 435 மில்லியன் ரூபாவில் இருந்து 592 மில்லியன் ரூபா வரை அதிகரித்துள்ளது.

சொந்தக் கருத் திட்டங்களின் பேரில் அதிகளவான நிதிகள் பயன்படுத்தப்பட்டதாலும் மற்றும் இயக்கச் செயற்பாடுகள் மற்றும் கருத் திட்டம் சார்ந்த செயற்பாடுகள் ஆகியவற்றின் அதிகரிப்பை ஆதாரப்படுத்தும் முகமாக துணைக் கம்பனியின் நிதிகள் பயன்படுத்தப்பட்டதாலும் இந்தக் கூட்டுத் தாபனத்தின் வட்டி வருமானம் 541 மில்லியன் ரூபாவில் இருந்து 476 மில்லியன் ரூபா வரை குறைவடைந்துள்ளது.

2019 ஆம் ஆண்டு திசம்பர் 31 ஆம் திகதிற்கு இந்தக் கூட்டுத் தாபனம் சந்தைப்படுத்தல் அடிப்படையிலான சான்றிதழ்களுக்கான குறிப்பில் வாகனங்களின் நியாய விலைகளை மீள்மதிப்பீடு செய்துள்ளது. அத்தகைய மீள்மதிப்பீட்டின் பெறுபேறுகள் 2019.12.31 ஆம் திகதி திகதி செயல்வலுப் பெறும் நாளில் இருந்து இந்த நிதிக் கூற்றுக்களில் கூட்டிணைக்கப்பட்டுள்ளன. அந்த மீள்மதிப்பீட்டில் இருந்து எழுந்த 212 மில்லியன் ரூபா மிகை ஒரு மீள்மதிப்பீட்டு ஒதுக்கீடாக மாற்றப்பட்டுள்ளது.



நிதி நிலை

முதலீடு சார்ந்த சொத்துக்களில் அதிகளவான நிதிகள் முதலீடு செய்யப்பட்டதால் இந்தக் கூட்டுத் தாபனத்தின் நடைமுறையால்லாத சொத்துக்கள் 10% வீதத்தால் அதிகரித்துள்ளன. எனினும், இந்தக் கூட்டுத் தாபனம் பற்றுக்களையும் மற்றும் ஏனைய பொறுப்புக்களையும் மீளச்செலுத்தும் பொருட்டு குறுங்கால முதலீடுகளை முடிக்கியதன் காரணமாக நடைமுறை சார்ந்த சொத்துக்கள் 2% வீதத்தால் குறைவடைந்துள்ளன. இதனையடுத்து, இந்தக் கூட்டுத் தாபனத்தின் மொத்த சொத்துக்கள் 17.7 பில்லியன் ரூபா வரை அதிகரித்துள்ளன. இந்தக் கூட்டுத் தாபனத்தின் தேறிய சொத்துக்களின் பெறுமானம் 2019 ஆம் ஆண்டு திசம்பர் 31 ஆம் திகதிற்கு 6.4 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.

குழு சார்ந்த செயலாற்றுகை

இந்தக் கூட்டுத் தாபனத்தின் துணை நிறுவனமான காணி சீராக்கல் மற்றும் அபிவிருத்திக் கம்பனி 45.2 மில்லியன் ரூபா தேறிய நட்டத்தை அடைந்திருந்தது. எனினும், LRDC சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனம் 55 மில்லியன் ரூபா தேறிய இலாபத்தை ஈட்டியிருந்தது. ஆகையால், குழு, வரி விதிப்புக்கு முன்னர் 555 மில்லியன் ரூபா இலாபத்தை ஈட்டியிருந்தது.

பணிப்பாளர்களின் அறிக்கை

பணிப்பாளர்களாகிய நாம் 2019 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான எமது இந்தக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையையும் மற்றும் கணக்குகளையும் மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றோம்.

பிரதான செயற்பாடுகள்

இந்தக் கூட்டுத் தாபனத்தின் முக்கிய செயற்பாடுகள் இயக்கச் செயற்பாடு சார்ந்த மீளாய்விலும் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான 1 ஆம் இலக்கக் குறிப்பிலும் விவரிக்கப்பட்டுள்ளன.

குறித்த ஆண்டின் இயக்கச் செயற்பாடு சார்ந்த மீளாய்வு

இயக்கச் செயற்பாடு சார்ந்த மீளாய்வு குறித்த ஆண்டு காலப் பகுதியில் இந்தக் கூட்டுத் தாபனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள செயற்பாடுகளின் விரிவான மீளாய்வு விபரங்களைத் தருகின்றது.

புறழ்வு

2019 ஆம் ஆண்டிற்கு இந்தக் கூட்டுத் தாபனம் ஈட்டியுள்ள புறழ்வு 6,537 மில்லியன் ரூபாவாகும் (2018: 7,097 மில்லியன் ரூபா).

இலாபம்

2018 ஆம் ஆண்டில் ஈட்டப்பட்டிருந்த 1,148 மில்லியன் ரூபா இலாபத்துடன் ஒப்பிடும் போது இந்தக் கூட்டுத் தாபனம் குறித்த மீளாய்வு ஆண்டு காலப் பகுதியில் 456 மில்லியன் ரூபா இலாபத்தை ஈட்டியுள்ளது.

விவகாரங்களின் நிலை

இந்தக் கூட்டுத் தாபனத்தின் விவகாரங்கள் நிலை நிதிக் கூற்றில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (பக்கம் 93)

சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் காணப்படும் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் நகர்வு நிதிக் கூற்றுக்களுக்கான 9 ஆம் இலக்கக் குறிப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வரி விதிப்பு

2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் மற்றும் அதனையடுத்து இந்த சட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்களுக்கும் இணங்க வரி விதிப்பு நோக்கங்களின் நிமித்தம் சீராக்கப்பட்டுள்ளவாறு குறித்த ஆண்டிற்கான இலாபத்தின் அடிப்படையில் வருமான வரிக்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களுக்கு இருக்கின்ற அக்கறைகள்

நிதிக் கூற்றுக்களுக்கான 22 ஆம் குறிப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளவை தவிர, கூட்டுத் தாபனத்துடனான ஒப்பந்தங்களில் அல்லது உத்தேச ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களுக்கு நேரடியான அல்லது மறைமுகமான அக்கறைகள் ஏதுமில்லை.

சபைக் கூட்டம்

சபை ஒவ்வொரு மாதமும் ஒரு முறையாவது கூடுகின்றது. **2019** ஆம் ஆண்டில், **16** சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. ஒவ்வொரு பணிப்பாளரும் கலந்து கொண்டுள்ள சபைக் கூட்டங்களின் எண்ணிக்கை பற்றிய விபரம் கீழ்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

பணிப்பாளர்களின் பெயர்கள்	நியமனத் திகதி	கலந்து கொள்வ தற்கு தகுதி யுடைய கூட்டம்	கலந்து கொண்டுள்ள கூட்ட ங்களின் எண்ணிக்கை
திரு ரொஷான் குணவர்த்தன	31.12.2018	16	16
திரு. பி.ஏ.கே. குணவர்த்தன	31.12.2018	16	14
திருமதி ஜே.சி. வெலிகமகே	03.05.2018	16	16
பொறியியலாளர் எஸ். மோஹனராஜா	02.11.2017	16	12
கலாநிதி ஜகத் முணசிங்க	30.03.2016	16	13
பொறியியலாளர் ஆர்.பீ.எம். குணவர்த்தன	30.01.2019	16	16
பொறியியலாளர் டீ. சஜ்ஜன த சில்வா	30.01.2019	16	15
பொறியியலாளர் ஜி.எம்.பீ.ஏ. போகம்மான	30.01.2019	16	13

நிகழ் எண்ணக்கரு

இந்தக் கூட்டுத் தாபனம் தொடர்ந்தும் இயங்க அதற்கு ஆற்றல் இருக்கின்றது என்பது பணிப்பாளர்களின் அபிப்பிராயமாகும்.

நியதிச்சட்டமுறையான கொடுப்பனவுகள்

பணிப்பாளர்கள் தமது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில், இது வரை ஊழியர்களுக்கும் அரசாங்கத்திற்கும் மேற்கொள்ளப்பட்டுள்ள நிதியச்சட்டமுறையான கொடுப்பனவுகளில் திருப்தியடைகின்றார்கள்.

ஊழியர்கள்

2019 திசம்பர் 31 ஆம் திகதியில் கூட்டுத் தாபனம் 1408 நபர்களுக்கு தொழிலை வழங்கியிருந்தது (2018: 1432).

ஐந்தொகைக்கு பின்னர் எழும் சம்பவங்கள்

நிதி நிலைக் கூற்றின் திகதிற்கு பின்னர் எழுகின்ற சகல பொருண்மையான சம்பவங்களும் கருத்திற் கொள்ளப்பட்டு கணக்குகளில் தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதிவிஷேட விடயங்கள்

தனித்தனி வெளிப்படுத்துகையை தேவைப்படுத்தும் விதிவிலக்கான / அதிவிஷேட இயல்பின் கொடுக்கல்வாங்கல்கள் நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகளில் அறிக்கையிடப்பட்டுள்ளன.

கணக்காய்வாளர்கள்

தேசிய கண்ககாய்வு அலுவலகம் இந்தக் கூட்டுத் தாபனத்தின் 2019 ஆம் ஆண்டிற்கான கணக்குகளை கணக்காய்வு செய்யும்.

சபையின் கட்டளைப்படி

கையொப்பமிடப்பட்டது:

எச்.கே.கே. டப்ளியூ. ஏக்கநாயக்க
சபைக்கான செயலாளர்
2020 ஆகஸ்ட்டு மாதம் 27

ஆடிட்டர் ஜெனரல் அறிக்கை

HUD/C/SLLRDC/1/19/19 2021 ஏப்ரல் ஆம் திகதி

தலைவர்
இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம்

இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரான திரண்ட நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடந்த ஆண்டிற்கான திரண்ட நிதிச் செயலாற்றல் கூற்று, திரண்ட உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடந்த ஆண்டிற்கான திரண்ட காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் திரண்ட நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான திரண்ட நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் உறுப்புரை மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் மற்றும் துணைக் கம்பனிகளின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயாமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம், செலவு நியாமான மதிப்பின் (Fair Value) மீது முன்வைக்கப்பட வேண்டியிருப்பினும் கூட்டுத்தாபனத்தினால் கிரயம் ரூபா 2,424.37 மில்லியன் ஆன ஆதனம் பொறி உபகரணங்களினுடைய நியாமான பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களின் பயன்படு வாழ்க்கை காலம் மீள் மதிப்பீட்டு குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் இன்னுமாக பயன்பாட்டிற்கு எடுக்க முடியாதென அடையாளப்படுத்தப்பட்ட கிரயம் ரூபா 11.41 மில்லியன் ஆன மோட்டார் வாகனம் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 05 இற்கு முரணாக இன்னுமாக நடைமுறையல்லா சொத்துக்களாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருப்பினும் இன்னுமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற கிரயம் ரூபா 715.67 மில்லியன் ஆன சொத்துக்களின் பயன்படு வாழ்க்கை காலம் தொடர்பாக மதிப்பிடப்பட்ட தவறு இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் திருத்தம் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இல், 36 ஆம் உறுப்புரையின் பிரகாரம் ஆதனம் பொறி உபகரணங்களுக்கு தொடர்புடைய ஏதேனும் உறுப்படியொன்று மீள் மதிப்பிடப்படுகிறதென்றால் அவ் உறுப்படி தொடர்புடைய சொத்து வகுப்பு முழுவதும் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருப்பினும், மீளாய்வாண்டு இறுதியில் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான முறையாக ரூபா 24.7 மில்லியன் மற்றும் 26.47 மில்லியன் ஆன கிரயமுடைய 160 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஜிப் வாகனமொன்று அவ்வாறு மீள்மதிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 40 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள கிரயம் ரூபா 158.28 மில்லியன் ஆன இரு முதலீட்டு சொத்துக்களின் நியாயாமான பெறுமதி கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கூட்டுத்தாபனம் வாடகை அடிப்படையில் வெளி தரப்பினர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்த காணி முதலீட்டுச் சொத்தாக வகைப்படுத்தப்பட்டு கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டு இறுதியில் 6 ஒப்பந்தங்களுக்கு தொடர்புடைய செயற்திட்டங்களில் செய்யப்பட்ட வேலை வெளி பொறியியலாளரொருவரின் சான்றுப்படுத்தல் இல்லாது சேவை வழங்குனருக்கு முன்வைக்கப்பட்ட பற்றுச்சீட்டுகளில் உள்ளடக்கப்பட்டிருந்த செய்யப்பட்ட வேலை பெறுமதி அடிப்படையாகக் கொண்டு ரூபா 266.76 மில்லியன் என நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே ஒப்பந்த வருமானத்திற்கு தொடர்புடையதாக ஒப்பந்த செலவு சரியாக அடையாளப்படுத்தப்படாமையின் காரணத்தினால் 03 ஒப்பந்தங்களில் அடையாளப்படுத்தப்பட்ட இலாபம் 100 சதவீதமும் 1132 சதவீதமும் இடையிலான அளவில் வேறுப்பட்டிருந்தது.

(ஊ) கணக்கீட்டு நியமம் 1.6 மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் 23 இன் பிரகாரம், கடன் கிரயம் (Borrowing Cost) கடன் பணம் பயன்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்படுகின்ற உற்பத்திகளின் கிரயங்களில் பகுதியாக உள்ளடக்கப்பட வேண்டியிருப்பினும், மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 1,323 மில்லியன் என கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த கடல் மணல் இருப்பு கிரயத்திற்கு அதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் பணத்திற்கு தொடர்புடைய ரூபா 261 மில்லியன் ஆன கடன் கிரயம் உள்ளடக்கப்படாமையின் காரணத்தினால் கடல் மணல் இருப்பு கிரயம் அப் பெறுமதியினால் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டு இறுதியில் 02 சேவைவழங்குனர் ஒப்பந்தங்களுக்கு தொடர்பாக நிலையான தொழிநுட்ப குழு (STC) ஊடாக விலைகள் திருத்தப்பட்டதினால் அவ் ஒப்பந்தங்களில் ரூபா 6.20 மில்லியன் கூட்டுத்தாபனத்திற்கு இழந்திருப்பினும் அத் திருத்தத்திற்கு தொடர்புடையதாக இணக்கங்கள் கணக்குகளில் மேற்கொள்ளாமையினால் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ஒப்பந்த வருமானம் அப் பெறுமதியிலேயே கூடுதலாக காண்பிக்கப்பட்டது.

(ஏ) கூட்டுத்தாபனத்தினால் 2010 ஆம் ஆண்டில் பவுசர் வாகனமாக மேம்படுத்தப்பட்ட 10 டெக்கர் டேலர் இன் பெறுமதி மற்றும் 2012 ஆம் ஆண்டிலிருந்து பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற எக்ஸ்ஸவேட்டர் இயந்திரம் மற்றும் 2 படகுகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிராததுடன் ரூபா 1,620,000 இற்கு மதிப்பிடப்பட்டிருந்த 3 வாகனங்களின் பெறுமதியும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க நான் கணக்காய்வை மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதனை முன்னிட்டு என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கத்தை செலுத்தக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுகளின் ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலமும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான தெளிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக கூட்டுத்தபனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீடு தொடர்பான நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தவதன் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. போதியளவு நிச்சியமற்ற நிலைமைகள் உள்ளதாக நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அடிப்படையில் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதுக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், மற்றும் உள்ளடக்கப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது பலவீனங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படுகின்ற தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முனைப்பழியுள்ள அபிப்பிரயாயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களினை தவிர்த்து, கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் வெளிப்படுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையிலிருந்து தோன்றும் வகையில் முறையான நிதி அறிக்கைகளை கூட்டுத்தாபனம் பேணி வந்திருந்தது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கையில் 1.2 (ஈ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்களை தவிர முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குகின்றன.

பின்பற்றப்பட்ட நடைமுறைகள் அடிப்படையில் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகள் பொருண்மையான விடயங்களுக்கான மட்டுப்பாடுகளுக்குள் காணப்பட்டன. எனினும், வேறு எதுவும் எனது கவனத்திற்கு உட்பட்டிருக்கவில்லை

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையின் யாரேனும் அங்கத்தவருக்கு கூட்டுத்தாபனம் இடைப்பட்டு ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழமையான வணிக செயற்பாடுகளுக்குப் புறம்பாக தொடர்புகள் காணப்படுகின்றமையை குறிப்பிடுதல்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க **பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து** ஏதாவது தொடர்புபட்ட எழுத்திலான சட்டங்களுக்கு அல்லது கூட்டுத்தாபனத்தின் நிருவாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாதமையை குறிப்பிடல்.

சட்டங்கள் / பணிப்புரைக்கான தொடர்பு	விபரம்
(அ) 2006 இன் 35 ஆம் இலக்க கூட்டுத்தாப சட்டத்தின் 4 (அ) உறுப்புரை	சட்டத்தின் 3 ஆம் மற்றும் 4 ஆம் இலக்க உறுப்புரையின் பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணி விற்பனையின் போது அதற்காக தொழில், உள்ளூராட்சி அமைச்சர்களின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட வேண்டியிருப்பினும் மீளாய்வாண்டில் கம்பனி விற்ற ரூபா 272.62 மில்லியன் பெறுமதியான காணியொன்றிற்காக அவ்வாறு பரிந்துரைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம்	
திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 139 (5)	பணம் செலுத்தப்படுவதற்கு முன்னர் பணம் பெறுபவரின் அடையாளம் சரியாக உறுதி செய்யப்படாமல் கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டில் வெளிநாட்டு சட்ட நிறுவனமொன்றிற்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு, வெளி நபரொருவரின் கணக்கொன்றிற்கு வரவு வைக்கப்பட்டதன் காரணத்தினால் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 4.11 மில்லியனாக காணப்பட்டது.
(இ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது வியாபார சுற்றறிக்கையின்	
(i) 2.2.2 ஆம் உறுப்புரை	கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணியின் துணைக் குத்தகை பெற்றுக் கொடுக்கும் போது துணைக் குத்தகைக் கட்டணம் அறவிடப்படுவதற்கு பயன்படுத்தப்பட்ட முறைமைக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii)	8.1.4 ஆம் உறுப்புரை	சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக கூட்டுத்தாபனம் அதன் துணைக் கம்பனிகளுக்கு கடல் மணல் பக்கட் செய்து விற்கும் செய்திட்டமொன்றிற்காக மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 200 மில்லியனான கடன் பணம் பெற்றுக் கொடுத்திருந்ததுடன் இக் கடன் பணம் மீண்டும் செலுத்துவதற்கு துணைக் கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பிலும் கூட்டுத்தாபனம் ஆய்வு செய்திருக்கவில்லை. மேலும், கூட்டுத்தாபன சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்கு வேறு தரப்பினருக்கு கடன் பெற்றுக் கொடுப்பதற்கு நிதிஏற்பாடும் காணப்படவில்லை.
(iii)	8.2.2 ஆம் உறுப்புரை	நிதி அமைச்சரின் இணக்கப்பாடு இன்றி மீளாய்வாண்டில் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் நிலையான மற்றும் குறுங்கால வைப்புக்களில் ரூபா 2,981.47 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்தது.
(ஈ)	2018 பெப்ரவரி 15 ஆம் திகதிய 01/2018 ஆம் இலக்க வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கையின் 9.6 ஆம் உறுப்புரை	அரச உத்தியோகத்தர்களுக்கு தாங்கள் ஏற்கும் பதவிகளின் பிரகாரம் சலுகை உரிமம் பத்திரம் கீழ் மோட்டார் வாகனம் கொள்வனவு செய்வதற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் பணத்தின் வட்டியில், 2/3 பகுதியும் சுற்றறிக்கை ஒழுங்கிற்கு முரணாக மீண்டும் மீள் நிரப்பு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் அவ்வாறு மீள் நிரப்பு செய்யப்பட்டிருந்த வட்டி ரூபா 616,228 ஆக காணப்பட்டது.
(உ)	அரச பெறுகை வழிக்காட்டிக் கோவை	
	(i) 3.8 ஆம் உறுப்புரை	தேசிய போட்டி விலை முறை (NCB) கீழ் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளும் போது குறைந்தப்பட்சம் விலைமனு காலம் 14 நாட்கள் உம் 21 நாட்கள் உம் இடையே திறந்து வைக்கப்பட வேண்டியிருப்பினும்

	கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டில் மேற்கொண்ட ரூபா 35.70 மில்லியன் பெறுமதியான (வட் வரி அற்ற) 02 ஒப்பந்த பெறுகை நடவடிக்கைகளுக்காக விலைமனு முன்வைப்பதற்கு 07 நாட்கள் மட்டும் மனுதாரர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது.
(ii) 5.3.19 (ஆ) ஆம் உறுப்புரை	மனுதாரர்களுக்கு காணப்பட வேண்டிய பின் தகுதி வரைக்கூறு (Post Qualification criteria) தெளிவாக விலை மனு பத்திரங்களில் உள்ளடக்கப்பட வேண்டியிருப்பினும், மீளாய்வாணடில் கூட்டுத்தாபனம் ரூபா 244.70 மில்லியன் பெறுமதியான Cuter Section Dredger இயந்திரமொன்று கொள்வனவு செய்வதற்கு தொடர்புடைய பெறுகையின் போது, விலை மனுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள வழங்குனர்களுக்கு காணப்பட வேண்டிய பின் தகுதி, பெறுகை குழுவின் அங்கீகாரமின்றி மீண்டும் திருத்தப்பட்டிருந்தது. அவ்வாறே பெறுகை குழு குறிப்பிட்டுள்ள தேவைப்பாடுகள் பூரணப்படுத்தாது கூட்டுத்தாபனம் அப் பெறுகையை வழங்கியிருந்தது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க **பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து** கூட்டுத்தாபனத்தின் அதிகாரங்கள், கடமைகள், மற்றும் கடமைகளுக்கு இணக்கமற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என

  (அ) கூட்டுத்தாபனம் 2010 யூலை 14 ஆம் திகதி வெளியிட்ட 1662/17 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் மேல் மாகாணத்தினுள் அமைந்துள்ள கால்வாய்களின் ஒதுக்கப்பட்ட காணி (Reservation) பாதுகாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருப்பினும் 2010 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு இறுதி வரையில் அவ் ஒதுக்கப்பட்ட காணிகள் அடையாளப்படுத்தப்படுவதற்கு அல்லது ஒதுக்கப்பட்ட காணிகளில் குடியேறியுள்ள அனுமதியற்ற குடியேற்பாளர்கள் அகற்றப்படுவதற்கு உறுதியான நேர் நடவடிக்கைகள் எடுப்பதற்கு கூட்டுத்தானம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) வெள்ளப்பபெருக்கு கட்டுப்பாட்டிற்கு பிரதானமாக பங்களிப்பு செய்கின்ற மற்றும் பல்லுயிருடைய முதுராஜவெல புகலரணிற்கு அருகே அமைந்துள்ள ஜா-எல தெலதுர "சுஹத" வீதியில் அமைந்துள்ள 6 ஹேக்கர் பரப்புள்ள கீழ் பிரதேசம் மீப்பு செய்வதற்கு எதிராக 2006 இன் 35 ஆம் இலக்க கூட்டுத்தாபன சட்டத்தின் 2 ஆம் உறுப்புரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க **பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து** கூட்டுத்தாபனத்தின் வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் பயனுறுதியாக கால எல்லைக்குள் சட்டங்களுக்கு இணக்கமாக கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என.

(அ) அமப/19/1643/116/065 ஆம் இலக்க மற்றும் 2019 யூலை 03 ஆம் திகதிய அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் வண்டல்மண் அகற்றுவதன் ஊடாக பேரே குளத்தினை சுத்தமாக்குவதற்கான செயற்திட்டத்தில் 03 இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்படுவதற்கு அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 283.50 மில்லியனாயினும் அவ் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட கிரயத்தினை விட ரூபா 120.49 மில்லியன் அதிகமாக கூட்டுத்தாபனம் அந்த இயந்திரத்தினை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான முதுராஜவெல இல் அமைந்துள்ள 02 ஹேக்கர் அளவிலான காணியொன்று அரச கம்பனியொன்றிற்கு ரூபா 272.62 மில்லியனிற்கு விற்றலின் போது காணியின் நிகழ்கால மதிப்பீடு பெறப்படாது 2017 ஆம் ஆண்டில் வேறு காணியொன்று குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொடுக்கும் போது பயன்படுத்தப்பட்ட மதிப்பீடு அடிப்படையாகக் கொண்டு காணி விற்றலினால் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 12.10 மில்லியனாக காணப்பட்டது. அவ்வாறே இக் காணி "விற்றல் அடிப்படையில்" அகற்றப்பட்டிருப்பினும், "விற்றல் அடிப்படையில்" காணி அகற்றப்படும் போது அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டின் மீது காணி விற்றல் கணக்காய்வின் போது பிரச்சனைக்குரியதாகியது.

(இ) கூட்டுத்தாபனம் கடந்த ஆண்டில் ரூபா 41 மில்லியன் பெறுமதியான 2 Long Arum Excavator இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் வழங்குநர் கூட்டுத்தாபனம் எதிர்பார்த்த தொழிநுட்ப விவரக்குறிப்புகளில் (Technical Specification) குறிப்பிடப்பட்டுள்ள Long Aram Excavator இற்கு பதிலாக Short Aram Excavator இயந்திரங்களுக்கு Long Aram பகுதிகள் பொருத்தப்பட்டு பிறழாக கூட்டுத்தாபனத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறிருக்கையில் பொருட்கள் பெற்றுக் கொண்டு மீளாய்வாண்டில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுமிருந்தது.

3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

(அ) கூட்டுத்தாபனத்தின் கெரவலபிடிய கழிவு முகாமைத்துவம் பகுதிக்கு 23 நிறுவனங்கள் அகற்றப்பட்ட கழிவிற்காக மீளாய்வாண்டு இறுதியில் அறவிடப்பட வேண்டி காணப்பட்ட பணம் ரூபா 238.11 மில்லியனானதுடன் இதில் ரூபா 119.9 மில்லியன் ஆண்டொன்றிற்கு குறைந்த காலம் தொடக்கம் மற்றும் ரூபா 118.21 மில்லியன் ஒன்று தொடக்கம் மூன்று வருட காலமாக நிலுவையாக காணப்பட்டது. கூட்டுத்தாபனத்தினால் தொடர்புடைய நிறுவனங்களுடன் கழிவு அகற்றலுடன் தொடர்புடைய நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்ட ஒப்பந்தங்களுக்கு உடன்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராதிருத்தல் கடன் அறவிடல்கள் தாமதமாகுவதற்கு தாக்கமளித்திருந்தது. அவ்வாறே, மீளாய்வாண்டு இறுதியில் வாடிக்கையாளர் செயற்திட்டங்களிலிருந்து கூட்டுத்தானத்திற்கு பெறப்பட வேண்டிய பணம் ரூபா 549.81 மில்லியனாக காணப்பட்டதுடன் அதில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 71.37 மில்லியனாக காணப்பட்டது. மேலும், அவ்வாறே கணக்காய்வினால் அழைக்கப்பட்ட கடன்பட்டோர் உறுதிப்படுத்தல்களின் பெறுமதி ரூபா 872 மில்லியனாக காணப்பட்டதுடன் அதில் எந்தவொரு கடன்பட்டோர் மீதியும் உறுதிப்படுத்தப்பட்டு கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் காணப்பட்ட ரூபா 265 மில்லியனான ஒப்பந்த கடன் கொடுநர் மீதி பெறுமதியில் 2 தொடக்கம் 5 ஆண்டுகள் இடைப்பட்ட காலமாக காணப்பட்டு வருகின்ற தீர்க்கப்படாத கடன் கொடுநர் மீதி ரூபா 48 மில்லியன் ஆக காணப்பட்டது. அவ்வாறே, கணக்காய்வினால் அழைக்கப்பட்ட ரூபா 67 மில்லியன் கடன் கொடுநர் மீதி உறுதிப்படுத்தல்களுக்காக எந்தவொரு கடன் கொடுநரும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) களனி, பியகம, வத்தலை மற்றும் பேலியகொடை பிரதேச சபை பிரிவுகளினுள் ஏற்படுகின்ற வெள்ளப்பொருக்குகளின் போது அப் பிரதேசங்களில் வசிக்கும் மக்களுக்கு மற்றும் தொழிற்சாலைகளுக்கு ஏற்படுகின்ற பாதிப்பு குறைக்கும் நோக்கில் 2016 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 3,000 மில்லியன் இன் கீழ் பிரதேசத்தில் காணப்படுகின்ற மேல் கால்வாய் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் கூட்டுத்தாபனத்தினால் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் அதன் நிதி முன்னேற்றம் மற்றும் பௌதீக முன்னேற்றம் முறையே 43 சதவீதமும் 56 சதவீதமுமாக காணப்பட்டது. இந்த செயற்திட்டத்திற்காக 2020 ஆண்டு இறுதியில் ரூபா 1,456 மில்லியன் திறைச்சேரி நிதிஏற்பாடுகளில் செலவு செய்யப்பட்டிருப்பினும் 2021 ஆம் ஆண்டிற்காக இச் செயற்திட்டத்திற்கு பாதீட்டின் ஊடாக நிதி ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணத்தினால் எதிர்காலத்தில் தொடர்புடைய நோக்கங்கள் நிறைவு செய்யப்படாது செயற்திட்டம் கைவிடப்படக் கூடும் என மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தினால் சந்தையில் காணப்பட்ட ரூபா 1,453 மில்லியன் பெறுமதியான 07 கட்டுமான ஒப்பந்தங்களுக்காக மட்டும் போட்டியாக விலைமனு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் எந்தவொரு ஒப்பந்தமும் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமாக்கிக் கொள்வதற்கு முடியாதிருந்தது. கூட்டுத்தாபனம் விலைமனுவிற்காக முன்வைக்கப்படுகின்ற விலைகள் சந்தையில் காணப்படுகின்ற விலைகளை விட உயர் பெறுமதியில் காணப்படுகின்றமை இதற்கு நேரடியாக தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது.

(உ) 1996 ஆம் ஆண்டில் அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் பெரிய கொழும்பு வெள்ள கட்டுப்பாடு மற்றும் சுற்றாடல் அபிவிருத்தி செயற்திட்டத்தினை செயற்படுத்தலின் கீழ் பாராளுமன்ற வளாகத்திற்கு மேற்கு எல்லையில் அமைந்துள்ள 1000 ஹேக்கர் அளவிலான கீழ் பிரதேசம் நீர் தங்கும் பிரதேசமாக பாதுகாக்கப்படுவதற்கு மற்றும் கட்டுப்படுத்துவதற்கு அது தொடர்பான நிபுணத்துவ நிறுவனமான இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபனத்திற்கு பணிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு பணிக்கப்பட்ட காணிகளில் அனுமதியில்லாத குடியிருப்பு மற்றும் அனுமதியில்லாத மீட்பு அகற்றலின் முழு பொறுப்பு (Sole Responsibility) கூட்டுத்தாபனத்திற்கு பணிக்கப்பட்டிருப்பினும், மீளாய்வாண்டு இறுதியில் அதில் 63 ஹேக்கர் காணி அனுமதியில்லாத குடியிருப்பாளர்களினால் கையகப்படுத்தியிருத்தல் மற்றும் மேலும் 82 ஹேக்கர் கூட்டுத்தாபனத்தினால் அகற்றப்பட்டிருந்தமையினால் (Divesting) அமைச்சரவையினால் கூட்டுத்தாபனத்திடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட பணி நிறைவேற்றுவதில் கூட்டுத்தாபனம் தோல்லவி கண்டமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே கூட்டுத்தாபனத்தினால் கடந்த ஆண்டு இறுதியில் 05 பிரதேச பிரிவுகளுக்கு தொடர்பாக நீர் தேங்கும் பிரதேசங்களுள் மேற்கொள்ளப்பட்டுள்ள அனுமதியற்ற 1324 கட்டுமானம் மற்றும் மீட்பு அடையாளப்படுத்தப்பட்டிருப்பினும் அவ் அடையாளப்படுத்தப்பட்ட அனுமதியற்ற கட்டுமானம் அகற்றுவதற்கு கூட்டுத்தாபனத்தினால் முடியதிருந்தது.

(ஊ) நிகழ்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற அனுமதியற்ற காணி மீட்பு தடுப்பதற்கு கூட்டுத்தாப சட்டத்தில் காணப்படுகின்ற ஏற்பாடுகள் போதுமானதாக இல்லாமையினால் அவ் உறுப்புரைகள் சரி செய்யப்பட்டு சட்டம் திருத்தப்படுவதற்காக 2012 ஆம் ஆண்டில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருப்பினும் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் சட்டம் திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே சட்டத்தில் காணப்படுகின்ற இவ்வாறான குறைப்பாடுகளின் அடிப்படையில் அனுமதியற்ற காணி மீட்பு தொடர்பாக கூட்டுத்தாபனத்திற்கு பெறப்படுகின்ற குற்றச்சாட்டுகளுக்காக போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காததுடன் கூட்டுத்தாபனம் தாக்கல் செய்யும் பல வழக்குகளின் பெறப்பட்ட வழக்கு முடிவுகளில் கூட்டுத்தாபனத்திற்கு தீமையான நிலையொன்று ஏற்பட்டிருந்தது.

(எ) கூட்டுத்தாபனத்தினால் இலங்கையின் 6 மாகாணங்களில் காணப்படும் கீழ், சதுப்பு, தரிசு அல்லது சேற்று நிலங்களின் எல்லை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருப்பினும் அக் காணி பிரதேசங்களில் அனுமதியற்ற மீட்பு, அனுமதியற்ற குடியயேற்றல்கள் அடையாளப்படுத்தப்படுவதற்கு முறைமையயான்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன் அந் நிலைமைகள் பரிசோதிப்பதற்காக உத்தியோகத்தர்களும் பணிக்கப்பட்டிருக்கவில்லை. இக் காரணத்தினால் எதிர்காலத்தில் வெவ்வேறு சமூக மற்றும் சுற்றாடல் பிரச்சனைகளுக்கு கூட்டுத்தாபனம் நேரடியாக முகம் கொடுப்பதற்கு ஏற்பாடாது என கணக்காய்வின் போது விலக்க முடியாதுள்ளது.

(ஏ) கடல்மணல் இருப்புக்களில் மீள் கட்டளை மட்டம் தீர்மானிக்கப்பட்டு இருப்புக் கட்டுப்பாடு மேற்கொள்ளப்படாமையினால் மணல் இருப்பு பற்றாக்குறையாகிய சந்தர்ப்பங்களில் தேவையான கடல் மணல் பெற்றுக் கொள்வதற்கு முதுராஜவெல பிரதேசத்தில் இலங்கை மின்சார சபைக்கு கூட்டுத்தாபனம் விற்கப்பட்டிருந்த காணியொன்றிலிருந்து ரூபா 351.3 மில்லியன் ஆன மணல் வெட்டப்பட்டு அகற்றப்பட்டிருப்பினும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக மீண்டும் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, இவ்வாறு கூட்டுத்தாபனத்தினால் மணல் அகற்றுவதினால் மீளாய்வாண்டு இறுதியில் மீண்டும் நிரப்பப்பட வேண்டிய நிலப்பிரதேசம் 1,034,846 சதுர மீட்டராக காணப்பட்டது.

(ஐ) 2013 ஆகஸ்ட் 30 ஆம் திகதிய அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் வேரகஸ்கக மழை நீர் வடிக்கால் மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்துவதற்காக ரூபா 14,227 மில்லியன் கடன்பணம் திறைச்சேரியின் பிணை அடிப்படையில் தேசிய சேமிப்பு வங்கியினூடாக கூட்டுத்தாபனத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்தினால் 2014 யூலை 14 ஆம் திகதி 14 ½ வருடங்களில் மீள் செலுத்தும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தேசிய சேமிப்பு வங்கியுடன் கடன் ஒப்பந்தமொன்றிற்கு உடன்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2017 திசெம்பர் 07 ஆம் திகதிய அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் ரூபா 14,227 மில்லியனிற்காக உடன்பட்ட ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு அத் திகதியில் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் பணமான ரூபா 2,550 மில்லியனிற்காக புதிய கடன் ஒப்பந்தம் உடன்படுவதற்கு மற்றும் தொடர்புடைய கடன் தவணை மற்றும் வட்டி செலுத்தப்படுவதற்கு தேவையான பணம் மற்றும் செயற்திட்டம் தொடர்ந்து கொண்டு செல்வதற்கான செலவு வருடாந்த பாதீட்டின் ஊடாக நிதிஏற்பாடு ஒதுக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. இச் செயற்திட்டம் 2018 ஒக்தோம்பர் 24 ஆம் திகதி நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருப்பினும் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்தும் அடையப்பட்டிருந்த உள்ளவாரான பௌதீக முன்னேற்றம் 60 சதவீதத்திற்கு கிட்டிய அளவாக காணப்பட்டது. அவ்வாறாயினும், செயற்திட்டத்தின் அசாதாரண காலதாமதம் தவிர்க்கப்பட்டு குறுகிய காலத்தினுள் செயற்திட்டம் நிறைவு செய்யப்படக்கூடிய புதிய வேலைத்திட்டமொன்று முகாமைத்துவத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுமிருக்கவில்லை. மீளாய்வாண்டு

இறுதியில் செயற்திட்டத்தினால் 03 தொடக்கம் 06 மாதங்களான குறுகிய காலத்தினுள் வேலை நிறைவு செய்யப்பட வேண்டிய ஒப்பந்த வேலைகள் 18 பக்கேஜ்களாக உப ஒப்பந்தக்காரர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த அணிதிரட்டல் (Mobilization) முற்பணங்களில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இற்கு தீர்க்கப்படாத முற்பண மீதி ரூபா 89.17 மில்லியனாக காணப்பட்டது. இதில் தாமதக் காலம் வருடத்தினை கடந்த முற்பண மீதி ரூபா 52.16 மில்லியன் ஆக காணப்பட்டது.

(ஓ) மீளாய்வாண்டு இறுதியில் கடல் மணல் கழுவி பக்கற் செய்யும் செயற்திட்டத்திற்காக நிர்வகிக்கும் கம்பனி ரூபா 404.40 மில்லியன் செலவிடப்பட்டு இருந்ததுடன் இதற்காக கூட்டுத்தாபனத்திலிருந்து ரூபா 200 மில்லியன், 12 சதவீத கடனாகவும் ரூபா 109 மில்லியன் முற்பணமாகவும் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் கட்டிடம் கட்டுமான நடவடிக்கைகளுக்காக கூட்டுத்தாபனத்திற்கு இன்னுமாக அறவிடப்பட வேண்டிய பணம் ரூபா 170.21 மில்லியனாகக் காணப்பட்டது. எனவே, மீளாய்வாண்டு இறுதியில் கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட வேண்டிய மொத்த பணம் ரூபா 479.21 மில்லியனாக காணப்பட்டதுடன் அதில் எவ்வளவேனும் பணம் செலுத்தும் நிதி திறன் கூட்டுத்தாபனத்திற்கு காணப்படவில்லை. அவ்வாறே கடல்மணல் பக்கற்காக சந்தை கேள்வியொன்று தோன்றாமையின் காரணத்தினால் இச் செயற்திட்டம் மீளாய்வாண்டினுள் நிறுத்தப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் இக் கடன் பணம் அறவிடப்படுவதில் இடரொன்று கூட்டுத்தாபனத்திற்கு காணப்படுகின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஓ) கூட்டுத்தாபனத்தினால் முதன்மை சாத்தியக்கூறு ஆய்வில்லாது மாதின்நாகொடை உப வழியொன்று நிர்மாணிப்பதற்காக கடந்த ஆண்டு இறுதியில் ரூபா 112 மில்லியன் செலவிடப்பட்டிருப்பினும் செயற்திட்டம் ஆரம்பித்ததன் பின்னர் காணி கையகப்படுத்திக்கொள்வதற்கு ஏற்பட்ட பிரச்சனையான நிலைமையினால் இந்த நிர்மாணிப்பு இடையில் நிறுத்தப்பட்டது. அதனால் செயற்திட்டத்திற்காக ஏற்க்கப்பட்ட செலவு வீணான செலவாக அவதானிக்கப்பட்டது.

(ஔ) கூட்டுத்தாபனத்தினால் கடந்த ஆண்டில் ரூபா 89.87 மில்லியன் செலவிடப்பட்டு நிர்மானிக்கப்பட்ட முதுராஜவெல கொம்போஸ்ட் செயற்திட்டத்திற்கு சொந்தமான கட்டிடமொன்று மீளாய்வாண்டு இறுதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது.

(க) 2019 திசெம்பர் 31 இற்கு கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணிநிலையினர் 1,875 ஆனதுடன் அத்திகதியில் உள்ளவாரான பணிநிலையினர் 1,407 ஆனதில் கூட்டுத்தாபனத்தின் பணிநிலையின் வெற்றிடம் 437 மற்றும் மிகை 31 ஆக காணப்பட்டது. அவ்வாறே, மீளாய்வாண்டு இறுதியில் கூட்டுத்தாபனத்தின் துணை கம்பனிகளான காணி மீட்டு மற்றும் அபிவிருத்தி கம்பனியில் மற்றும் எல்.ஆர்.டீ.சீ சேவை கம்பனியில் சம்பளம் மீள்நிரப்பும் அடிப்படையில் கூட்டுத்தாபனத்திற்கு இணைக்கப்பட்ட பணிநிலையினர் முறையாக 102 மற்றும் 800 ஆக

காணப்பட்டதுடன் அப் பணிநிலையினருக்காக கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டு இறுதியில் ஊதியமாக கொடுப்பனவு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 486.86 மில்லியனாக காணப்பட்டது. மேலும், மேற்குறிப்பிட்ட பணிநிலையினருக்கு மேலதிகமாக மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தினால் அதன் வேலைத் தளங்களிலான நடவடிக்கைகளுக்காக நாளொன்றிற்கு ரூபா 750 கொடுப்பனவின் அடிப்படையில் சிவில் பாதுகாப்பு திணைக்களத்திலிருந்து 175 ஊழியர்களின் சேவை பெறப்பட்டிருந்தது..

(ங) மீளாய்வாண்டில் செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் அடையாளப்படுத்தப்பட்டு செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட (Projects to be identified) ரூபா 211 மில்லியனான செயற்திட்டங்கள் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அடையாளப்படுத்தப்படுவதற்கு கூட்டுத்தாபனத்தினால் முடியாதிருந்தது. அவ்வாறே ஆண்டினுள் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ரூபா 7,473 மில்லியன் பெறுமதியான 03 செயற்திட்டங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்படாத 04 செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனம் ஏற்ற செலவினம் ரூபா 89.32 மில்லியனாக காணப்பட்டது. அவ்வாறே, மீளாய்வாண்டிற்கு தொடர்புடையதாக முன்னர் தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்திற்கு உள்ளடக்கப்படாத செயற்திட்டத்திற்காக ரூபா 553 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்குவதற்கு செயல் நடவடிக்கை திட்டம் திருத்தப்பட்டுள்ளதெனவும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ச) திருத்தப்பட்ட ஒப்பந்த பெறுமதி ரூபா 563.26 மில்லியனான சேவை வழங்குனர் செயற்திட்டமான கிரிமண்டல வீதி முன்மொழியப்பட்ட வெள்ளப்பெருக்கு கட்டுப்பாடு மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் கட்டுமானத்திற்காக மீளாய்வாண்டு இறுதியில் ஏற்கப்பட்டிருந்த கிரயம் ரூபா 297.63 மில்லியன் ஆனதுடன் பெறப்பட்ட ஒட்டுமொத்த நட்டம் ரூபா 108.57 மில்லினாக காணப்பட்டது. சேவை வழங்குனர் நிறுவனம் செலுத்துவதற்கு இணங்கிய விலை அளவுகளுக்கு (BOQ Rate) மேற்பட்ட செய்யப்பட்ட வேலைக்காக கூட்டுத்தாபனம் செலவு ஏற்றல் இந் நிலைமைக்கு தாக்கமளித்திருந்தது.

(ஞ) மீளாய்வாண்டு இறுதியில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 242.14 மில்லியன் செய்யப்பட்டு வருகின்ற 07 வேலைகள் 02 தொடக்கம் 03 வருடங்களாக காணப்பட்டதுடன் இந்த செயற்திட்டத்திட்டங்கள், காலக்கிரமத்தில் நிறைவு செய்வதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்காததன் ஊடாக அச் செயற்திட்டங்களில் எதிர்பார்க்கப்பட்ட பிரதிலாபம் கூட்டுத்தானத்தினால் இழக்கப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனம் செயற்படுத்திய 07 கட்டுமான ஒப்பந்தங்களில் பெறப்பட்ட ஒட்டுமொத்த நட்டம் ரூபா 125.84 மில்லியனாக காணப்பட்டதுடன் கூட்டுத்தாபனத்தின் நிரந்தர ஊழியர்கள் செயலற்ற நிலையில் இருக்கையில் மனிதவள கூலி (Manpower Hire) பெற்றுக் கொள்ளல் மற்றும் ஒப்பந்த முகாமைத்துவ செயற்றிறனின்மைகள் இந் நட்ட நிலைக்கு நேரடியாக தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது.

(ட) மீளாய்வாண்டு இறுதியில் வேலை நிறைவு செய்யப்பட வேண்டிய ஒப்பந்த பெறுமதி ரூபா 620.72 ஆன 09 ஒப்பந்தங்களின் வேலைகள் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. கூட்டுத்தாபனம் ஒப்பந்த வேலைகளை முறையாக மேற்பார்வை செய்யாமை, உப ஒப்பந்தக்காரர்களின் செயற்றிறனின்மைகள் இதற்கு காரணமாகியிருந்தன.

(ண) கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டில் ரூபா 520.74 மில்லியன் பெறுமதியான 03 ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு செல்வதற்காக சேவை வழங்குனரிடமிருந்து அணிதிரட்டல் முற்பணம் (Mobilization advance) பெற்றுக்கொள்ளப்படாதிருந்ததுடன் சேவை வழங்குனருடன் முறையான ஒப்பந்தமொன்றிற்கு உடன்பட்டுமிருக்கவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டு இறுதியில் இவ் ஒப்பந்தங்களின் செய்யப்பட்ட வேலை பெறுமதியில் ரூபா 135.95 மில்லியன் சேவை வழங்குனரிடமிருந்து பெறவேண்டியிருந்ததுடன் அதில் ரூபா 97.82 மில்லியன் ஆன செய்யப்பட்ட வேலை அளவொன்று சேவை வழங்குனரினால் இன்னுமாக சான்றுப்படுத்தப்பட வேண்டி காணப்பட்டது. அவ்வாறே 2020 ஆம் ஆண்டு இறுதியிலும் மேற்கூறப்பட்ட ஒப்பந்தங்களுக்காக சேவை வழங்குனரிடமிருந்து ரூபா 98.43 மில்லியன் அறவிடப்பட வேண்டி காணப்பட்டது.

(த) முறையான சாத்தியக்கூறு ஆய்வின்றி கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டில் செயற்படுத்தப்பட்டிருந்த பேரே குளம் படகு சேவையின் ஊடாக மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 3.48 மில்லியன் நட்டமொன்று பெறப்பட்டிருந்தது. இதற்கான கிரயம் ரூபா 40 மில்லியன் ஆன புதிய படகொன்று இந்த செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்திற்காக கூட்டுத்தாபனம் ஏற்ற மொத்த கிரயம் ரூபா 41.02 மில்லியன் ஆக காணப்பட்டது.

(ந) மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான முதுராஜவெலயில் அமைந்துள்ள 04 ஹேக்கர் ஆன காணியொன்று தனியார் கம்பனியொன்றிற்கு உள்குத்தகை கொடுக்கும் போது (Sub lease) அறவிடப்பட வேண்டிய உள்குத்தகை கட்டணமான ரூபா 56.60 மில்லியன் 2 மில்லியன் என கணக்கிடப்பட்டு அறவிடப்பட்டதன் காரணத்தினால் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 54.60 மில்லியன் ஆக காணப்பட்டது. மேலும், இதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்படுவதற்கும் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

டப்பிள்யூ.பீ.சீ விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

முழுமையான வருமானக் கூற்று - திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டு

	குறிப்பு	குழு		கூட்டுத் தாபனம்	
		2019 ரூ. 000	2018 ரூ. 000	2019 ரூ. 000	2018 ரூ. 000
வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்த மூல வருமானம்	1	8,339,384	8,872,736	6,537,657	7,097,374
நேரடி ஆகுசெலவு	2	(6,362,450)	(6,059,016)	(4,714,876)	(4,499,760)
மொத்த இலாபம்		**1,976,934**	**2,813,720**	**1,822,781**	**2,597,614**
ஏனைய இக்கச் செயற்பாட்டு வருமானம்	3	147,623	114,347	100,237	97,069
ஏனைய வருமானம் உள்ளிட்ட மொத்த வருமானம் மற்றும் இலாபம்		**2,124,557**	**2,928,067**	**1,923,018**	**2,694,683**
நிருவாகச் செலவுகள்		(1,141,960)	(1,131,173)	(970,431)	(969,537)
தேய்மானம்		(170,546)	(236,840)	(153,554)	(220,463)
ஊக்குவிப்பு விளம்பரச் செலவுகள்		(77,664)	(116,423)	(77,124)	(116,108)
ஏனைய இயக்கச் செயற்பாட்டுச் செலவுகள்		(60,157)	(63,659)	(60,157)	(63,659)
இயக்கச் செயற்பாடுகளிருந்து வரும் இலாபம்	4	**674,230**	**1,379,972**	**661,752**	**1,324,916**
நிதி ஆகுசெலவு	5	(596,346)	(438,286)	(592,913)	(435,467)
நிதி வருமானம்	6	470,990	552,475	476,910	541,258
பிற்போடப்பட்ட வருமானத்தின் கழிவு	7	206,856	189,584	206,856	189,584
வரிக்கு முன்னருள்ள இலாபம்		**755,730**	**1,683,745**	**752,605**	**1,620,291**
வரிவிதிப்பு	8	(314,087)	(495,705)	(296,137)	(472,075)
குறித்த ஆண்டிற்கான இலாபம்		**441,643**	**1,188,040**	**456,468**	**1,148,216**
சேரவேண்டிய இலாபம்					
தலைமை நிறுவனத்திற்கான ஒப்புரவுப் பங்குகள்		440,387	1,179,432	456,468	1,148,216
கட்டுப்பாடற்ற வட்டி		1,256	8,608	-	-
ஏனைய முழுமையான வருமானம்					
திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் மீதான நிஜ இலாபம்/(நட்டம்)	18	(15,151)	1,556	(18,209)	1,556
PPE மீள்விலைமதிப்பீடு மீதான மிகை		212,430	-	212,430	-
குறித்த ஆண்டிற்கான மொத்த ஏனைய முழுமையான வருமானம்		**197,279**	**1,556**	**194,221**	**1,556**
குறித்த ஆண்டிற்கான மொத்த முழுமையான வருமானம்		**638,922**	**1,189,596**	**650,689**	**1,149,772**
சேரவேண்டிய மொத்த முழுமையான வருமானம்					
தலைமை நிறுவனத்திற்கான ஒப்புரவுப் பங்குகள்		637,054	1,180,988	650,689	1,149,772
கட்டுப்பாடற்ற வட்டி		1,868	8,608	-	-

96 முதல் 112 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் மற்றும் குறிப்புகளும் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத பாகங்களாகும்.

நிதி நிலைக் கூற்று

திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டு	குறிப்பு	குழு 2019 ரூ.000	குழு 2018 ரூ.000	கூட்டுத் தாபனம் 2019 ரூ.000	கூட்டுத் தாபனம் 2018 ரூ.000
சொத்துக்கள்					
நடைமுறையல்லாத சொத்துக்கள்					
சொத்துக்கள், பொறித் தொகுதிகள், உபகரணங்கள்	9	2,887,981	2,760,452	2,424,370	2,671,811
கட்புலனாகு சொத்துக்கள்		4,232	5,031	3,575	4,034
முதலீட்டுச் சொத்துக்கள்	10	2,489,809	1,893,358	2,489,809	1,893,358
துணை நிறுவனங்களிலுள்ள முதலீடுகள்	11	-	-	2,000	2,000
சம்பந்தப்பட்டுள்ள தரப்புகளிடமிருந்து வரவேண்டிய தொகைகள்	14	-	-	203,500	128,250
பிற்போடப்பட்டுள்ள வரி சார்ந்த சொத்துக்கள்		111,422	77,208	78,878	50,603
		5,493,444	**4,736,049**	**5,202,132**	**4,750,056**
நடைமுறைச் சொத்துக்கள்					
பொருட்பதிவேடுகள்	12	3,122,019	2,486,950	3,024,762	2,417,199
வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள்	13	6,370,966	6,629,355	5,635,272	5,859,322
வரிவிதிப்பு		3,422	408	-	-
சம்பந்தப்பட்டுள்ள தரப்புகளிடமிருந்து வரவேண்டிய தொகைகள்	14	-	-	341,011	78,105
		3,145,992	3,752,965	2,981,475	3,602,876
காசும் காசு ஒப்புரவுகளும்	15	706,097	980,606	546,896	795,025
		13,348,496	**13,850,284**	**12,529,416**	**12,752,527**
மொத்தச் சொத்துக்கள்		**18,841,940**	**18,586,333**	**17,731,548**	**17,502,583**
ஒப்புரவும் பொறுப்புக்களும்					
மூலதனமும் ஒதுக்கீடுகளும்					
பங்களித்த மூலதனம்		1,000	1,000	1,000	1,000
மூலதன ஒதுக்கீடு		13,461	13,461	13,461	13,461
சொத்துக்கள் மீளிடுகை ஒதுக்கீடு		1,471	1,471	-	-
சொத்துக்கள் மீள்விலைமதிப்பீட்டு ஒதுக்கீடு		229,316	19,646	212,430	-
பிடித்துவைக்கப்பட்டுள்ள சம்பாத்தியங்கள்		6,503,306	6,075,922	6,263,585	5,825,326
மருத்துவ நிதி		69,728	56,909	69,728	56,909
கட்டுப்பாடற்ற வட்டி		71,100	69,232	-	-
மொத்த மூலதனமும் ஒதுக்கீடுகளும்		**6,889,382**	**6,237,641**	**6,560,204**	**5,896,696**
நடைமுறையல்லாத பொறுப்புக்கள்					
சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகள் மீது செலுத்த வேண்டிய நஷ்டஈடு		200,482	212,363	200,482	212,363
பிற்போடப்பட்டுள்ள வரிப் பொறுப்புக்கள்		241,132	193,353	241,132	193,353
பிற்போடப்பட்டுள்ள வருமானம்	16	796,795	863,205	796,795	863,205
வட்டியை சுமந்து வரும் கடன்களும் பற்றுக்களும்	17	2,731,046	3,020,891	2,716,057	2,996,781
ஓய்வூதிய நன்மைகள் கடப்பாடு	18	412,336	384,580	281,707	264,217
		4,381,791	**4,674,392**	**4,236,173**	**4,529,919**
நடைமுறைப் பொறுப்புக்கள்					
வட்டியை சுமந்து வரும் கடன்களும் பற்றுக்களும்	17	1,474,442	685,452	1,466,859	678,859
வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகள்	19	2,023,016	2,735,424	1,286,905	2,086,510
சம்பந்தப்பட்டுள்ள தரப்புகளுக்கு செலுத்த வேண்டிய தொகைகள்	21	-	-	143,371	104,170
வரிவிதிப்பு		89,742	313,585	82,533	287,531
காணி நிரப்பலுக்கான ஏற்பாடு		557,993	534,805	557,993	534,805
செலுத்த வேண்டிய பங்குலாபம்		910	910	-	-
பெற்ற முற்பணங்கள்	20	3,397,510	3,384,093	3,397,510	3,384,093
வங்கி மேலதிகப் பற்றுக்கள்	15	27,154	20,031	-	-
		7,570,767	**7,674,300**	**6,935,171**	**7,075,968**
மொத்தப் பொறுப்புக்கள்		**11,952,558**	**12,348,692**	**11,171,344**	**11,605,887**
மொத்த ஒப்புரவும் பொறுப்புக்களும்		**18,841,940**	**18,586,333**	**17,731,548**	**17,502,583**

96 முதல் 112 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் மற்றும் குறிப்புகளும் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத பாகங்களாகும்.

நிதிக் கூற்றுக்கள் இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் வெளியிடப்பட்டுள்ள இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.
கையொப்பமிடப்பட்டது:

ஜே.ஏ.பி.கே. ஜயசிங்க
பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)

பொறியியலாளர் கே. ராஜபக்ஷ
பொது முகாமையாளர்

இந்த நிதிக் கூற்றுக்களை தயாரித்து வழங்கும் பொறுப்பானது பணிப்பாளர்கள் சபைக்குரியதாகும். பணிப்பாளர்கள் சபைக்காகவும் அதன் சார்பாகவும் கையொப்பிடப்பட்டது:

மேஜர் ஜெனரால் (ஓய்வுபெற்ற) எம்.ஆர்.டப்ளியூ. த சில்வா
பணிப்பாளர்

எம்.எச்.என்.எல். நவரத்ன USP psc MSc (பாதுகாப்பு)
தலைவர்

2020 ஆகஸ்ட்டு 27

ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று

குழு

	பங்களித்த மூலதனம்	மூலதன ஒதுக்கீடு	சொத்துக்கள் மீளிடுகை ஒதுக்கீடு	சொத் துக்கள் மீள்விலை மதிப் பீட்டு ஒதுக்கீடு	பிடித்து வைத்த சம்பாத் தியம்	மருத்துவ நிதி	கட்டுப் பாடற்ற வட்டி	மொத் தம்
தேய்மானம்	**ரூ'000**	**ரூ'000**	**ரூ'000**	**ரூ'000**	**ரூ'000**	**ரூ'000**	**ரூ'000**	**ரூ'000**
நிலுவை - 2018.01.01	1,000	13,461	1,471	22,501	4,892,079	44,631	60,624	5,035,767
2018 ஆம் ஆண்டிற்கான இலாபம்	-	-	-	-	1,179,432	-	8,608	1,188,040
மருத்துவ நிதியில் அதிகரிப்பு	-	-	-	-	-	12,278	-	12,278
திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் மீதான நிஜ இலாபம்	-	-	-	-	1,556	-	-	1,556
PPE மீள்விலைமதிப்பீடு மீதான மிகை				(2,855)	2,855	-	-	-
நிலுவை - 2019.01.01	**1,000**	**13,461**	**1,471**	**19,646**	**6,075,922**	**56,909**	**69,232**	**6,237,641**
2019 ஆம் ஆண்டிற்கான இலாபம்	-	-	-	-	440,387	-	1,256	441.643
மருத்துவ நிதியில் அதிகரிப்பு	-	-	-	-	-	12,819	-	12,819
திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் மீதான நிஜ நட்டம்	-	-	-	-	(15,763)	-	612	(15,151)
மீள்விலைமதிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் அகற்றல்	-	-	-	(2,760)	2,760	-	-	-
PPE மீள்விலைமதிப்பீடு மீதான மிகை	-	-	-	212,430	-	-	-	212,430
நிலுவை - 2019.12.31	**1,000**	**13,461**	**1,471**	**229,316**	**6,503,306**	**69,728**	**71,100**	**6,889,382**

கூட்டுத் தாபனம்

	பங்களித்த மூலதனம்	மூலதன ஒதுக்கீடு	சொத் துக்கள் மீள்விலை மதிப் பீட்டு ஒதுக்கீடு	பிடித்து வைத்த சம்பாத் தியம்	மருத்துவ நிதி	மொத்தம்
	ரூ.000	**ரூ.000**		**ரூ.000**	**ரூ.000**	**ரூ.000**
நிலுவை - 2018.01.01	1,000	13,461	-	4,675,554	44,631	4,734,646
2018 ஆம் ஆண்டிற்கான இலாபம்	-	-	-	1,148,216	-	1,148,216
மருத்துவ நிதியில் அதிகரிப்பு	-	-	-	-	12,278	12,278
திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் மீதான நிஜ இலாபம்	-	-	-	1,556	-	1,556
நிலுவை - 2019.01.01	**1,000**	**13,461**	**-**	**5,825,326**	**56,909**	**5,896,696**
2019 ஆம் ஆண்டிற்கான இலாபம்	-	-	-	456,468	-	456,468
PPE மீள்விலைமதிப்பீடு மீதான மிகை	-	-	212,430	-	-	212,430
மருத்துவ நிதியில் அதிகரிப்பு	-	-	-	-	12,819	12,819
திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் மீதான நிஜ நட்டம்	-	-	-	(18,209)	-	(18,209)
நிலுவை - 2019.12.31	**1,000**	**13,461**	**212,430**	**6,263,585**	**69,728**	**6,560,204**

96 முதல் 112 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் மற்றும் குறிப்புகளும் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத பாகங்களாகும்.

காசுப்பாய்ச்சல் கூற்று

திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டு	குழு		கூட்டுத் தாபனம்	
	2019	2018 (மீளெடுத்துரைத்த)	2019	2018 (மீளெடுத்துரைத்த)
	ரூ.000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000
இயக்கச் செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப் பாய்யச்சல்				
வரிக்கு முன்னருள்ள தேறிய இலாபம்/(நட்டம்)	755,730	1,683,745	752,605	1,620,291
பின்வருவனவற்றுக்கான சீராக்கல்கள்:				
தேய்மானம்	371,400	164,038	357,118	143,844
பிற்போடப்பட்டுள்ள வருமானத்தின் கழிவு	(206,857)	(189,584)	(206,857)	(189,584)
சந்தேகத்திற்கிடமான பற்றுக்களுக்கான ஏற்பாடு	(74,936)	57,815	(42,688)	41,216
வெளிநாட்டு நாணயமாற்று நட்டம்	2,180	15,242	2,180	15,242
வெளிநாட்டு நாணயமாற்று இலாபம்	(3,063)	(60,999)	(3,063)	(60,999)
பதிவழிக்கப்பட்டுள்ள தீராத பற்றுக்கள்	20,994	1,630	-	-
பதிவழிக்கப்பட்டுள்ள கோராத நிலுவைகளில் இருந்து வரும் வருமானம்	(7,681)	(206)	(7,681)	(206)
நிதி ஆகுசெலவு	595,499	437,439	592,066	434,619
நிதி வருமானம்	(470,990)	(552,475)	(476,909)	(541,258)
சொத்துக்களிலும், பொறித் தொகுதிகளினதும், உபகரணங்களினதும் விற்பனை மீதான இலாபம்	(465)	(1,721)	(163)	(1,847)
மந்தமாக நகரும் பொருட்களுக்கான ஏற்பாடு	(21,724)	(1,041)	(21,724)	(1,041)
நஷ்டஈடுகளுக்கான ஏற்பாடு	847	847	847	847
திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் கடப்பாட்டிற்கான ஏற்பாடு	81,269	58,195	45,431	41,093
	1,042,203	**1,673,924**	**991,162**	**1,563,861**
தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னருள்ள இயக்கச் செயற்பாட்டு இலாபம்				
தொழிற்படு மூலதனத்திலுள்ள மாற்றங்கள்				
பொருட்பதிவேடுகளிலுள்ள (அதிகரிப்பு)/குறைவு	(613,344)	(1,385,789)	(533,174)	(1,392,646)
கிடைத்த முற்பணங்களிலுள்ள (அதிகரிப்பு) /குறைவு	13,417	336,544	13,415	336,549
வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகளிலுள்ள (அதிகரிப்பு)/குறைவு	330,867	102,349	269,802	368,171
சம்பந்தப்பட்டுள்ள தரப்புகளிடமிருந்து வரவேண்டிய தொகைகளிலுள்ள (அதிரிப்பு)/குறைவு	-	-	(233,372)	2,684
சம்பந்தப்பட்டுள்ள தரப்புகளுக்கு செலுத்த வேண்டிய தொகைகளிலுள்ள அதிகரிப்பு/(குறைவு)	-	-	39,201	(17,594)
செலுத்த வேண்டிய வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகளிலுள்ள அதிகரிப்பு/(குறைவு)	(622,127)	392,201	(778,599)	306,324
இயகச்கச் செயற்பாடுகளிலிருந்து ஈட்டிய காசு	151,016	1,119,229	(231,565)	1,167,349
செலுத்தப்பட்டுள்ள வருமான வரி	(519,010)	(565,966)	(466,951)	(551,341)
செலுத்தப்பட்டுள்ள ஓய்வூதிய பணிக்கொடை	(68,664)	(51,676)	(46,150)	(37,006)
இயக்கச் செயற்பாடுகளில் / (பயன்பட்டுள்ள) இருந்து வரும் தேறிய காசு	**(436,658)**	**501,587**	**(744,666)**	**579,002**
முகலீட்டுச் செயற்பாடுகளில் இருந்து வரும் காசுப் பாய்ச்சல்கள்				
சொத்துக்கள், பொறித் தொகுதிகள், உபகரணங்கள் கொள்வனவு	(814,818)	(579,981)	(407,449)	(528,285)
நிலையான வைப்புக்களிலுள்ள தேறிய முதலீடு	606,974	(826,255)	621,401	(806281)
கிடைத்த வட்டி வருமானம்	455,893	545,134	448,349	435,644
சொத்துக்களினதும், பொறித் தொகுதிகளினதும், உபகரணங்களினதும் விற்பனையில் இருந்து கிடைத்த வருமானம்	4,606	29,521	4,305	2,220
முதலீட்டுச் செயற்பாடுகளில் / (பயன்பட்டுள்ள) இருந்து வரும் தேறிய காசு	**252,655**	**(831,581)**	**666,606**	**(896,702)**
நிதியிடும் செயற்பாடுகளில் இருந்து வரும் காசுப் பாய்ச்சல்				
செலுத்திய வட்டியும் மற்றும் நஷ்டஈடும்	(15,659)	(2,002)	(15,659)	(2,002)
கிடைத்த கடன்	1,470,000	1,036,700	1,470,000	1,030,000
கடன் மீள்கொடுப்பனவு	(964,743)	(157,102)	(962,724)	(156,379)
துணை நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன்கள்	-	-	(81,250)	(118,750)
கடன்கள் மீது செலுத்தப்பட்டுள்ள வட்டி	(580,436)	(431,403)	(580,436)	(431,403)
செலுத்தப்பட்டுள்ள குத்தகை வாடகைகள்	(6,791)	(7,137)	-	-
நிதியிடும் செயற்பாடுகளில் இருந்து வரும் தேறிய காசுப் பாய்ச்சல்	**(97,629)**	**(439,056)**	**(170,069)**	**321,466**
காசும் காசு ஒப்புரவுகளிலுமுள்ள தேறிய அதிகரிப்பு/(குறைவு)	(281,632)	109,062	(248,129)	3,766
குறித்த ஆண்டு ஆரம்பத்திலுள்ள காசும் காசு ஒப்புரவும்	960,575	851,513	795,025	791,259
குறித்த ஆண்டு இறுதியிலுள்ள காசும் காசு ஒப்புரவும் (குறிப்பு15)	**678,943**	**960,575**	**546,896**	**795,025**

96 முதல் 112 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் மற்றும் குறிப்புகளும் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத பாகங்களாகும்.

முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

1. கூட்டுத் தாபனம் பற்றிய தகவல்கள்

1.1 அறிக்கையிடும் நிறுவனம்

இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத் தாபனம் இலங்கையில் அமைந்துள்ள ஒரு அரச கூட்டுத் தாபனமாகும். இந்தக் கூட்டுத் தாபனம் 1968 இன் 15 ஆம் இலக்க சட்டத்தினால் 1968 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22 ஆம் திகதி கூட்டிணைக்கப்பட்டது.

இந்தக் கூட்டுத் தாபனத்தின் பதிவு செய்யப்பட்டுள்ள அலுவலகமும் பிரதான அலுவலக நிலையமும் இலக்கம் **3,** ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை**,** வெலிக்கட**,** ராஜகிரிய என்ற முகவரியில் அமைந்துள்ளது**.**

1.2 கூட்டிணைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள்

இலங்கைக் காணி அபிவிருத்திக் கூட்டுத் தாபனத்தினது 2019 திசம்பர் 31 ஆம் திகதியிலும் அந்தத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானதுமான கூட்டிணைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் கூட்டுத் தாபனத்தினதும் அதன் இரண்டு துணை நிறுவனங்களினதும் ('குழு' என சேர்த்துக் குறிப்பீடு செய்யப்படும்) கணக்குகள் உள்ளடங்குகின்றன. குழுவிலுள்ள சகல நிறுவனங்களினதும் நிதிக் கூற்றுக்கள் பொதுவாக 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஒரு நிதியாண்டைக் கொண்டிருக்கும். இலங்கைக் காணி அபிவிருத்திக் கூட்டுத் தாபனம் அதன் ஏதாவது இனங்காணக்கூடிய தலைமைக் கம்பனியைக் கொண்டதாகவில்லை. ஆகையால் கூட்டுத் தாபனமே குழுவின் அறுதி இறுதியான தலைமைக் கம்பனியாகும்.

1.3 பிரதான செயற்பாடுகளும் இயக்கச் செயற்பாடுகளின் தன்மையும்

குறித்த ஆண்டு காலப் பகுதியில் பின்வருவன கூட்டுத் தாபனத்தினதும் அதன் துணை நிறுவனங்களினதும் பிரதான செயற்பாடுகளாக இருந்தன.

நிறுவனத்தின் பெயர்	வியாபார அலுவல்கள் தன்மை
இலங்கைக் காணி அபிவிருத்திக் கூட்டுத் தாபனம்	வடிகாலமைப்பு மேம்பாடுகள், காணி அபிவிருத்திகள், நகர நிலக் காட்சிப்படுத்தல்கள், சதுப்பு நிலங்களின் முகாமைத்துவம், சிவில் நிர்மானங்கள் மற்றும் சம்பந்தப்படும் பொறியியல் சேவைகள் வழங்கல்.
வ/ப காணி சீராக்கல் மற்றும் அபிவிருத்திக் கம்பனி	சீமெந்து குற்றிகளை உற்பத்தி செய்தல், கடற்கரை மணலை அகழ்ந்தெடுத்து பொதியிட்டு விற்பனை செய்தல், வார்த்தெடுத்த பொருட்களை உற்பத்தி செய்தல், சிவில் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளல்
LRDC சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட்	பாதுகாப்பு சேவைகளையும் மனிதவலு சேவைகளையும் வழங்குதல்

கூட்டுத் தாபனத்தினது இரண்டு துணை நிறுவனங்களும் கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப் பட்டுள்ளன.

2. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் பற்றிய சுருக்கம்

2.1 பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்

2.1.1 கணக்குகள் தயாரித்தல் அடிப்படை

குழுவினது கூட்டிணைந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் (ப.க. - இலங்கை) வெளியிடப்பட்டுள்ள இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

2.1.2 அளவீட்டு அடிப்படை

இலாபத்தினூடாக அல்லது நட்டத்தினூடாக நியாய விலைப் பெறுமானத்தில் அளவிடப்பட்டுள்ள நிதி சார்ந்த சொத்துக்களுக்கு தவிர, கூட்டிணைந்த நிதிக் கூற்றுக்கள் ஒரு வரலாற்று ஆகுசெலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

2.1.3 சமர்ப்பணமும் தொழிற்படு நாணயமும்

கூட்டிணைந்த நிதிக் கூற்றுக்கள் குழுவினது தொழிற்படு மற்றும் சமர்ப்பண நாணயமாகிய இலங்கை ரூபாவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

2.1.4 இணக்கப்பாடு பற்றிய கூற்று

கூட்டுத் தாபனத்தினதும் அதன் குழுவினதும் 2019 திசம்பர் 31 ஆம் திகதிற்கும் அந்தத் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்குமான கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் அடங்கிய நிதி நிலைக் கூற்று ('நிதிக் கூற்று'), முழுமையான வருமானக் கூற்று, ஒப்புரவு பற்றிய மாற்றங்கங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல்கள் பற்றிய கூற்று என்பன உள்ளிட்ட கணக்குகள் இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் வெளியிடப்பட்டுள்ள இலங்கைக்க கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன.

2.1.5 நிகழ் விடயம்

பணிப்பாளர்கள் ஒரு நிகழும் விடயமாக கூட்டுத் தாபனத்தினதும் அதன் துணை நிறுவனங்களினதும் ஆற்றல் தொடர்பான மதிப்பீடொன்றை நடத்தியுள்ளனர். அதனைத் தொடர்ந்து இவர்கள் எந்த விதத்திலும் கூட்டுத் தாபனத்தினது செயல் நடவடிக்கைகளை ஒழித்துக்கட்டுவதற்கோ அல்லது மட்டுப்படுத்துவதற்கோ இவர்களிடம் எந்தவிதமான எண்ணமும் கிடையாது.

2.1.6 ஒத்தீட்டுத் தகவல்கள்

கணக்கீட்டுக் கொள்கைகள் தொடர்ச்சியாக கூட்டுத் தாபனத்தினாலும் கூட்டுத் தாபனத்தினது குழுவினாலும் 'நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பணம்' என்ற இலங்கைக் கணக்கீட்டு நியமம் - இ.க.நி. 01 இற்கு இணங்க பிரயோகிக்கப்பட்டுள்ளன. தற்போதைய சமர்ப்பணத்தை உறுதிசெய்வதற்கு தேவையான போதெல்லாம் ஒத்தீட்டுத் தகவல்கள் மீள்வகைப் படுத்தப்பட்டுள்ளன.

முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் (தொடர்ச்சி)

2.1.7 பொருண்மையான திரட்டலும் சமப்படுத்தலும்

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் என்பன இலங்கைக் கணக்கீட்டு நியமம் ஒன்றினால் தேவைப்படுத்தப்படாத அல்லது அனுமதிக்கப்படாத வரையில் அவை சமப்படுத்தப்படுவதில்லை.

பொருண்மையான ஒவ்வொரு விடய வகுதியும் நிதிக் கூற்றுக்களில் தனித்தனியாக முன்வைக்கப்படுகின்றன. ஒரே மாதிரியான தன்மையுடைய அல்லது தொழிற்பாடுகளையுடைய விடயங்கள், அவை பொருண்மையானதாக மாறாத வரையில் கூட்டு மொத்தமாக முன்வைக்கப்படுவதில்லை.

2.1.8 முக்கியமான கணக்கீட்டுத் தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள்

குழுவினது நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பானது வருமானம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் வெளிப்படுத்துகைகள் என்பவற்றின் அறிக்கையிடப்பட்டுள்ள தொகைகளில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய தீர்மானங்களையும், மதிப்பீடுகளையும் மற்றும் எடுகோள்களையும் மேற்கொள்வதற்கு முகாமைத்துவத்தைத் தேவைப்படுத்தும். இந்தத் தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் என்பவற்றின் காரணமாக சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் கொணரப்படும் தொகைகளுக்கு ஏற்படும் ஏதாவது பொருண்மையான சீராக்கல்கள் அடுத்த நிதியாண்டில் கருத்திற் கொள்ளப்படும்.

2.2 கூட்டிணைத்தல் அடிப்படை

கூட்டிணைந்த நிதிக் கூற்றுக்களில் கூட்டுத் தாபனத்தினதும் அதன் துணை நிறுவனங்களினதும் 2019 திசம்பர் 31 ஆம் திகதிற்கான நிதிக் கூற்றுக்கள் உள்ளடங்குகின்றன. துணை நிறுவனங்கள், குழு கட்டுப்பாட்டைப் பெறுகின்ற திகதியாகிய பெறுகைத் திகதியிலிருந்து அல்லது கூட்டிணைக்கப்படும் திகதியிலிருந்து அத்தகைய கட்டுப்பாடு முடிவடைகின்ற திகதி வரைக்கும் அவை தொடர்ந்து கூட்டிணைக்கப்படும்.

a) துணை நிறுவனங்கள்

குழு இரண்டில் மூன்றுக்கு அதிக வாக்களிக்கும் உரிமைகளின் பங்குடன் பொதுவாக நிதி மற்றும் இயக்கச் செயற்பாடுகள் சார்ந்த கொள்கைகளை நிருவகிப்பதற்கு நேரடியாக அதிகாரத்தைக் கொண்டுள்ள சகல நிறுவனங்களும் துணை நிறுவனங்களாகும். நடைமுறையில் பிரயோகிக்கக்கூடிய அல்லது மாற்றக்கூடிய சாத்தியமான வாக்களிக்கும் உரிமைகள் இருத்தலும் அதன் பயனும் குழு மற்றைய நிறுவனத்தின் மீது கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளதா என மதிப்பிடப்படுகின்ற போது கருத்திற்கொள்ளப்படும். துணை நிறுவனங்கள், குழுவுக்கு கட்டுப்பாடு கைமாற்றிக்கொடுக்கப்படும் திகதியிலிருந்து முழுமையாக கூட்டிணைக்கப்பட்டதாகக் காணப்படும். அவற்றின் கட்டுப்பாடு முடிவடைகின்ற திகதியிலிருந்து அவை கூட்டிணைக்கப்படாமல் விட்டுவிடப்படும்.

நிறுவனத்தின் பெயர்	பயனுள்ள பங்கு
வ/ப காணி சீராக்கல் மற்றும் அபிவிருத்திக் கம்பனி (REDECO)	80%
LRDC சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட்	80%

கூட்டுத் தாபனத்தினதும் அதன் துணை நிறுவனங்களினதும் மொத்த இலாபங்களும் நட்டங்களும் கூட்டிணைக்கப்பட்ட முழுமையான வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றன. கூட்டுத் தாபனத்தினதும் அதன் துணை நிறுவனங்களினதும் சகல சொத்துக்களும் பொறுப்புக்களும் கூட்டிணைக்கப்பட்ட நிதி நிலைக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றன.

b) கட்டுப்பாடு சாராத அக்கறை விடயம்

குழுவினது தேறிய சொத்துக்களில் வெளிப் பங்குதாரர்களுக்கு இருக்கின்ற அக்கறை விடயமும் வெளிப் பங்குதாரர்களுக்கு ஏற்புடைய வரிக்குப் பின்னருள்ள இலாப விகிதமும் 'கட்டுப்பாடு சாராத அக்கறை விடயம்' என்ற விடயத்தின் கீழ், கூட்டிணைந்த முழுமையான வருமானக் கூற்றிலும் கூட்டிணைந்த நிதி நிலைக் கூற்றிலும் தனித்தனியாக எடுத்துரைக்கப்படுகின்றன.

c) கூட்டிணைத்தலின் பேரில் நீக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்

குழுக்களுக்கு இடையிலான கொடுக்கல்வாங்கல்களின் பயனாக வரும் குழுக்களுக்கு இடையிலான சகல நிலுவைகளும், வருமான செலவினங்களும், மாறாத இலாபங்களும் நட்டங்களும் மற்றும் பங்குலாபங்களும் முழுமையாக நீக்கப்பட்டுள்ளன.

2.3 சொத்துக்களும் அவற்றின் விலைமதிப்பீட்டு அடிப்படைகளும்

2.3.1 சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பன குறைந்த திரண்ட தேய்மானத்தின் அடிப்படையில் கொள்னவு ஆகுசெலவில் அல்லது நிர்மான ஆகுசெலவில் எடுத்துரைக்கப்படுகின்றன. சொத்துக்களை அவற்றின் எதிர்பார்க்கப்பட்ட பாவனையின் நிமித்தம் தொழிற்படும் நிலைக்குக் கொண்டு வருவதற்காக ஏற்படக் கூடிய ஏதாவது ஆகுசெலவு கொள்வனவு ஆகுசெலவில் அல்லது நிர்மாண ஆகுசெலவில் உள்ளடங்கும்.

தேய்மானம்

கீழே வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் எதிர்பார்க்கப்பட்டுள்ள பயனுள்ள பாவனை காலத்தின் பேரிலான ஒரு நேர் நிரல் அடிப்படையில் அவற்றின் ஆகுசெலவைப் பதிவழிக்கும் பொருட்டு தேய்மான ஏற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது.

முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் (தொடர்ச்சி)

குத்தகை ஆதனக் காணி	குத்தகை காலத்திற்கு மேல்
நிரந்தர கட்டிடங்கள்	20 வருடங்களுக்கு மேல்
அரை நிரந்தர கட்டிடங்கள்	10 வருடங்களுக்கு மேல்
சொந்த காணிகளில் குடியிருப்பு நிர்மாணங்கள்	10 வருடங்களுக்கு மேல்
தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள்	10 வருடங்களுக்கு மேல்
அலுவலக உபகரணங்கள்	8 வருடங்களுக்கு மேல்
இலகு பயணி வாகனங்கள்	5 வருடங்களுக்கு மேல்
பொறித் தொகுதிகள், இயந்திராதிகள் மற்றும் உபகரணங்கள்	
- மண்ணை நகர்த்தும் அகழ்ந்து தோண்டும் இயந்திராதிகள் உபகரணங்கள்	10 வருடங்களுக்கு மேல்
- மூலப்பொருட்களைக் கையாளும் உபகரணங்கள்	10 வருடங்களுக்கு மேல்
- ஏனைய பொறித் தொகுதிகள் மற்றும் இயந்திராதிகள்	4 வருடங்களுக்கு மேல்
தொடர்பாடல் சாதனங்கள்	4 வருடங்களுக்கு மேல்
துவிச்சக்கர வண்டிகள் மற்றும் சிறு வேலைப்பட்டறை உபகரணங்கள்	2 வருடங்களுக்கு மேல்
இடைசொருகி சாதனங்கள்	10 வருடங்களுக்கு மேல்

2.3.2 முதலீடு சார்ந்த சொத்துக்கள்

முதலீடு சார்ந்த ஒரு சொத்து என்பது வாடகை வருமானத்தை ஈட்டுவதற்காக கொள்ளப்படுகின்ற ஆனாலும் வழமையான அலுவல்களில் விற்பனைக்காக அல்லது பொருட்களின் உற்பத்திற்காக அல்லது விநியோகத்திற்காக அல்லது சேவைக்காக அல்லது நிருவாக நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாத ஒரு சொத்தாகும். முதலீடு சார்ந்த சொத்துக்கள் கொள்வனவு ஆகுசெலவிலும் அதனையடுத்து அபிவிருத்தி ஆகுசெலவுகளிலும் எடுத்துரைக்கப்படுகின்றன.

2.3.3 பொருள் பதிவேடுகள்

பாவனையற்ற வழக்கொழிந்த மற்றும் மந்தமாக நகரும் பொருட்களுக்கான உரிய தள்ளுபடிகள் செய்யப்பட்டதன் பின்னர் பொருட்கள் குறைந்த செலவில் விலைமதிக்கப்பட்டு தேறிய மாறக் கூடிய பெறுமானத்தில் மதிப்பிடப்படுகின்றன. தேறிய மாறக் கூடிய பெறுமானம் என்பது மதிப்பிடப்பட்டுள்ள நிறைவு ஆகுசெலவையும் மற்றும் விற்பனைக்கு தயார்படுத்த தேவையான மதிப்பிடப்பட்டுள்ள ஆகுசெலவையும் பார்க்கிலும் குறைந்த பெறுமானத்தில் வழமையான வர்த்தக செயற்பாடுகளின் போது பொருட்கள் விற்பனை செய்யப்படக் கூடிய விலையாகும்.

பொருட்களை அவற்றின் தற்போதைய அமைவிடத்திற்கும் மற்றும் நிலைமைகளுக்கும் கொண்டு வருவதில் ஏற்படும் செலவுகள் பின்வரும் சூத்திரங்களை பிரயோகித்து கணக்கீடு செய்யப்படுகின்றன.

பொது இருப்புக்கள்	-	FIFO அடிப்படையிலான கொள்வனவு ஆகுசெலவில்
கடல் மணல் இருப்பு	-	அகழ்ந்தெடுக்கும் செலவு மற்றும் ஏனைய பொருத்தமான செலவுகள் ஆகியவற்றில்

2.3.4 நிகழும் பணி

நிகழும் பணி நிதி நிலைக் கூற்று திகதியில் நிகழுகின்ற நீண்டகால நிர்மாண கருத் திட்டங்களுடன் சம்பந்தப்படுகின்றது. இது கருத் திட்டத்திற்கு சேரக் கூடிய நேரடி மேன்தலை செலவுகள், மூலப்பொருட்கள் மற்றும் தொழிலாளர் செலவு முதலியவற்றை உள்ளடக்குகின்ற நேரடி ஆகுசெலவில் மதிப்பிடப்படுகின்றது.

2.3.5 வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள்

வர்த்தக வருமதிகள் நட்டத்திற்கான தேறிய ஏற்பாடுகளை உணர்த்தும் பொருட்டு மதிப்பிடப்படுகின்ற தொகைகளில் இனங்காணப்படுகின்றன. ஏனைய சம்பந்தப்பட்டுள்ள தரப்புகளிடமிருந்து வரவேண்டிய வருமதிகளும் மற்றும் கொடுமதிகளும் நட்டத்திற்கான குறைந்த நியாய விலைப் பெறுமானத்தில் இனங்காணப்படுகின்றன. தீராத மற்றும் சந்தேகத்திற்கிடமான பற்றுக்களுக்கு மீளறவிடும் சாத்தியத்தை கருத்திற் கொண்டு கணக்குகளில் ஏற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது.

2.3.6 காசும் காசு ஒப்புரவுகளும்

காசும் காசு ஒப்புரவுகளும் கையிருப்பிலுள்ள காசு, கேள்வி வைப்புகள் மற்றும் பெறுமானத்திலுள்ள கணிசமான மாற்றங்கள் ஆபத்துக்கு அமைய காசு தொகைகளை அறிந்துகொள்ளும் பொருட்டு உடனடியாக மாற்றக்கூடிய குறுங்கால அதி திரவநிலை முதலீடுகள் என வரையறுக்கப்படுகின்றன. காசுப் பாய்ச்சல் கூற்று நோக்கத்தின் நிமித்தம் காசும் மற்றும் காசு ஒப்புரவுகளும் REPO, திறைசேரி உண்டியல்கள் மற்றும் தேறிய வங்கி பற்றுக்கள் என்பன அடங்கலாக கையிருப்பிலுள்ள காசு மற்றும் வங்கியிலுள்ள வைப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கும்.

2.3.7 அரசாங்க மானியங்கள்

நீண்டகால சொத்துக்கள் அமைப்பில் கிடைக்கும் அரசாங்க மானியம் பிற்போடப்பட்டுள்ள வருமானமாக இனங்காணப்பட்டுள்ளது. இது வருடாந்தம் மூலதன அணுகுமுறையின் அடிப்படையில் சொத்துக்களின் பாவனை காலத்தின் மீது ஒரு வருமானமாகவும் இனங்காணப்படுகின்றது.

இயங்கும் செயற்பாடுகள் தொடர்பில் குறித்த ஆண்டு காலப் பகுதியில் கிடைத்த அரசாங்க மானியங்கள் (நீண்டகால சொத்துக்கள் தவிர) முழுமையான வருமானக் கூற்றில் முழுமையாக இனங்காணப்பட்டுள்ளன. தொடர்புடைய

முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் (தொடர்ச்சி)

ஆகுசெலவுகள் அதே காலப் பகுதியில் முழுமையான நிதிக் கூற்றுக்களுக்கு கொண்டுவரப்படுகின்றன.

அரசாங்க மானியங்களுடன் இணைகின்ற நிபந்தனைகள் மற்றும் ஏனைய இடைநேர் விடயங்கள் என்பன கருத்திற் கொள்ளப்பட்டு வெளிப்படுத்தப்படும்.

2.4 பொறுப்புக்களும் மற்றும் ஏற்பாடுகளும்

2.4.1 பொறுப்புக்கள்

நிதி நிலைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள பொறுப்புக்கள் நிதி நிலைக் கூற்று திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் வரக்கூடியவை என கருதப்படுகின்றன. நடைமுறையல்லாத பொறுப்புக்கள் என வகைப்படுத்தப்படும் விடயங்கள் அறிக்கையிடப்படும் திகதியிலிருந்து ஒரு வருட காலத்தின் பின்னர் வரக்கூடியவை என கருதப்படுகின்றன.

2.4.2 ஓய்வூதிய நன்மைகள் கடப்பாடு

2.4.2.1 திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் திட்டம் - பணிக்கொடை

திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் திட்டம் தொடர்பான நிதி நிலைக் கூற்றில் இனங்காணப்படும் பொறுப்பானது 'ஊழியர் நன்மைகள்' என்ற விடயத்துடன் தொடர்புடைய LKAS 19 என்ற கணக்கீட்டு நியமத்தினால் இனங்காணப்படுகின்றவாறு கருத் திட்டம் தொடர்பான அலகு கடன் (க.அ.க.) முறையியலை பிரயோகித்து வருடாந்தம் சுயாதீன மதிப்பீட்டு தரப்புகளினால் கணிப்பிடப்படுகின்ற திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் கடப்பாட்டின் தற்போதைய பெறுமானமாகும். திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் திட்டத்திற்கான உண்மையான இலாபங்களும் மற்றும் நட்டங்களும் ஏனைய முழுமையான வருமானத்தில் அந்த இலாபங்களும் மற்றும் நட்டங்களும் எழுகின்ற காலப் பகுதியில் முழுமையாக இனங்காணப்படுகின்றன.

எனினும், 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்திற்கு இணங்க, ஊழியர் ஒருவருக்கான பணிக்கொடைக் கொடுப்பனவுக்கான பொறுப்பு ஐந்து வருட தொடர் சேவை பூர்த்தியின் பின்னர் எழும்.

2.4.2.2 திட்டவட்டமான ஓய்வூதிய பங்களிப்புத் திட்டங்கள்

ஊழியர்கள் அந்தந்த நியதிச்சட்டங்களுக்கும் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் இணங்க ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்பு செய்வதற்கு தகுதியுடையவர்களாவர்.

(a) ஊழியர் சேமலாப நிதி

கூட்டுத் தாபனம் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 12% வீதம் பங்களிப்பு செய்யும் அதே வேளையில் ஊழியர்கள் 10% வீதம் பங்களிப்பு செய்ய வேண்டும்.

(b) ஊழியர் நம்பிக்கை நிதி

கூட்டுத் தாபனம் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு ஊழியர்களின் சார்பாக 3% வீதத்தை பங்களிப்பு செய்யும்.

2.4.3 வரி விதிப்பு

a) வருமான வரி

வருமான வரிக்கான ஏற்பாடு நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டது போல் வருமானம் மற்றும் செலவினம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருக்கும். இந்த வருமான வரி 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தினது ஏற்பாடுகளுக்கும் மற்றும் அதனையடுத்து அந்த சட்டத்திற்கான திருத்தங்களுக்கும் இணங்க கணிப்பிடப்படுகின்றது.

b) பிற்போடப்பட்டுள்ள வரி

பிற்போடப்பட்டுள்ள வரி அறிக்கையிடப்படும் திகதியில் நிதி சார்ந்த அறிக்கையிடல் நோக்கங்களின் நிமித்தம் சொத்துக்களின் வரி அடிப்படைகளுக்கும் மற்றும் பொறுப்புகளுக்கும் அதே நேரம் அவற்றின் கொணரப்படும் தொகைகளுக்கும் இடையிலான தற்காலிக வித்தியாசங்களின் அடிப்படையில் பொறுப்பு முறையியலை பிரயோகித்து ஏற்பாடு செய்யப்படுகின்றது.

பிற்போடப்பட்டுள்ள வரி குறித்த ஆண்டில் வரி வீதங்கள் ஏற்புடையதாகும் என எதிர்பார்க்கப்படும் அல்லது விதிக்கப்பட்டுள்ள வரி வீதங்களின் (மற்றும் வரிச் சட்டங்கள்) அல்லது அறிக்கையிடப்படும் திகதியில் பொருண்மையாக சட்டமாக்கப்பட்டுள்ள அத்தகைய வரிகளின் அடிப்படையில் தீர்ப்பனவு செய்யப்படும் என்ற அளவுக்கு நம்பத்தகுந்த விதத்தில் அளவிடப்படலாம்.

2.5 முழுமையான வருமானக் கூற்று

2.5.1 வருமானம்

கூட்டுத் தாபனம் செயலாற்றுகை சார்ந்த கடப்பாடுகள் திருப்தியடைகின்ற போது வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து வருமானத்தை இனங்கண்டுகொள்கின்றது. கீழ்காணும் விஷேட தகவுதிறன்கள் வருமானத்தை இனங்காணும் நோக்கத்திற்காக பிரயோகிக்கப்படுகின்றன.

a) பொருட்களின் விற்பனை

பொருட்களின் விற்பனையிலிருந்து வரும் வருமானம் வழமையாக பொருட்கள் விநியோகிக்கப்படுவதன் பேரில் கொள்வனவு செய்யும் தரப்புக்கு அந்த பொருட்களின் உடமை சென்றுள்ள மற்றும் கணிசமான பொறுப்புக்கள் இருக்கின்ற போது இனங்காணப்படுகின்றது.

b) சேவைகள் வழங்கல்

ஒரு வாடிக்கையாளர் தரப்பு சேவையை வழங்க வாக்குறுதியளித்து பொறுப்புச்சாட்டுவதன் மூலம் ஒரு செயலாற்றுகைக் கடப்பாட்டில் கூட்டுத் தாபனம்

முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் (தொடர்ச்சி)

திருப்திகொள்கின்ற போது, சேவை வழங்கலிலிருந்து வருமானம் இனங்காணப்படுகின்றது.

c) காணிகளின் விற்பனையிலிருந்து வரும் வருமானம்

காணிகள் கேள்வி மனுக்களின் அல்லது ஏனைய முறை மூலம் விற்பனை செய்யப்படுகின்ற போது, விற்பனைப் பெறுமானம் பொதுவாக காணியின் உறுதி உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ள அல்லது சகல கொடுப்பனவுகளும் கிடைத்துள்ள மற்றும் உறுதி உரிமை மாற்றலின் மூலம் அநேகமாக விற்பனை நிறைவேற்றப்படாத போது வருமானத்திற்கு கொண்டுவரப்படுகின்றது.

d) நிர்மாண ஒப்பந்தங்கள்

நிர்மாணம் சார்ந்த வருமானம் ஒப்பந்தத்தில் உடன்பட்டுள்ள ஆரம்ப தொகையையும், ஒப்பந்தப் பணி, கோரல்கள் மற்றும் ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் என்பன அநேகமாக வருமானத்திற்கு பயனாக அமைந்த நம்பத்தகுந்த விதத்தில் அளவிடப்படலாம் என்ற அளவுக்கு அவற்றின் ஏதாவது வித்தியாசங்களையும் உள்ளடக்கியிருக்கும்.

SLRFS 15 நியமத்திற்கு இணங்க செயலாற்றுகை சார்ந்த கடப்பாட்டின் முழுமையான திருப்தியை நோக்கி வெளியீட்டு முறையியலைப் பயன்படுத்தி ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுகின்ற காலப் பகுதியில், கூட்டுத் தாபனம் நிர்மாண ஒப்பந்தங்களிலிருந்து வரும் வருமானத்தை இனங்காணுகின்றது. ஒப்பந்த ஆகுசெலவுகள் அவை தொடர்புபடுகின்ற பணி செயலாற்றப்படுகின்ற கணக்கீட்டுக் காலங்களின் போது வழமையாக இனங்காணப்படுகின்றன.

e) வட்டி வருமானம்

வட்டி வருமானம் ஒரு அட்டுறு அடிப்படையில் இனங்காணப்படுகின்றது.

f) பங்குலாப வருமானம்

பங்குலாப வருமானம் அந்த வருமானத்தைப் பெறுவதற்கான உரிமை உறுதிப்படுத்தப்படுகின்ற போது இனங்காணப்படுகின்றது.

முழு உரித்துக் காணிகளின் ஆகுசெலவைப் பதிவழிக்கும் பொருட்டு தேய்மான ஏற்பாடு மேற்கொள்ளப்படுவதில்லை.

ஒரு சொத்தின் தேய்மானம் அது பாவனைக்காகக் கிடைக்கின்ற போது ஆரம்பமாகி அந்த சொத்து இனங்காணப்படாது விட்டுவிடப்படுகின்ற போது முடிவடையும்.

g) ஏனைய வருமானம்

ஏனைய வருமானம் ஒரு அட்டுறு அடிப்படையில் இனங்காணப்படுகின்றது.

2.6 பற்று ஆகுசெலவு

எதிர்பார்க்கப்பட்டுள்ள பாவனைக்காக அல்லது விற்பனைக்காக தயாராகுவதற்கு கணிசமான காலத்தை எடுக்கின்ற ஒரு சொத்தின் உற்பத்திற்கு அல்லது நிர்மாணத்திற்கு அல்லது கொள்வனவுக்கு நேரடியாக சேரடிக் கூடிய பற்று ஆகுசெலவுகள் அந்த சொத்தினது ஆகுசெலவின் பாகமாக மூலதனமாக்கப்படுகின்றன. ஏனைய சகல பற்று ஆகுசெலவுகளும் அவை ஏற்படும் காலப் பகுதியில் செலவு செய்யப்படுகின்றன. ஒரு நிறுவனம் நிதிகளை கடனாக பெறுவது தொடர்பாக செலவாகும் வட்டியும், ஏற்படும் ஏனைய ஆகுசெலவுகளும் பற்று ஆகுசெலவுகளில் உள்ளடங்குகின்றன.

2.7 அதிவிஷேட விடயங்கள்

பொருத்தமான சகல விபரங்களும் கணக்குகளுக்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

